இலவச வெளியீடு: GERMANY , ENGLAND சித்திரை.April. 2016

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 66

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A


Orientalische Textilien & Schmuck



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும்
தொடர் மலிவு விற்பனை!
விபரம் பக்கம் 10
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க நகைமாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

## வன்புணர்வு! போரின் ஒரு ஆயுதமாகப் பாவிக்கப்படுகின்றது!

## கோப்பிச் சக்கையில் கோப்பிக் கப்



தாழ்வு மனப்பான்மை,
வாழ்வு தராது
சேவியர்

இனிய
தமிழ் புத்தாண்டு
வாழ்த்துக்கள்




உள்ளே...
விபரம்!



கலாசூரி
திவ்யாவின்
பரதத் தொடர்....

## நின்னைச் சரணடைந்தேன்

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
விபரம் பக்கம் 09

கனின் எலக்ரோனிக்ஸ்
சகல Alarmanlage, Überwachung
Kamera, பொருத்துதல்..
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 24

டோட்மூண்ட் நகரில் எட்டாவது ஆண்டில் எமது சேவை!
Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
Vetti+1

Frankfurt:Tel:069 97 693 374
SARAVANAA BHAVAN

Lucky Fly
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696

S.K.Silks & Gold Paraadise



மாபெரும்
ராஜமுத்திரை

சித்திரை தமிழ் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
12.03.2016 முதல் -16.04.2016 வரை
ஒரு சாறி வாங்கினால் 2 சாறி இலவசம்
ஒரு பஞ்சாபி வாங்கினால் 2 இலவசம்
50€ விற்கு 2 சாறி
கவரிங் நகைகள் 30% இருந்து 50% வரை விலைக்கழிவு
அனைத்து ஆடைகளும் 25% முதல் 75 % வரை விலைக்கழிவு
Adler str 33 - 44137 Dortmund

என்றும்
புதியது
அழகின்
இரகசியம்
அது.

Mr.P.Sritharan.
Proprietor

Tel:0231



மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




Tel.: 0201/236925

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN

# யேர்மனியில் கோப்பிச் சக்கையில் கோப்பிக் கப் உலகம் மாசுபடுத்தலைத் தடுக்கும் யுத்தி!

உலகை மாசுபடுத்தாமல் காப்பதில் அன்று முன்னோடி களாக இருந்தவர்கள் நாம். உண்ணும் உணவைப் பொலித்தின் பைகளில் சுமக்கவில்லை.



ஓலைக் கடகத்திலும், கறிகளை மண்சட்டியிலும், வைத்துச் சுமந்தோம். உணவினை பிளாஸ்டிக் தட்டுகளில் பரிமாறவில்லை, மாறாக வாழையிலையில் பரிமாறினோம். பூவரசம் இலையில் குழைத்த உணவை வைத்து உண்டு மகிழ்ந்தோம். கூழ் என்றால் என்ன, கஞ்சி என்றால் என்ன, சிரட்டையிலும், பிலாவிலையிலும் ஊற்றிக் கூடிக் குடித்து மகிழ்ந்தோம்.

இப்போ! தாயகத்தில் வெள்ளித்தட்டில் உணவு தருகிறார்கள். ஆனால், அதன் மேல் ஒரு பொலித்தின் விரிப்பு இருக்கும். அது ஏன் என்றால்! கழுவுதற்கு இலகுவாம், சாப்பிட்டதும் தூக்கி எறிந்துவிட்டால் வேலை இல்லை!




ஏன் மது அருந்தி நிலைகெட்டுத் தடுமாறுபவர்கையில், அங்கு பிளாஸ்ரிக் போத்தலைக் கொடுத்தால், அவர் களுடன் உலகுமல்லவா மாசடையும். அன்று ஓலையில் தயாரித்த பிளா, ஆளை மாசு படுத்தினாலும், அகிலத் தை தூய்மையாகவே வைத்திருந்தது.

இப்படி அன்று உலகை மாசுபடுத்தாத நமது பழக்க வழக்கங்களை மாற்றியவர்கள் மேல்நாட்டவர்கள். அவர்கள் கண்டுபிடித்து காசு ஆக்கியவைதான் இந்த மாசுகள்.

இன்று அதே மேற்குலகம் சிந்திகத்தொடங்கி, எமக்கு முன் உதாரணமாக திழ்வதுபோல் காட்டப் புறப்பட்டு விட்டது.

**எமது கையில் அன்று இருந்த....**

ஓலை பை, துணிப்பை, சாக்குப்பை, யாவும் மாறி சொப்பிங் பாக் (பொலித்தின்) ஆக மாறிவிட.

மேற்கு நாட்டவர்கள் கடைகளில் சொப்பிங் பாக் இலவசமாகக் கொடுப்பதை நிறுத்திக் காசாக்க, எமது அன்றைய ஓலை பை, துணிப்பை, சாக்குப்பை, யாவும் அவர்களது கைக்குச் சென்றுவிட்டது.

கோப்பிக் கடையில் கோப்பி குடித்துவிட்டு எறியும் பிளாஸ்டிக் கோப்பைகள் கோடிக்கணக்கில் உலகை மாசுபடுத்துகின்றன. இவற்றைத் தடுக்க் யேர்மனியில் பேர்லின் நகரில் ஒரு புதிய கண்டுபிடிப்பு உருவாக்கி வெற்றி பெற்றுள்ளனர்.



நாம் மண்ணில் மண்பாண்டங்களை உருவாக்குவது போல், வடித்த கோப்பிச் சக்கையில், இருந்து கோப்பை களை (Coffee Cups) உருவாக்கி உள்ளனர். இதன் மூலம் வருடத்தில் கோடிக்கணக்கான பிளாஸ்டிக் கோப்பைகளின் குப்பைகளைக் குறைக்க முடிகிறதாம்.

யேர்மனி உலகை, மாசுபடுத்தும் பொலித்தீன்,பிளாஸ்டிக் பாவனைகளைக் குறைக்க முயல. சீனாவோ ஏன் அப்படி! மாற்றி யோசி!! என்கிறது.!!

ஆம் அந்த பொலித்தீன் மண்ணுக்குள் உக்கிப்போதற்கு ஒரு பக்ரீரியாவைக் கண்டுபிடித்துள்ளதாம். அந்த பக்ரீரியாவை வளர்த்து, மண்ணில் போட்டால் அந்த பொலீத்தின் இலகுவாக உக்கி மண்ணோடு மண்ணாகிவிடும், என்கிறது சீனா. ஆனால் அதன் பக்க விளைவுகள் என்ன என்பது பற்றி எந்தப் பக்கத்திலும் செய்தி இல்லை.!

வட்டிகளின் சுமைகள் இனி உங்களுக்கு வேண்டாம்.

நீங்கள் 50.000€ வை 1.99வீத வட்டிக்கு எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

அதாவது 1000€ வுக்கு மாத வட்டி 1.65€ ஆகும்

மேலும் விரிவான விவரங்களுக்கு இலவசமாக எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்!



SEFA24
Tel: 0231 546 015 20
info@sefa24.de
Rheinische Str. 85
44137 Dortmund

வெற்றிமணி விளம்பரத் தொடர்புகளுக்கு யேர்மனி
Tel: 02351/45 88 62
0163 199 2 333
e-mail: vettimaniy@hotmail.com
UK. Sanje:(0044) 07824 61 83 83
vai g (0044) 00 44 7788 195962



**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 235



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் **மு.க.சுப்பிரமணியம்**

(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

"ஓவியக்கலைவேள்"

கலாநிதி

**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276


**"வெற்றிமணிமொழி"**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

**Vettimaniy Ltd**
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962


# வன்புணர்வு! போரின் ஒரு ஆயுதமாகப் பாவிக்கப்படுகின்றது!

**வடக்கு முதல்வர்**
**சி.வி.விக்னேஸ்வரன்**

வன்புணர்வானது போரின் ஆயுதமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது. என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பெண்களின் குரல் எனும் அமைப்பினால் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் சென்றமாதம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



மகளிர் தினத்தை நாங்கள் கொண்டாடுவதற்குப் பல நல்ல காரணங்கள் உள்ளன. இன்று பெண்கள் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் ரீதியாகப் பெரும் பங்கு ஆற்றி வருகின்றார்கள். அவர்களின் வெற்றியை வெளியிடுமுகமாகக் கொண்டாட்டம் நடத்தலாம். கூட்டங்கள் கூட்டலாம். எனினும் பெண்கள் பலரின் ஆதங்கம் பால் ரீதியான சமநிலை தங்களுக்குக் கிடைக்கவில்லை என்பதே.

உலகப் பொருளாதார பொதுமன்றமானது 2014ஆம் ஆண்டில் ஒரு கருத்தை வெளியிட்டது. அதாவது உலக ரீதியாகப் பால் சமநிலை பெற இன்னும் 80 வருடங்கள் ஆகும் என்றார்கள். ஆகவே பாரம்பரியமாக நாங்கள் சிந்தித்து வந்த விதத்தை அத்தனை இலேசாக மாற்றிவிட முடியாது. பாரம்பரியம், மதப் பழக்கவழக்கங்கள், ஆண்பாலரின் தப்பெண்ணம் என்று பல காரணங்கள் பால் சமநிலைக்கு இடையூறாக இருந்து வருகின்றன.

சாதி சம்பந்தமாகச் சிலருக்கு இருக்கும் வன் எண்ணங்களுக்கு ஒப்பானதே பெண்களுக்கெதிரான தப்பெண்ணங்கள். ஆனால் நாங்கள் ஒன்றை மனதில் நன்றாகப் பதியவைக்க வேண்டும். வன் எண்ணங்கள் வன் எண்ணங்களையே அறுவடை செய்வன. மென் எண்ணங்கள் மென்மையான எதிர்வினைகளையே வரவழைப்பன. எனவே பெண்கள் மீதான வன் எண்ணங்களை இனியாவது களைவது சமுதாயத்திற்கு நன்மை பயக்கும்.

ஆனால் பெண்களுக்கும் சில வேளைகளில் பால் சமநிலை என்ற சொற்றொடரின் அர்த்தம் புரிவதில்லை. அதாவது ஆணும் பெண்ணும் சமம் என்பதல்ல குறித்த சொற்றொடரின் விளக்கம். ஆண்களும் பெண்களும் சம உரித்துக்களைப் பெற வேண்டும் என்பதே பால் சமநிலையாகும். ஆணும் பெண்ணும் சமம் என்று எவரும் கூற முடியாது. பெண்கள் அடுத்த வாரிசைப் பெற்றுத் தருகின்றார்கள். ஆண்களால் முடியுமா? ஆகவே சட்டப்படி சம உரித்துக்களைப் பெறுவதே பால் சமநிலை.

இலங்கையைப் பொறுத்த வரையில் நவீன முறையிலான கல்வி நடவடிக்கைகளில் ஆண்கள் கடந்த 200 ஆண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் பெண்களோ 100 ஆண்டுகளுக்கும் குறைவான காலப்பகுதியிலேயே கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள போதிலும் ஆண்களுக்குச் சமனாக அல்லது ஒரு படி மேலாக அனைத்து அரச சேவைகள் மற்றும் கல்விச் சேவைகளில் உயர்பீடங்களில் அமர்ந்திருப்பதை நாம் அவதானிக்கின்றோம்.

பெண்கள் கல்வி கற்கத் தடை, ஏனைய ஆடவர்கள் முன் பெண்கள் அளவளாவத் தடை, பெண்கள் வேலைக்குப் போகத்தடை என்று பல தடைகள் ஒரு காலத்தில் போடப்பட்டிருந்தன. ஆனால் இன்று நிலைமைகள் எவ்வளவோ முன்னேற்றகரமாக மாறிவிட்டன. சம உரிமைகள் தரப்பட்டால் தம்மால் முடியாததொன்றில்லை என்பதைப் புரியவைத்து வருகின்றனர் பெண்கள். அவற்றை வழங்குவது காலத்தின் கட்டாயமாகும்.

எனினும் போர் நடக்கும் இடங்களில், போர் நடந்து முடிந்த வலயங்களில் பெண்கள் பாடு மிக மோசமாக அமைந்திருப்பதையும் நாங்கள் மறந்து விடக் கூடாது. போர்க்காலப் பாதிப்பு பெண்களுக்கே மிகக் கொடூரமாக அமைகின்றது.

அதேநேரம் சமாதான சூழலை ஏற்படுத்த முன்னிற்பவர்களும் பெண்கள்தான். இன்று போரானது, அதன் தாற்பரியமானது முற்றாகவே மாறிவிட்டது. கிராமங்களே போரின் உக்கிரத்தைத் தாங்க வேண்டிய இடங்களாக மாறியுள்ளன.

அது மட்டுமல்லாமல் போரில் மடிந்து போகின்றவர்கள் போர்வீரர்களே என்பதிலும் பார்க்க சாதாரண குடிமக்களேயாவார். அவர்களுள் பெரும்பான்மையினர் பெண்கள்.

**தொடர்ச்சி 7ம் பக்கம்**




# 2016 20 ஆவது ஆண்டில் புதினம் PUTHINAM
A Freely Circulated Monthly

## உலகளாவிய சிறுகதைப் போட்டி

ரூபா 1 லட்சம் பரிசுத் தொகை

எழுதி அனுப்ப வேண்டிய கடைசி நாள் : 1-6-2016

லண்டன் வாழ் தமிழ் மக்களின் அபிமானப் பத்திரிகையான 'புதினம்' 2016ஆம் ஆண்டு, தனது 20ஆவது ஆண்டில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. இதனைக் குறிக்கும் முகமாக 'உலகளாவிய சிறுகதைப் போட்டி' ஒன்றை நடத்தி, தேர்ந்தெடுக்கப்படும் சிறுகதைகளுக்கு ஒரு லட்சம் ரூபா ரொக்கப் பரிசுகள் வழங்கப்படவுள்ளது. முதல் மூன்று சிறுகதைகளுக்கும், மேலும் பத்து சிறுகதைகளுக்கும் இந்தப் பரிசுகள் வழங்கப்படும்.

### விதிகள்:

1. சிறுகதையின் பொருள் இலங்கை மக்களின் வாழ்வியல் பற்றியதாக இருக்க வேண்டும்.
2. சிறுகதை இதுவரை எந்தப் பத்திரிகையிலோ, நூலிலோ வெளிவராத கதையாகவும், ஏற்கனவே பிரசுரமான ஒரு கதையின் தழுவலாக இல்லாமலும், முழுக்க, முழுக்க எழுத்தாளரின் மூல முயற்சியாக இருக்க வேண்டும்.
3. சிறுகதை A-4 அளவு காகிதத்தில் கையெழுத்துப் பிரதியானால், பத்து முதல் பன்னிரண்டு பக்கங்கள் வரை தமிழ் மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
4. போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகளைத் திருப்பி அனுப்ப முடியாதாகையால், அவற்றின் போட்டோ பிரதியை (Xerox-Photocopy) எடுத்து வைத்துக் கொள்வது எழுத்தாளரின் பொறுப்பாகும்.
5. சிறுகதையோடு இணைக்கப்படும் கடிதத்தில், 'இக் குறுநாவல் முழுக்க முழுக்க எனது கற்பனையில் உருவானது என்றும், ஏற்கனவே வெளிவந்த ஒரு கதையைத் தழுவியது அல்ல' என்ற உறுதிமொழியைக் கொடுத்து எழுத்தாளர் கையொப்பமிட வேண்டும்.
6. உலகின் எந்த நாட்டிலிருந்தும் எழுத்தாளர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
7. வருகிற 01-06-2016க்கு முன்னர் 'புதினம்' ஆசிரியரிடம் பிரதிகள் வந்து சேரவேண்டும்.
8. புதினம் பத்திரிகை ஒழுங்கு செய்யும் நடுவர்கள், சிறுகதைகளைப் பரிசீலனை செய்து, சிறந்த முதல் மூன்று சிறுகதைகளையும், ஆறுதல் பரிசுகள் வழங்குவதற்காக பத்து சிறுகதைகளையும் தெரிவு செய்வார்கள்.
9. புத்தகமாகப் பிரசுரிக்கும் முதலாம் பதிப்பின் உரிமை மட்டும் 'புதினம்' பத்திரிகைக்கு உரியது.
10. இப்போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களுக்கும் 'புதினம்' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

– ஆசிரியர், 'புதினம்'

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

Editor, 'Puthinam'
38, MOFFAT ROAD, LONDON SW 17 7EZ, U.K.

## வெற்றிமணி T.BB இணைந்து வழங்கும் புத்தாண்டுப் பரிசு




சித்திரை மாதம் சில வெற்றிமணி இதழ்களுடன் சீடிக்கள் இணைக்கப்பட்டுள்ளன (பக்கம் 17இல்) கிடைக்கப் பெறாதவர்கள்
www.tbbstars.com
இணையத்தளத்திற்குச் சென்று பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.




தென்னிந்திய பிரபல திரைப்படப் பாடகி மாதங்கி

## தாயெனும் கோயில்

### உலகளாவிய மற்றொரு போட்டி



அமரர் சின்னத்தங்கம் இரத்தினம் நினைவாக

ரூபா 1 லட்சம் பரிசுத் தொகை

எழுதி அனுப்ப வேண்டிய கடைசி நாள் : 1-6-2016

உங்கள் நெஞ்சைத் தொட்ட தாயின் ஒரு நினைவை கையெழுத்துப் பிரதியானால் A-4 அளவு காகிதத்தில் மூன்று முதல் நான்கு பக்கங்களுக்குள் தமிழில் எழுதி அனுப்ப வேண்டும். உலகத்தின் எந்த நாட்டில் இருந்தாலும், இப்போட்டியில் பங்கு பற்றலாம். நடுவர்கள் பரிசீலனை செய்து, சிறந்த ஆக்கங்களைத் தெரிவு செய்வார்கள்.

தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் புத்தகமாக வெளிவரும்.

இப்போட்டித் தொடர்பான எல்லா விஷயங்களுக்கும் 'புதினம்' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.




## லூர்ட்ஸ் மாதா – போத்துக்கல் பார்த்திமா

March, April, july, Aug , மாதங்களில் **புனிதப்பயணம்**

எம்மக்களின்
வேண்டுகோளுக்கிணங்க
லூர்ட்ஸ் மாதா கோவில்
மற்றும்
போத்துக்கல் பாத்திமாகோவில்
இவற்றிற்கு பஸ்மூலம் செல்ல
ஒழுங்கு செய்துள்ளோம்.

போத்துக்கல்–(பார்த்திமா )

லூர்ட்ஸ் மாதா கோவில்

உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

K.முருகா : 02972 7754 Handy: 0175 850 14 89

இளங்கலைஞர்களை ஊக்குவிப்பதனால் கலையை வளர்க்க முடியும்



# நாட்டியம் கற்கும் ஆண்களுக்கு பெண்களின் பாவனை தொற்றிக் கொள்வதாகக் கூறுகிறார்களே அது உண்மையா?

**கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா.**
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நடனப்பிரிவின் முன்னாள் தலைவர்)

**பங்குனி மாத இதழின் தொடர்ச்சி**







பரதம் வேறு என்ன பலன்களைக் கொடுக்கிறது ?

சகல உடலுறுப்புகளுக்கும் பயற்சியைக் கொடுக்கின்றது. உள்ளத் தூய்மையையும் மன நிம்மதியையும் கொடுக்கிறது. மனதை ஒரு நிலைப்படுத்தி யோகநிலைக்கு ஈடான தியானப்பயிற்சியை வழங்குகின்றது. ஆன்மீக நாட்டம் கொள்ள வைக்கின்றது. உடலழகு உள்ளத்தழகு ஆத்மதிருப்தி என்பவற்றைக் கொடுக்கிறது. நாட்டியத்தில் ஒன்றித்து உலக பந்தம் நீங்கி கற்பனா உலகில் இறை அனுபவங்களில் ஆழ்ந்து அரங்கிலிருப்பவர்களையும் அந்நிலையை அனுபவிக்க வழி செய்கிறது. ஞானிகள் புலனடக்கி ஆற்றும் அருந்தவத்திற்கொப்பான ஆத்மீக பலத்தை கொடுக்கிறது. அகத்தில் அனுபவித்த இறையனுபவம் முகத்தில் தெய்வீகக் களையாக வெளிப்படும். நல்ல நல்ல கருத்துக்களையும் செய்திகளையும் பார்வையாளர்களிடம் நாட்டியத்தின் மூலம் வெளிப்படுத்த முடியும்.

நம் கலாச்சாரத்தில் முக்கிய செல்வாக்குச் செலுத்தும் நடனக்கலையை தக்கவைத்துக் கொள்வதற்கு என்ன செய்யலாம் ?

மக்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இளம் சமூகத்தினரிடம் ஏற்பட்டுள்ள நிரந்தரமற்ற போலி நாட்டங்களிலிருந்து அவர்களை விடுபடச் செய்ய வேண்டும். எமது பாரம்பரிய நடனத்தின் பெருமையை உணர்த்த வேண்டும்.

தனிப்பட்ட கலைஞர்களும் முழு ஈடுபாட்டுடன் இக்கைங்கரியத்தில் செயல்பட வேண்டும். நாட்டியக்கலை ஒருபோதும் அழிவடையாது. ஏனெனில் அது ஓர் உடல் அசைவுவழி வெளிப்படுத்தப்படும் மொழி. உணர்வுகளை உணர்த்தும் ஊடகம். சமயம் சார்ந்து ஆன்மீக வெளிப்பாடு நிறைந்த கலையாதலால் அவை அழிவுறலாம் என்று அஞ்சத் தேவையில்லை.

எல்லாத்தரப்பு மக்களையும் ஒருங்கிணைத்து ஒத்திசைவு அடையச் செய்யும் கைங்கரியத்தை ,க்கலைகளினால் தான் சாதிக்க முடியும். இறைவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து இறைவனுக்கு அர்ப்பணமாக ஆடல் ஆற்றுகை செய்வதே எமது பண்பாடு. இதனால்தான் சைவர்கள் இறைவனையே ஆடல் வல்லானாக நடராஜப் பெருமானாக போற்றி வழிபடுகிறார்கள்.

பார்வையாளர்களைக் கவரும் வகையில் ஆரோக்கியமான நடனத்தை வழங்குவதில் ஏதேனும் சிரமங்கள் உண்டா ?

இறை நம்பிக்கை, ஆடற்கலை மீதான அளவு கடந்த ஈடுபாடு, ஆடல் ஆற்றுகை அனுபவ ஞானம் என்பவற்றுடன் செய்யப்படும் நடனஉருப்படியில் தனைமறந்து நர்த்தனம் புரிந்தால் பார்வையாளர்களைக் கவர்வதில் சிரமங்கள் கிடையாது. இறை வணக்கம், குரு வணக்கம், அரங்க பூஜை, சபையோர் வணக்கம் என்பனவெல்லாம் நர்த்தகி தன்னைத் திடப்படுத்தி சகல தடைகளையும் களைவதற்கான உளவியல் செயற்பாடுகளேயாம். எந்தவொரு நடன நிகழ்வையும் ஆரோக்கியமானதாகவும், பார்வையாளர்களை கவரும் விதத்திலும் வழங்குதல் வேண்டும். நாம் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டால் எந்தத்தடையையும் தகர்த்தெறிந்து சாதிக்க முடியும்.

தொடர்ச்சி vetti +3




முற்பதிவுக்கு முந்துங்கள்
Bochum, Essen, Dortmund
Lucky Fly Reisebüro
2016 ஆம் ஆண்டு கோடைகால விடுமுறையைக் கோலாகாலமாகக் கொண்டாட
Bochum, Essen, Dortmund ஆகிய நகரங்களை உள்ளடக்கிய
Lucky Fly Reisebüro வழங்கும் சிறப்பு விலை
Summer holiday offers
2016
TICKETS ON SALE NOW
Tel: 0234-2399032
FaX 0234-79457171
Essen நகரில்...
Helmholtz Str.07
45143 Essen
Tel: 0201-80093764
Fax: 0201-80093749
துரித பணமாற்றுச் சேவை!!!
WESTERN UNION WU moving money for better
MoneyGram
www.Lucky-fly.de
Email: info@lucky-fly.de
Allee Str.38-40a
44793 Bochum
Graphic Design Vettimaniy Ltd
அனைவருக்கும் எங்கள்
இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
e.mail:siva 0108 @hotmail.com
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
Rheinische Str 64
44137 DORTMUND
0179 14 84 892
Tel:0234 23 990 32

# பாரம்பரியத் தொழில்கள்

## யாழ்ப்பாணப் பண்பாடு
# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா




யாழ்ப்பாணப் பிரதேசத்திலே நீண்டகாலமாக நிலவி வந்த பல தொழில்கள் இன்று மறைந்துவிட்டன. சில தொழில்களை நாம் மறந்து விட்டோம் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" என்ற நூற்பாவே மறைந்த தொழில்களை எண்ணும் பொழுது நினைவுக்கு வருகின்றது.

காலதேச வர்த்தமானம், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி, கல்வி, சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் முதலான காரணிகள் பாரம்பரியத் தொழில்கள் மறையக் காரணம் எனலாம். யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து மறைந்த தொழில்களை இரண்டு வகையிலே நோக்கலாம்.

ஒன்று : வீடு சார்ந்த தொழில்கள்
இரண்டு : வெளி சார்ந்த தொழில்கள்
வீடுசார்ந்த தொழில்கள்
வீடு சார்ந்த தொழில்கள் என்னும்போது வீட்டின் அமைப்பு, கட்டிடக்கலை நுட்பம் முதலியவை பற்றி இங்கு குறிப்பிடவில்லை. அவை பற்றி ஏலவே இந்த நூலிற் குறிப்பிட்டிருக்கின்றோம்.

தட்டி கட்டுதல்

மண் வீடுகளில் மறைப்புக்காகவும் பாதுகாப்புக்காகவும் அழகான "தட்டிகள்" கட்டுவார்கள். தென்னோலையாலும் வடலிமட்டையாலும் பல்வேறு வகையாகக் கட்டப்படும் தட்டி கட்டும் தொழில் இன்று முற்றாகவே மறைந்துவிட்டது எனலாம். சிற்சில கிராமங்களிலே மிகச் சிறிய அளவில் (ஒரே தன்மைத் தான) தட்டிகள் மிக அருந்தலாகப் பயன்படுத்தப்படுவதும் உண்டு. அக்காலத்திலே கட்டப்பட்ட தட்டிகளில் பலவித அழகியல் நோக்கையும் அவதானிக்கலாம். பச்சைத் தென்னோலைஇ பழுத்த தென்னோலை இவை இரண்டையும் கலந்து அழகாகவும் பலமாகவும் கட்டப்பட்ட தட்டிகளை இன்று காணவே முடியாது. பலவகையான அழகான தட்டிகளைக் கட்டிப் பயன்படுத்தும் வழக்கம் இன்று முற்றாகவே மறைந்துவிட்டது. இதனாலே தட்டி கட்டும் தொழிலையும் நாம் மறந்து விட்டோம்.

கிடுகு வேயுதல்

இவ்வாறே மண் வீடுகளைப் பனையோலையாலும் கிடுகாலும் (பன்னாங்கு) வேயும் தொழிலும் இருந்தது. பெரும்பாலானவர்களுக்கு வீடு வேயத் தெரியும். பனையோலையால் வேய்வது ஒரு விதம்இ கிடுகினால் வேய்வது வேறொருவிதம். கிடுகினால் வேயும் வழக்கம் ஓரளவுக்கு இன்றும் இருக்கின்றது. பனையோலையால் வீடு வேயும் வழக்கம் மிகமிக அருகி விட்டது. பனையோலையால் வீடு வேயத் தெரிந்தவர்கள் மிகமிகக் குறை வாகவே காணப்படுகின்றனர். பனையோலை வேய்தல் என்ற தொழில் நுட்பத்தையே நாம் மறந்துவிட்டோம்.

செத்தை அடைத்தல்

தட்டி கட்டுதல் போலச் "செத்தை" அடைத்தல் (கிடுகினால் அடைக்கும் வேலி ) என்னும் தொழிலும் இன்று மறைந்து விட்டது. பல்வேறு வகையாக அடைக்கும் வேலிகள், பனைமட்டை வேலி, அலம்பல் வேலி, கிடுகு வேலி முதலானவற்றைச் செய்யும் தொழிலாளர்களும் அருகிவிட்டனர். வேலி அடைப்பதில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் பலர் யாழ்ப்பாணத்திலே இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வீடுமெழுகுதல்

வீடு மெழுகுதல் சாணியால் மெழுகுதல்இ களிமண்ணால் மெழுகுதல் என இருவகைப்படும். இன்றும் கிராமங்களில் சிற்சில இடங்களில் இப்பணி நடைபெறுகின்றது. பெரும்பாலும் பெண்களே வீடு மெழுகுவர். இப்பொழுது வீடுமெழுகக் கூடிய பெண்களைக் காண்பது கடினம். வீட்டுச்சுவர்இ திண்ணை முதலியவற்றை அழுத்தி அழகாக மெழுகுவதற்கு பற்றியின் (Bettery) கரியையும் முள்முருக்கமிலைச் சாற்றினையும் கலந்து அழுத்தி மெழுகினாற் சீமெந்து பூசியதுபோல அழகாகவும் வழுவழுப்பாகவும் இருக்கும். இந்தத் தொழில்முறை இப்போது முற்றாக மறைந்து விட்டது எனலாம்.

குற்றுதல், இடித்தல்

வீடுசார்ந்த தொழில்களிலே நெல்லு, சாமை, தினை, வரகு முதலான தானியங்களைப் பெண்கள் உரலிலே இட்டுக் குற்றுவார்கள். குற்றுதல், இடித்தல் முதலான சொற்கள் பொருள் மரபில் வெவ்வேறு அர்த்தத்தை உணர்த்துவன. (நெல் குற்றுதல், மா, ஒடியல் இடித்தல்.) "கண்ணமிடிப்பார்தம் சுவைமிகுந்த பாடலிலும்" எனப் பாரதி குறிப்பிடுவது இவ்விடத்திலே நினைவுகூரத்தக்கது. குற்றும்பொழுது பெண்கள் பாடும் ஒருவகைப்பாடலும் நாட்டார் பாடல்களிலே உண்டு. தமிழ் மக்களின் வாழ்வியலிலே தொழில்களோடு கூடி ஒரு இலக்கிய வகையும் வளர்ந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.




## உரல், உலக்கை, அம்மி, ஆட்டுக்கல், திருகை

யாழ்ப்பாணத்திலே தோன்றிய செந்நெறி இலக்கியங்களிலும் மா இடித்தல், நெல்லுக் குற்றுதல் முதலான தொழில்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. உதாரணமாக நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் ஆடிப்பிறப்பிலே "மாவைப் பதமாய் இடித்துத் தெள்ளி" என வருவதைக் குறிப்பிடலாம். பெண்கள் செய்யும் தொழில்களோடு தொடர்புடைய உரல், உலக்கை, அம்மி, ஆட்டுக்கல், திருகை முதலான பொருள்சாரபண்பாடுகள் பற்றி ஏலவே பதிவு செய்துள்ளோம். வீட்டிலே பெண்கள் செய்யும் வேலைகளைத் தொழிலாகக் கருதும் பண்பாடு இருக்கவில்லை. அது அவர்களின் கடமை என்றே கருதப்பட்டது.

இன்று இயந்திரப் பண்பாட்டினால் குற்றுதல், இடித்தல், அரைத்தல் முதலியன மிகவும் இலகுவான வேலைகள் ஆயிற்று. எமது பண்பாட்டில் இப்படியும் இருந்தது என்பதைப் பதிவுசெய்ய வேண்டுமென்பதே எமது நோக்கமாகும்.

வீடுசாராத் தொழில்கள்

தொடர்ச்சி 06 ம் பக்கம்...




Lakshmi Jewellery &Silks
தரமான தங்க நகைகள்
மற்றும்
பட்டுப்புடவைகள் பாட்டிசாரிகள் இன்னும் பஞ்சாபிகள்
அனைத்தும் கிடைக்கும்
பசுமையான மரக்கறிவகைகளும்
கடலுணவுப்பொருட்களும்
இவற்றுடன் பலசரக்குப் பொருட்களையும்
எம்மிடம்
மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்
Asia super markt

Tel:0521 4283 510
தொலைபேசி: Ruban 0179 72 35 729


5ம் பக்கத் தொடர்ச்சி

## மறந்தவையும் மறைந்தவையும்



பாரம்பரியத் தொழில்கள்

வீடுசாராத் தொழில்கள்

துலாவால் இறைத்தல்.

வீடுசாராத் தொழில்களில் விவசாயம் சார்ந்த தொழில்களே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணப் பிரதேசத்திலே மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் "சூத்திரக்கிணற்று" நீர்ப்பாசனம் இன்று முற்றாகவே மறைந்துவிட்டது. "சூத்திரக்கிணற்றடி" என்று அழைக்கும் வழக்கம் இன்றும் சில இடங்களில் உண்டு. நீர் இறைக்கும் இயந்திரத்தில் இருந்து வெளியேறும் நீரளவு சூத்திர இறைப்பாலும் பெறப்படும் என்று கூறுகின்றனர்.



தண்ணீர் இறைக்கும் முறைகளிலே "துலா" வால் இறைத்தலும் முக்கியமானதாகும். ஒருவர் துலாவிலே "துலாக்கொடி" பிடிக்க மற்றவர் துலாமிதிப்பர். யாழ்ப்பாணப் பிரதேசத்துப் பெரும்பாலான பகுதிகளிலே துலா இறைப்பே மிக அண்மைக்காலம் வரை இருந்தது. துலா மிதித்தலைத் "துலா ஓடுதல்" என்று கூறும் வழக்காறும் உண்டு. இன்று இத்தொழில் முற்றாக மறைந்துவிட்டது. துலா இறைப்புக்குப் பயன்படுத்தப்படும் பீலிப்பட்டைஇ துலாக்கயிறுஇ பட்டைக்கல்லு முதலியனவும் முற்றாக மறைந்து விட்டன. தோட்டப்பயிர்ச் செய்கையிலே துலா இறைப்புப் பெற்ற இடத்தினை இன்று நீரிறைக்கும் இயந்திரங்கள்இ மின்சாரமோட்டார்கள் பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

நெல்வயல் தொடர்பான வேலைகள்.

யாழ்ப்பாணப் பிரதேசத்திலே நெல் வயல்கள் பெருமளவுக்கு இல்லா விட்டாலும் ஓரளவுக்கு நெற்பயிர்ச் செய்கையும் இடம்பெற்றது. அருவி வெட்டுதல்இ சூடு மிதித்தல் முதலியன மனிதவலுவைப் பயன்படுத்தியே செய்யப்பட்டன. குறிப்பாகச் சூடடித்தல்இ சூடு மிதித்தல் என இரண்டு வகையிலே அழைக்கப்பட்ட சூடுமிதித்தலுக்கு மாடுகள் பயன்படுத்தப்பட்டன. இ.்.து எல்லாப் பிரதேசங்களுக்கும் பொதுவானது என்பதையும் மனங்கொள்ள வேண்டும்.

மாடுகளைப் பிணைத்துச் சூடு மிதிப்பதற்கு முன்னர் தலையடி என நெல்லைக் (உப்பட்டி என்பர்) கட்டி எடுத்து ஓங்கி அடிப்பர். தலையடி முடிந்த பின்னரே மாடுகளைப் பிணைத்துச் சூடு மிதிப்பர். இப்பொழுது அறுவடை இயந்திரம்இ சூடு மிதிக்கும் இயந்திரம் (உழவு இயந்திரம்) என்பன பயன்படுத்தப்படுவதனால் இந்தத்தொழில்கள் மறைந்துவிட்டன. சில இடங்களில் இத்தொழில்கள் நடைபெறுகின்ற போதிலும் நாளடைவிலே அவையும் மெல்லமெல்ல மறைந்துவிடும் எனலாம்.

நெல்அறுவடையுடன் தொடர்புடைய இன்னொரு தொழில் "நெல் அளத்தல் " ஆகும். நெல்அளப்பதற்குப் புசல், பறை, கொத்து முதலிய அளவு கருவிகள் பயன்படுத்தப்படும். நெல்லளக்கும் வேலையிலே சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களும் யாழ்ப்பாணத்திலே இருந்தனர். இவர்கள் யாழ்ப்பாணம் தவிர்ந்த இடங்களுக்கும் நெல் அளப்பதற்காகச் செல்வதுண்டு. இன்று இத்தொழில் முற்றாக மறைந்துவிட்டது.

கப்பல் கட்டுதல்




யாழ்ப்பாணப் பிரதேசத்தில் நிலவிய கப்பல்கட்டும் தொழிலும் இன்று மறைந்துவிட்டது. யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்ட "அன்னபூரணி" என்ற கப்பல் அமெரிக்கா சென்றமை இன்று பழங்கதையாகிவிட்டது.

யாழ்ப்பாணத்திலே பலவகையான பாரம்பரியத்தொழில்கள் இருந்தன. வெள்வேறு சந்தர்ப்பங்களில் அவைபற்றிக் குறிப்பிட்டமையால் இங்கு விரிவாகக் குறிப்பிடாது விடுத்தோம். மரவேலை, இரும்புவேலை, மட்பாண்ட வேலை, குடிசைக் கைத்தொழில்கள், பந்தல்கள் அமைத்தல் முதலானவை பற்றி இன்னும் விரிவாக ஆராயவேண்டும். எமது சமூக மாற்றம் காரணமாக நவீனத்துவத்தின் செயற்பாட்டோடு இவை வலுவிழந்தன ஆகிவிட்டன.

**இன்னும் அடுத்த இதழில்...**



Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளோம்

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

NANDY'S
CURRY S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

www.Nandys.de
e.mail:info@nandys.de

3ம் பக்கத் தொடர்ச்சி

## வன்புணர்வு! போரின் ஒரு ஆயுதமாக...

அது மட்டுமல்லாமல் வன்புணர்வானது போரின் ஆயுதமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது. இவை நேரடியான பாதிப்புக்கள் என்றால் மறைமுகமான பாதிப்புக்கள் பல.

உலக ரீதியான போர்ச் சூழலில் தமது நாளாந்த கடமைகளை பெண்கள் ஆற்ற முடியாது தத்தளிக்கின்றனர். பயத்தில் வீட்டினுள்ளேயே அடைபட்டுக் கிடக்க வேண்டிய நிலை. இது குடும்ப ரீதியான பாதிப்புக்களைக் கொண்டு வருகின்றன. கல்வி பாதிக்கப்படுகின்றது. உடல் நிலை பாதிப்புக்கள் பற்றிப் பலதையும் கூறலாம். சில காலத்திற்கு முன்னர் உங்களில் பலர் இவ்வாறான பாதிப்புக்களை அனுபவித்திருப்பீர்கள்.

ஆனால் உலகெங்கிலும் போரினால் பாதிப்படைந்த பல பெண்கள் சமாதானத்தை முன்கொண்டு செல்லும் சாரதிகளாகவும் செயற்பட்டு வருகின்றார்கள். தமது கணவன்மார்களை, சகோதரர்களை, மகன்மார்களைப் போரில் பறிகொடுத்த பல பெண்கள் அந்த ஆண்கள் வகித்த இடத்தைத் தாமேற்றுப் பொறுப்புடன் வாழ்க்கையை ஓட்ட முன்வந்துள்ளார்கள்.

இடிந்து போய் மூலையில் கிடக்க அவர்கள் முனையவில்லை. முனைந்து முன்னேறவே முயற்சி செய்து வருகின்றனர். சின்னாபின்னமான சமூகச் சிறு துண்டுகளைப் பொறுக்கி எடுத்து மீண்டும் சரிசெய்து முன்னேற வழியமைத்து வருகின்றார்கள். சிலர் வெறும் குடும்பப் பொறுப்பு என்ற வட்டத்தினுள் வாடி வதங்காது விரிந்த சமூகச் சூழலில் மீண்டும் சமாதானமும் புரிந்துணர்வும் புத்துணர்வு பெற வழி அமைத்து வருகின்றார்கள்.

காலஞ்சென்ற மார்டின் லூதர் கிங் அவர்களின் விதவையான கொரெடா ஸ்கொட் கிங் என்ற மனித உரிமைகள் மேம்பாட்டாளர் பின்வருமாறு கூறியுள்ளார் .



உலக ரீதியாகப் பெண்கள் ஒற்றுமைப்பட்டால் சர்வதேச சமாதானத்தை அடைய அவர்கள் ஒரு மிகப் பலமான படையணியாக உருவாவார்கள் என்பதில் சந்தேகம் ஏதும் இருக்க முடியாது என்றார்.
இந்த உண்மையை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். பெண்களின் ஒற்றுமை, பெண்களின் ஒருங்கிணைப்பு, பெண்களின் ஒருமித்த கூட்டுச் செயல்கள் யாவும் பாதிப்புற்ற மக்களின் வாழ்க்கையை மறுமலர்ச்சி செய்யவல்லது என்பதைப் பெண்கள் மறந்து விடக்கூடாது.
பாகிஸ்தானில் கைபர் பக்குன்குவா மாகாணத்தில் பெண்கள், குழந்தைகள்



ஆகியோர் போரின் தாக்கத்தினால் மனமுடைந்து பாதிப்படைந்து இருந்த வேளையில், பெண்களின் சுதந்திரங்கள் ஆண்களின் கைகளிலே இருந்த வேளையில், குலானை இஸ்மயில் என்ற பெண் தன்னந்தனியாளாய்ப் பல எதிர்ப்புக்களின் மத்தியில் பெண்கள் விழிப்புணர்ச்சி என்ற ஒரு அமைப்பை உருவாக்கி பாதிக்கப்பட்ட பெண்களையும் இளம் சிறார்களையும் ஒன்று சேர்த்து பெண்கள் ஆற்றலை மேம்படுத்தும், பெண்கள் சமநிலையை வலியுறுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு சில ஆறுதல் வார்த்தைகள் கூட நோய் போக்கும் மருந்தாவன என்பதை உணர்ந்து செயற்பட்டு வருகின்றார்.

ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் பெண்கள் வாழக்கைகளைச் சீரமைக்க பெண்களே முன்வந்து பல உபயோகமான காரியங்களில் இறங்கியுள்ளனர். உதாரணத்திற்கு சிம்பாப்வேயில் பெண்களின் கல்வியின்மை நிலை பொருளாதார ரீதியாக மற்றோரைச் சார்ந்து வாழவேண்டிய நிர்ப்பந்த நிலை, சமுதாய சீர்கேடுகள் போன்ற பல பாதிப்புக்களைக் கண்ணுற்ற பெண்கள் சிலர் தம்மைச் சுற்றியுள்ளோரின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற முயற்சித்து வெற்றியும் கண்டு வருகின்றார்கள்.
கிழக்கு கொங்கோ என்ற ஆபிரிக்க நாட்டில் போர்க்காலத்தில் ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டின் படி தினமும் 1150 பெண்கள் வன்புணர்வுக்கு ஆளானார்கள் என்று கூறப்பட்டிருந்தது. இவற்றைச் செவியுற்ற பல பெண்கள் நேரடி சமாதானம் (ៃநயஉந ஹுசைநஉவ) என்ற அமைப்பை உருவாக்கி பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கைகளை மாற்றியமைக்க அரும்பாடுபட்டு வருகின்றார்கள்.

ஆகவே பாதிப்புக்கள் பல பெண்கள் மத்தியில் இருப்பதை நாங்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். அவை உடல் ரீதியானதாக இருக்கலாம், உள்ள ரீதியானதாக இருக்கலாம். ஏன் மனோநிலையைப் பாதிக்குந் தன்மை சார்பானதாக இருக்கலாம்.

பாதிக்கப்பட்ட பெண்களின் தேவைகளைக் கண்டறிந்து அவற்றை நிறைவேற்றக் கூடிய செயற்பாடுகளில் பெண்கள் இயக்கங்கள் இறங்க வேண்டும். எமக்கென்ன என்றோ, இது எமது வேலையில்லை என்றே வாளாதிருக்கக் கூடாது. பெண்களின் குரல் உரக்க ஒலிப்பது மட்டுமன்றி பாதிப்புற்ற மகளிரின் மனங்களைக் குளிர வைக்கக் கூடியதாகவும் உருமாற்றம் பெற வேண்டும்.

பாதிப்புற்ற பெண்கள் எந்த ஒரு தேவைக்கும் அரசாங்கத்தையோ, அரசசார்பற்ற நிறுவனங்களையோ சார்ந்திருக்காது தமது சொந்தக் கால்களில் நின்று முன்னேற்றம் காண முன்வரவேண்டும். அதே நேரம் பாதிப்புற்றுப் பற்றுக்கோடல் ஒன்றைப் பற்ற வேண்டிய நிலையிலும் பெண்கள் உள்ளார்கள். அவ்வாறான பலர் எம்மை நாடி வருகின்றார்கள். உங்கள் அமைப்புக்கள் எம்மூடக இவர்களை பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கலாம்.

தொடர்ச்சி 08ம் பக்கம்...






















தைப்பொங்கல் சுவைத்தமிழ்ப் பெருவிழா உயர்வாசற் குன்று முருகன் அனுசரனையுடன். இலண்டன் திரிசக்தி இலக்கிய சங்கமம் நடத்திய தமிழ் இலக்கியச் சுவைப்பெருவிழா. தைப்பொங்கற் பெருவிழாவாக, உயர் வாசற்குன்று முருகன் ஆலயத்தில் கடந்த 14-02-2016 ஞாயிறு மாலை சிறப்பாக நடைபெற்றது.விழாவில் பலரையும் கவர்ந்த கிராமிய நடனத்தை ஹரோ முதியோர் தமிழ்ச் சங்கம் சிறப்பாக வழங்கியது. கலைக்கும் நம் பண்பாட்டுக்கும் ஏது வயது எல்லை என்பதனை அவர்களது கிராமிய நடனம் எடுத்துக்காட்டியது.

7ம் பக்கத் தொடர்ச்சி

## வன்புணர்வு! போரின் ஒரு ஆயுதமாக...

எம்மிடையே போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் பற்றி ஆராய்ந்தோமானால் கணவன்மார்களை இழந்து குடும்பப் பாரத்தைத் தாம் ஏற்ற இளம் பெண்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் எந்த வித வசதிகளும் இன்று வாடி வதங்கி நிற்கின்றார்கள். போரினால் அங்கவீனர்கள் ஆக்கப்பட்ட பெண்கள் இருக்கின்றார்கள் புனர்வாழ்வு பெற்ற பின்னர் மீண்டும் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பெண் போராளிகள் உள்ளார்கள். ஆனால் அவர்களில் பலரைச் சமூகம் வெறுத்தொதுக்கும் ஒரு நிலையும் உருவாகியுள்ளது.

இவ்வாறான பெண்களின் மேம்பாட்டுக்கு என்ன செய்ய வேண்டும், ஏது செய்ய வேண்டும் என்று கூட்டம் கூடி சித்தித்துச் செயல்திட்டங்களை வகுப்பதே உங்கள் அனைவர் முன்னிலையிலும் இன்று இருக்கும் பாரிய சவால் என்பதை மறந்து விடாதீர்கள். அந்தச் சவாலை ஏற்றுப் பாதிப்புற்றோர் வாழ்க்கையில் மறுமலர்ச்சி கொண்டு வர நாம் யாவரும் சேர்ந்து உழைக்க வேண்டும். பாதிப்புற்ற பெண்களின் விமோசனமானது அவர்களைச் சமூக நீரோட்டத்தில் மீண்டும் இணைத்துக் கொள்வதில்த்தான் தங்கியுள்ளது. அவர்களின் நேரத்தையும் காலத்தையும் ஏதோ ஒரு நன்மை பயக்கும் கைங்கரியத்தில் ஈடுபடுத்துவதன் மூலமே அவர்களின் மனச்சுமையை ஓரளவாவது குறைக்க முடியும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க நீங்கள் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

பனை ஓலையினால் தயாரிக்கப்பட்ட கழுத்து மாலைகள் மிக அழகுற வண்ணங்களுடன் தயாரிக்கப்பட்டு அதிக விலையின்றி விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றிற்கு சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் இந்த மாலைகளை மட்டும் விரும்பித் தம்முடன் எடுத்துச் சென்றார். இந்தியாவில் இருந்து வருகை தந்த கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும் இந்த மாலையின் அழகு பற்றி விதந்துரைத்ததுடன் அவரிற்கு இட்ட மாலைகளையும் தம்முடன் எடுத்துச் சென்றார்.

எனவே எமது உற்பத்திகள் சந்தை வாய்ப்புக்களை நோக்கியதாகவும் அதே நேரம் வருவாயை தேடித்தருவதாகவும் அமைவதன் மூலம் இந்தப் பெண் அமைப்புக்களின் வருவாயை நாம் அதிகரிக்க முடியும். இதற்கு ஒருமித்த நடவடிக்கைகளை நாம் யாவரும் எடுக்க வேண்டும்.

மாங்குளத்தில் அமைந்துள்ள பெண்கள் அமைப்பொன்றின் முயற்சியினால் அங்கே கழிப்பறைகளுடன் கூடிய மிக அழகிய இளைப்பாறுகை மண்டபங்களும் அத்துடன் சிற்றுண்டிச்சாலையும் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களால் முடியுமாயின் ஏன் அதே போன்ற முயற்சிகளை இன்னும் பல பெண் அமைப்புக்கள் தாம் மேற்கொள்ள முடியாது என்ற ஒரு கேள்வி எம்முன் எழுகின்றது. முயற்சித்தால் ஆகாததொன்றில்லை என்பதற்குச் சிறந்த உதாரணமாக மாங்குளத்தில் இயங்குகின்ற பெண்கள் அமைப்புக்களும் சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் இயங்கிவரும் பெண்கள் அமைப்புக்களும் முன்னுதாரணங்களாக விளங்குகின்றன.

அதே போன்று போரினால் பாதிக்கப்பட்ட உடல் உள ரீதியாகப் பாதிப்படைந்த பெண்களை சமூகத்தில் இணைத்துக் கொண்டு அவர்களையும் முன்னேற்றகரமான பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டியது எம் அனைவரதுந் தலையாய கடமையாகும். இவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் இவர்கள் விரும்பி ஏற்றுக் கொண்டதொன்றல்ல என்ற ஒரு விடயத்தை நாம் அனைவரும் மனத்தில் இருத்தி இவர்களுக்கு ஏற்பட்ட விபத்தில் இருந்து இவர்களை பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

"பெண்கள் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்" என்று மட்டும் கோசம் எழுப்புவதில் நன்மை கிடையாது. உருப்படியான உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என மேலும் தெரிவித்தார்.


# ESTM Jewellery Dortmund



எங்கள் சேவை
- திருமண ஆபரணங்கள்
- ஓடர் நகைகள்
- திருத்த வேலைகள்
- தாலிக்குப் பொன்னுருக்குதல்
- காது மூக்குக்குத்துதல்

E.S.T


Our Service
- Wedding Jewellery
- Jewellery Order
- Quick Repair of Jewellery
- Wedding Rituals
- Ear and Nose piercing




பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்

ESTM Jewellery | Rheinische Str. 73a | 44137 Dortmund | Tel.: 0231 / 1899023 | Mobil: 01633642642

# திடீர் திடீரென மயங்கி விழுதல்





டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

மருத்துவக் கல்வி கற்கும் மாணவர்கள் அவர்கள். மிகுந்த குதூகலத்துடன் அன்று இருந்தார்கள். காரணம் அன்றுதான் அவர்கள் முதல் முதலாக சத்திரசிகிச்சை அறைக்குள் நுழைந்திருந்தார்கள். பாரதூரமான சத்திர சிகிச்சை அல்ல. சாதாரண ஹேர்ணியா நோய்தான். சத்திரசிகிச்சை நிபுணர் நோய் பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்குக் கொடுத்துவிட்டு. கத்தியைக் கையில் எடுத்தார்.
வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்த நோயாளியின் அடிவயிறு மட்டும் வெளியே தெரிந்தது. ஒரு கீறு!.
இரத்தம் கசிந்தது.
உதவியாளர் அதை ஒற்றி எடுக்க முனையும்போது "பொத்தடீர்" என ஒரு சத்தம்.!!
பார்க்க வந்த மாணவர்களில் ஒருவன் திடீரென மயங்கிவிழுந்து விட்டான்.

பாடசாலையில் காலை வழிபாட்டு நேரம். ஆசிரியர் திருவாசகத்தில் திளைத்து தன்னை மறந்து நேரம்போவது தெரியாது பேசிக் கொண்டிருக்கையில் ஒரு மாணவி பொத்தென விழுந்துவிட்டாள்.



அதேபோல இராணுவ வீரர்கள் அணிவகுத்து நிற்கும்போது விழுவதும் உண்டு. படுக்கையிலிருந்து திடீரென எழும்போது மயங்குதல், திடீரெனத் திரும்பிப் பார்க்கையில் விழுதல், சாமிக்கு வைப்பதற்காக பூ கொய்வதற்காக கழுத்தை நிமிர்த்தியபோது திடீரென விழுதல் போன்ற பல்வேறு உதாரணங்களையும் குறிப்பிடலாம்.

திடீர் மயக்கங்கள்

இவை எல்லாம் திடீர் மயக்கங்கள். மயங்கி விழுந்த வேகத்திலேயே மயக்கம் தெளிந்துவிடுவார்கள். இத்தகைய மயக்கம் தீவிரமான நோய்களின் அறி குறிகள் அல்ல. பக்கவாதமோ வலிப்பு நோயோ அல்ல.

மருத்துவத்தில் syncope எனச் சொல்லப்படும் இவை கணநேரம் மூளைக்கச் செல்லும் ஒட்சிசன் குறைவதால் ஏற்படுவதாகும். Black out எனப் பொதுவாகச் சொல்லுவார்கள்.

"இருட்டிக் கொண்டு வந்தது "இ"என்ன நடந்தது எனத் தெரியாது திடீரென விழுந்துவிட்டேன்" என எம்மவர்கள் சொல்லுவார்கள். திடீர் மயக்கம் என நாம் சொல்லலாம்.
இத் திடீர் மயக்கங்கள் பெரும்பாலும் எதிர்பாராது வரும். சிலருக்கு வியர்த்துக்கொண்டோ அல்லது வாந்தியுடன் வரலாம். சில கணங்களுக்குள் விழுந்தவர் தானே விழித்து எழுந்து விடுவார். இவர்களில் பெரும்பாலனர்கள் மற்றவர்களின் எந்த உதவியும் இன்றி தாமாகவே எழுந்து தமது அலுவலைத் தொடரக் கூடியதாக இருக்கும்.

பொதுவான சனத்தொகையில் பத்தில் நான்கு பேருக்கு இத்தகைய மயக்கம் தமது வாழ்நாளில் ஒருமுறையாவது ஏற்பட்டிருக்கும் என்கிறார்கள்.
இவ்வாறன மயக்கம் ஒருவருக்கு 40 வயதிற்கு முற்பட்ட காலத்திலேயே முதன்முறையாக வரும். 40 வயதிற்கு பின்னர்தான் முதன் முறையாக ஒருவருக்கு இப் பிரச்சனை ஏற்படுகிறது எனில் அது சற்று தீவிரமான நோயின் வெளிப்பாடாக இருக்கலாம்.




பெரும்பாலும் பதின்ம வயதுகளிலேயே முதல் முதலாக வருகிறது. பையன்களை விட பெண் பிள்ளைகளில் வருவது அதிகம்.

**காரணங்கள் எவை**

பெரும்பாலன இத்தகைய மயங்கங்கள் நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்டவையே (neurally mediated syncope -NMS) கடுமையான வலி, மன அழுத்தம், பயம், தீவிர உடற் பயிற்சியின் போன்றவற்றின் போது நிகழ்கின்றன. கடுமையான வாந்தியின்போதும் வருவதுண்டு.

பொதுவாக முகம் வெளிறுவதுடன் வியர்வையும் சேர்ந்து வரலாம். பெரும்பாலவனர்களுக்கு அந்நேரத்திலும் கண்கள் திறந்து இருக்கும். மருத்துவ மாணவன் மயங்கி விழுந்ததற்குக் காரணம் முதன் முறையாக இரத்தம் வெளியேறுவதைக் கண்ட அதிர்ச்சியே ஆகும். அதே மாணவன் பின்னர் திறமையான சத்திரசிகிச்சை நிபுணராக புகழ் பெற்றது ஆச்சரியமான விடயமல்ல.

மற்றொரு முக்கிய காரணம் திடீரென ஒருவரின் இரத்த அழுத்தம் குறைவதால் ஆகும். படுக்கை நிலையில் இருந்து எழுந்திருக்கும்போது அல்லது உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்து நிற்கும்போது திடீரென ஒருவரது இரத்த அழுத்தம் குறைவதுண்டு.

இதை நிலை சார்ந்த குறை இரத்த அழுத்தம் (Postural hypotension) என்பர். நீண்ட நேரம் ஒரே இடத்தில் கால்களை அசைக்காது நிற்கும்போதும் இரத்த ஓட்டம் குறைவடைவதால் அவ்வாறு இரத்த அழுத்தம் குறையக் கூடும். பாடசாலை மாணவி விழுந்தது அவ்வாறே ஆகும்.
வயதானவர்களில் இவ்வாறு நிலை சார்ந்த குறை இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கு பல மருந்துகள் காரணமாக இருப்பதுண்டு.

தொடர்ச்சி 10ம் பக்கம்...





09 பக்கத் தொடர்ச்சி

## திடீர் திடீரென மயங்கி விழுதல்

உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்க பயன்படுத்தப்படும் Prazosin, CT, Atenolol, propranolol போன்றவை முக்கியமானவை.

அதே போல மனச் சோர்விற்க்கு உபயோகிக்கும் doxepin, imipramine, Amitriptyline போன்றவையும்.

ஆண்குறி விறைப்படைதலை ஊக்குவிக்கும் Sildenafil,tadalafil மருந்துகளும் நிலை சார்ந்த குறை இரத்த அழுத்தத்தை ஏற்படுத்துவதால் சில தருணங்களில் திடீர் மயக்கத்தைக் கொண்டுவருவதுண்டு.

மலத்தை கடுமையாக முக்கி வெளியேற்றும் போது மூச்சை அடக்குவதால் இவ்வாறான மயக்கம் நேரலாம்.

கடுமையான காய்ச்சல், கடுமையான வயிற்றோட்டம் போன்ற நோய்களால் உடலின் நீர்த்தன்மை குறைவதாலும் மயக்கம் ஏற்படுவதைக் காண்கிறோம்.

குக்கல் போன்ற கடுமையான இருமலின் போது, மூச்சு விடமுடியாது இரத்தத்தில் ஒட்சசிசன் அளவு குறைவதாலும் ஏற்படுவதுண்டு.

கடுமையான வரட்சியால் வியர்வை அதிகம் வெளியேறுவதால் உடலிலுள்ள நீரின் தன்மை குறையும்போதும் இந்நிலை ஏற்படலாம்.

### தீவிரமான வேறு நோய்கள்

சற்று தீவிரமான வேறு நோய்களாலும் இவ்வாறான மயக்கங்கள் ஏற்படலாம்.
முக்கியமானது வலிப்பு நோயாகும். இதன்போது பொதுவாக மயக்கம் மட்டுமின்றி கை கால்களை இழுப்பதும் நடக்கும். ஆனால் அவ்வாறான இழுப்பு இல்லாத வலிப்புகளும் உண்டு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.
திடீரென இரத்தத்தில் சீனியின் அளவு குறையும்போதும் மயக்கம் ஏற்படுவதுண்டு. இது நீரிழிவு நோயுடன் தொடர்புடையது. நீரிழிவு நோய்க்காக இன்சுலின் ஊசி, அல்லது மாத்திரைகள் எடுப்பவர்களிடையே தினமும் எடுக்கும் மாத்திரை அல்லது ஊசியின் அளவை தவறுதலாக கூடுதலாக எடுத்தால் நடக்கலாம்.
அவர்கள் விரதங்கள் இருப்பதாலும் நேரலாம். நீரிழிவு நோயாளிகள் விரதங்கள் இருப்பதும் உணவுகளைத் தவறவிடுவதும் கூடாது.

திடீரென ஏற்படும் அதிகமான இரத்தப் பெருக்கு மற்றொரு காரணமாகும். உதாரணமாக காயத்தினால் கடுமையாக குருதி வெளியேறுவது, கடுமையான மாதவிடாய் பெருக்கு, மூலத்திலிருந்து திடீரென இரத்தம் ஓடுதல் மற்றும் வெளிப்படையாகத் தெரியாது உடலின் உள்ளே நடக்கும் குருதிப் பெருக்குகள் காரணமாகவும் நடக்கலாம். உதாரணமாக குடற்புண், ஈரல் சிதைவு, புற்றுநோய்கள் எனப் பலவாகும்.தலையில் கடுமையான அடி படுதல், அதிகமாக மது அருந்துதல், திடீரெனத் தோன்றி மறையும் பக்கவாதம் (transient ischaemic attacks) போன்றவை வேறு முக்கிய காரணங்களாகும்.
எனவே காரணம் எதுவாக இருந்தாலும் திடீர் மயக்கம் ஏற்பட்டால் மருத்துவ ஆலோசனை பெறுவதன் மூலம் அது ஆபத்தான நோயின் வெளிப்பாடு அல்ல என்பதை நிச்சயத்துக் கொள்ளலாம்.
உங்கள் வீட்டில் ஒருவருக்கு திடீர் மயக்கம் ஏற்பட்டால் மேற் கூறிய எவையாவது காரணமாக இருக்கக் கூடும்.
மருத்துவரிடம் செல்லும்போது, இவற்றில் ஏதாவது காரணமாகலாம் என நீங்கள் சந்தேகித்தால் அவரிடம் மறக்காமல் சொல்லுங்கள்.

மயக்கமுற்றவர் வழமையாக உட்கொள்ளும் மருந்துகள், அவற்றின் அளவுகள் ஆகியவற்றையும் மருத்துவருக்கு அறியத்தாருங்கள்.

### மருத்துவம்

சாதாரண மயக்கங்கள் தாமாகவே குணமாகிவிடும் என்பதை அறிந்தோம்.

மயக்கங்களுக்கு வேறு காரணங்கள் இருப்பின் அவற்றைக் கண்டறிந்து நிவர்த்தி செய்ய மருத்துவர் வழி கூறுவார்.

### மயக்கம் வருவது போலிருந்தால் என்ன செய்யலாம்.

நிற்கவோ இருக்கவோ செய்யாது உடனடியாக அந்த இடத்திலேயே படுங்கள். முடியுமானால் கால்களை ஒரு நாற்காலியில் உயர்த்தி வையுங்கள்.

மயக்கம் தெளிந்தாலும் உடனடியாக திடீரென எழுந்து நிற்காதீர்கள். சற்று தலையை உயர்த்தி உட்கார்ந்து பாருங்கள். சுகமாக இருந்தால் மட்டும் எழுந்திருங்கள்.

போதிய நீராகாரம் எடுப்பதும், மதுபானத்தைத் தவிர்பதும், காலுக்கு ஸ்டொகிங் அணிவதும், இதைத் தடுப்பதற்கு உதவும்.






கிறிஸ்மஸ் பாட்டி இன்று மாலை. நாம் வேலை செய்யும் அந்தப்பிரமாண்டமான கார் கம்பனியின் ஊழியர்கள் ஒன்றாகக் கலந்து ஆடிப்பாடி உண்டும், குடித்தும் சிலர் அதற்கும் கொஞ்சம் மேலேயும் மகிழும் தினம்.

பல வருடங்களாக அந்த நிறுவனத்தில் வேலை செய்தாலும், கடந்த 15 வருடங்களாக இந்தப்பாட்டிக்கு சென்றது கிடையாது. இப்போ நாம் வேலை செய்யும் இடத்தில் மாதம் ஒருவர் எதோ ஒரு மரணச் செய்தியை வந்து சொல்லியபடியே இருப்பார். இந்தச் செய்தி இன்று அல்ல அன்றும் இருந்திருக்கும், ஆனால் அதனை கேட்கும் வயதோ! அல்லது அதனை உள்வாங்கும் மனமோ!! அப்போ இந்த இதயத்திற்கு இருந்ததில்லை. இளமை! இளமை!! இளமை!!! இதற்கும் முதுமைக்கும் -மை- பொதுவாக இருக்கின்றது. இந்த மை மட்டும் இல்லை என்றால் இங்கு முக்கால்வாசிப்பேர் முதுமைதான்.

இந்த முதுமை சில நேரங்களில் தத்துவம் பேசும், பல சமயங்களில் தத்தளிக்கும். ஒரு கவிஞர் சொன்னார் இளசுகள் வயசூக்குவர, அனுபவிக்கத் துடித்துக்கொண்டு ஓடுகிறார்கள். முதியவர்கள் வயசுபோக எல்லாம் முடியப்போகுதே என்ற பயத்தில் இளசுகளையும் சிலசமயம் முந்திக்கொண்டு ஓடுகிறார்கள்.
இப்படியாக அடுத்த ஆண்டு இந்த கிறிஸ்மஸ் பாட்டியில் கலந்து கொள்ள நான் இருப்பேனோ என்ற அச்சத்தில்தான் பல வருடங்களாக கலந்து கொள்ளாத இந்த பாட்டியில் இன்று கலந்து கொள்கின்றேன்.
நேரம் மாலை 7 மணி வின்ரர் காலம் என்றதால், நேரத்துடன் வெளிச்சம் மறைய, மின் ஒளிகள் பலவர்னங்களில் ஒளி பரப்பத் தொடங்கின.

அந்தப்பிரமாண்டமான உணவு விடுதியில், நடுவில் ஆடப் பாட இடம் விட்டு, சுற்றிவர அமரக்கதிரைகள் இடப்பட்டு இருந்தன. ஜோடி ஜோடியாக பலர் வந்தனர். சிலர் தனித்தனியாக வந்து ஜோடி ஜோடியாக அமர்ந்தனர். ஆண்கள் பலரரையும் என்னால் இனங்காணமுடிந்து, ஆனால் பெண்கள் பலரையும் அவர்கள் வாய்திறந்து பேசும் மட்டும், அவர்கள் யார் என்று தெரியாத வண்ணம் முகத்திற்கு முலாம் பூசி வந்தனர்.

வேலை செய்யும் போது அனைவரும் ஒருவகையான ஆடையுடனே வருவார்கள். இப்போ அவரவர் விரும்பும் ஆடைகளில் வந்து இருக்கிறார்கள். ஆடைபாதி ஆள்பாதி என்பார்கள்! உண்மைதான் இங்கு வந்த அந்த யேர்மன் பெண்களில் பலரும் ஆடை பாதிதான்.

இந்தப் பாட்டிக்கு என்றே 2 மாதம் கடும் டயட்டில் இருந்தது அவர்களது இடையில் தெரிந்தது. கட்டிய மனைவியுடன் பேசுவதை விட, நாம் ஒவ்வொருவரும் வேலசெய்யும் இடத்தில் பேசும் பழகும் பெண்கள்தானே அதிகம். நாம் நன்றாக வாழ்வதற்காக வாழ்வின் பாதி நேரம் வேலை செய்யும் இடத்தில் அல்லவா செலவு செய்கின்றோம்.
நேரம் 8.00 மணி தூரத்தில் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் வருவது தெரிந்தது. யார் என்று தெரியவில்லை. கிட்டவந்ததும்தான் தெரிந்தது அது எம்முடன் வேலை செய்பவர்கள்தான் என்று. பெண்களுக்கு முதலிடம் அது நம்மிடம் மட்டுமல்ல, இது பொதுவான கலாச்சாரம். வந்தவர் பெண்ணின் யக்கெட்டை கழட்டி உதவினார். அவளும் உரிமையுடன் இடையை நெளித்து, கைகளைத் தூக்கி, எங்கு எங்கு அழகு கொட்டிக்கிடக்கிறதோ, அதனை ஒரு சுயவிளம்பரம் செய்து சுழன்று நின்றாள். பதிலுக்கு அவனின் உதவிக்கு நன்றியாகக் கட்டிப்பிடித்து கன்னத்தில் ஒரு முத்தமிட்டு அமர்ந்தாள்.

இன்னுமொரு ஜோடி மேசையில் வைனும், பியரும் இருக்கு, அதில் போதை இல்லை என்று இருவரும் கைளைக் கோத்து பிசைந்து கொண்டு இருந்தனர்.
எதுவுமே தப்பு என்று எண்ணினால்தான் தப்பு, மற்றும்படி சர்வசாதரணமாக யாவும் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. வண்ணவிளக்கும் டிஜே இன் பாட்டும், மெதுவாக யாவரையும் கிளர்ந்து எழவைத்துக்கொண்டு இருந்தது.
ஒவ்வொருவர் வருகையின் போதும் மத்தாப்பு வெடிப்பது போல் எல்லோரும் ஒரு புன்னகைய உதிர்ந்து விட்டு, தத்தம் மேசையில் இருப்பவர்களுடன் கதைத்தக்கொண்டு இருந்தார்கள்.

என்னடா இதுதான் பாட்டியா? என்ற எண்ணம் அடிமனதில் மேய்ந்தவண்ணமே இருந்தது. பாட்டி ஒழுங்கு செய்த பெண் நம்முன்னே வந்து இனி நீங்கள் உணவு உண்ணலாம், யாவும் ரெடியாக மேசையில் உள்ளது, உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்யுங்கள். யாவருக்கும் எங்கள் கிறிஸ்மஸ் வாழ்த்துகள் என்றாள்.
எவரும் ஓடிப்பிடித்து உணவு எடுகச் செல்லவில்லை. காரணம் பொறுமையும் அல்ல, எருமையும் அல்ல, அவர்களுக்கு குடித்தது போதுமா? அல்லது இன்னும் குடித்துவிட்டு உண்போமா என்ற பட்டிமன்றம் மனதுக்குள் நடந்துகொண்டு இருந்ததே, அந்தப் பொறுமைக்குக் காரணம்.
கல்யாணம் பண்ணிட்டோம், பிள்ளை பெத்திட்டோம், தாத்தாவகிவிட்டோம், இனி எமக்கு எதற்கு என்று அந்த அந்தப்பருவத்தில் எதையுமே அனுபவிக்காத தியாகிகள்தான் நாம்.
திருமணம் நடக்கும் முன் வரும் மனைவிக்கு, கணவனுக்கு நல்லவனாக, நல்லவளாக இருக்கவேண்டும் என்றும், அப்போது மகிழவில்லை. திருமணத்தின் பின் ஆட்டம் பாட்டம் எல்லாம் குடும்பத்துடன்தான் என்று போட்ட சட்டம் அதனையும் அனுபவிக்கவிடவில்லை. சரி என்னதான் நடக்குது உலகத்தில் இப்போ! எம்மை கேட்க யார் என்று வயதுக்கவசத்தை மாட்டிக்கொண்டு, பாட்டிக்கு வந்தால் அந்த, அந்த, வயசிலும் அவன் அவன் மகிழ்வாக ஏதோ ஒன்றைச் செய்து கொண்டுதான் இருக்கின்றான்.

முன் மேசையில் இருக்கும் சோடி 24 வயது, நிச்சயமாக அந்தவயதில் அவன் செய்வதை நான் செய்வில்லை. பக்கத்து மேசை வயசு 40, அவன் செய்யும் வேலைகளில் பாதியும் நாம் எண்ணவும் இல்லை. பின்னே ஒரு 60 வயது அவர்கள் காணும் மகிழ்வு நாம் நாளையும் காணமாட்டோம்.

இப்படியாக குடிக்காமலே என் புத்தி தடுமாறவைத்தது பாட்டி. பலரும் உணவு உண்டு முடிந்து இருக்கைக்கு வர டீஜே பாட்டுப்போட்டார்.
அவ்வளவுதான் மின்மினிப்பூச்சிகள் போல் பறந்து பறந்து ஆடத்தொடங்கினர். யாருடைய ஜோடி யார் என்று எனக்கு அல்ல, அவர்களுக்கும் தெரியவில்லை. ஆடைகள் பாதி! அதிலும் பாதியை கழட்டி கதிரைக்குப் போட்டுவிட்டு ஆடச்சென்றனர்.
கதிரைகள் மட்டும் ஆடைகளுடன் அடக்க ஒடுக்கமாக இருந்தது. எவ்வளவு இயல்பாக இயற்கையாகத் தோன்றவேண்டுமோ அந்த அளவு தோன்ற ஆடைகளைத் துறப்பதில் அண்களை மிஞ்சி நிற்பவர்கள் (யேர்மன்) பெண்கள்.
எல்லோரும் ஆட, ஒரு இளைஞனும் ஒரு யுவதியும் அமைதியாக பார்த்துக்கொண்டு இருந்தனர். ஆட்டத்தை அல்ல. ஒருவர் ஒருவரை பார்த்து இரசித்தவண்ணம் இருந்தனர். அவள் முகத்தில் படரும் மயிரை அவன் மெல்ல வருடி பின்னே எடுத்துவிடுகின்றான். அவள் அதனை விரும்பாதவாறு கையைத் தட்டிவிடுகின்றாள். மேசையில் இருந்த ஒரு அப்பிள் பழத்தை கடித்துவிட்டு அவள் வைக்கின்றாள், அவன் அதனை எடுத்து மீதி கடிக்கின்றான். அவள் அததை தடுத்து பறிக்கின்றாள், அப்பிள் மேசையில் நழுவியபின்னும் அவர்களது விரல்கள் விலகாது ஒருவரை ஒருவர் தீண்டியவண்ணம் இருந்தது. இதுதான் வைரமுத்து சொன்ன காதலின் முதல்நிலையோ என எண்ணத் தோன்றியது.
இரண்டு கதிரையில் இருந்தவர்கள் இப்போ பாதிக்கதரையை காதலுக்கு வாடகைக்கு கொடுத்து விட்டார்கள். ஓவ்வொரு கதைக்கும் ஒரு முத்தம் கன்னத்தில் விழுந்த வண்ணம் இருந்தது. அவளும் அதனை ஏற்றுக்கொண்டு ஆனால் மகிழ்வை மறைத்துக்கொண்டு, மறுமுறைக்காக ஏங்கிக்கொண்டும் இருந்தாள்.

தொடர்ச்சி 12ம் பக்கம்








# இருதரக் காதல்

11 ம் பக்கத் தொடர்ச்சி...

கன்னத்தில் இட்ட முத்தம் இப்போ சரியான இடத்தை வந்து சேர்ந்தது. இருவரும் எழும்பி வெளியே சென்றார்கள். உள்ளே சிகரட்குடிக்க அனுமதி இல்லை. எனவே பலரும் இப்படி எழும்பி வெளியே சென்று சிகரட்குடித்துவிட்டு வருவார்கள். ஆனால் இந்த ஜோடிகள் சிகரட்குடிப்பதில்லை. அப்படி என்றால் எதற்காக வெளியே சென்றார்கள்.

நான் மீண்டும் ஆட்டம் பாட்டம் நிகழ்வுக்குள் நுழைந்தேன். சற்ற நேரத்துக்குள் என்னுடன் வேலை செய்யும் சியான் தனிமையாக, சோகமா இருப்பதைப் பார்த்தேன். அவருக்கு வயது 64. இன்னும் இரு வருடத்தில் பென்ஷன் எடுக்கவுள்ளார். என்ன சீயான் என்று அவருடன் கதைத்தேன். ஏதோ ஒரு கவலை அவர் முகத்தைச் சிறைப்பிடித்திருந்தது. என்ன நடந்தது என்றேன். அவர் அழும் நிலைக்குச் சென்றுவிட்டார். 6 போத்தல் பியர் குடித்தமைக்கான 6 கோடுகள் அவரது மேசையில் உள் மட்டையில் போடப்பட்டு இருந்து. இவ்வளவும், உள்ளே சென்றபடியால் இவர் எதனையும் ஒளிக்காது எனக்கு சொன்னார். அவள் என்னைக் காசுக்காத்தான் விரும்புகிறாள். யார் என்றேன்! ரீனா என்றார். அட ரீனாவிற்கு வயது 33 தானே என்றேன். தனக்கும் தெரியும், ஆனால் அவள் வயது தடையில்லை என்கிறாள் என்றார். நான் காசுக்கு வயது என்ன தடை ஆனால்! காதலுக்கு நிச்சயமாகத் தடைதான் என்றேன். அவர் நான் இன்று சந்திக்க அவளை மறுத்துவிட்டேன் அதுதான் கவலையாக உள்ளது என்றார். அவரது மனைவி இறந்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. தனிமையில்தான் இருக்கின்றார், துணை தேவைதான் அதற்கு 33 துணையாக இருக்குமா. நான் சிந்திப்பதற்கு முன் தொலைபேசி அவரது நெஞ்சுக்குள் மணி அடித்தது. நேரம் இரவு 3 மணி அவர் விறு விறு என்று யக்கெட்டை மாட்டிக்கொண்டு புறப்பட்டார். பின்பக்கம் பார்த்தால் ஒரு 26 வயதுதான் மதிக்கலாம். அவருடைய நடையில் உற்சாகம் இருந்தது. ஒன்று உறுதியகத் தெரிந்தது, இன்னும் 33 நிமிடங்களுக்குள் அந்த 33 இல் கரைந்துவிடுவார் என்று.

வெளியே சரியான குளிர், ஆனால் வியர்க்க, வியர்க்க முன்பு வெளியேறிய ஜோடிகள் வந்து அமர்ந்தனர். இப்போது தான் எனக்கு ஒரு உண்மை புரிந்தது, அவர்கள் உண்மையில் கணவன் மனைவிதான். ஆனால் இருவருக்கும் ஏதோ உடல் போலும், இப்போ அது முடிவுக்குவந்து விட்டது.

இருவரும் உணவு ஒரு பிளேட்டில் எடுத்தார்கள். ஒன்றாகச் சாப்பிடார்கள். ஒருவர் மாறி ஒருவர், ஒருவர் கடித்துவிட்டு வைத்தை மாறி மாறி எடுத்துக் கடித்தனர். ஜோடி என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும். என்று எண்ணிக்கொண்டேன். இப்போதான் இருவரும் வைன் ஓடர் பண்ணினார்கள். ஒன்று இரண்டு என்று பல கிளாஸ்கள் காலியாகின. பல செல்பி எடுத்துக்கொண்டார்கள்.

ஒரு முறை மட்டும் என்னிடம் போனைத் தந்து ஒருபடம் எடுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அமைதியாக அழகாக போஸ் கொடுத்தார்கள். உண்மையில் பொருத்தமான ஜோடிதான். நான் சொல்லவில்லை. படம் சொல்லியது.

நேரம் அதிகாலை 5 மணி. மெல்ல, மெல்ல, பாட்டி ஓய்வு நிலைக்கு வந்தது. அதிகமாக மது அருந்தியவர்கள் டக்சி பிடித்து வீடு சென்றனர். சிலர் தொலைபேசியில் வீட்டுக்கு அழைப்பு அனுப்பவிட்டுக்காத்து நின்றனர். நானும் வீடுசெல்வதற்காக புறப்பட்டேன்.

அந்த இளம் ஜோடியும் புறப்படத்தயாரானார்கள். ஏதோ உலக அழிவிற்கு முந்தி முத்தம்போல் வெறித்தனமாக இருவரும் முத்தம் கொடுத்துக் கொண்டனர். நான் குடித்த வைன் கொடுத்த வெறி என எண்ணிக் கொண்டேன்.

இருவரும் வாசலில் வந்து நின்றனர். நான் படம் எடுத்துவிட்ட நட்பின் காரணமாக என்ன வைன் குடித்தபடியால் கார் ஓடமுடியாதா? டக்சிக்கா வெயிட்பண்ணுகிறீர்கள் எனக் கேட்டேன்.

அவர்கள் சொன் பதில் என்னைத் தூக்கி வாரிப்போட்டது.

ஆம் அவள் தனது கணவனுக்காகவும், அவர் தனது மனைவிக்காவும் வாசலில் காத்து நிற்கின்றனர்.

நான் எனது காரை எடுக்கப் புறப்பட்டேன். அவளது கணவன் அவளை வந்து கட்டி முத்தமிட்டு அழைத்துச்செல்ல, இவன் தனது மனைவிக்கு கட்டி முத்தம் கொடுத்து அவளுடன் ஏறிச் செல்ல,

நான் ஒருதலைக் காதலா அல்லது இருதலைக் காதலா எனக் குழம்பியவண்ணம் சென்றேன்.

என்ன பொருத்தம் இருவரையும் ஏற்றிச்செல்லும் வண்டியும் ரோயாட்டா ஜீப். பின்னே அந்த செப்பினி ரையர் பின் கதவில் பெரிதாகத் தெரிந்தது. அவர்கள் வாழ்க்கை எப்ப பஞ்சரானாலும் மறுவாழ்வுக்கு செப்பினி உடன் கைகொடுக்கும்.









# நின்னைச் சரணடைந்தேன் 2



கலாசூரி திவ்யா சுஜேன்

நின்னைச் சரணடைந்தேன் II

செவ்விது செவ்விது காதல் எனச் செந்தமிழ் தேனுறு கருத்தினால் காதல் கருவிற்கு கற்பகத் தருவானவன் பாரதி பஞ்ச பூதங்களில் மேலானதாய்க் காற்றினைக் கருதும் என் கற்பனைச் சிறகுகள் காதலைக் காற்றிற்கு ஒப்பிடத் துடிக்கிறது. மெல்லத் தீண்ட மேனி சிலிர்க்கும் காட்சிக்கு அப்பாலான உருவற்ற உணர்வு காற்றும் காதலும்

"தீர்த்தக் கரையினிலே தெற்கு மூலையில்
செண்பகத் தோட்டத்திலே
பார்த்திருந்தால் வருவேன் - வெண்ணிலாவிலே
பாங்கியோ டென்று சொன்னாய்"

கண்ணிற்கு எட்டிடாது கண்ணாம்பூச்சியாடி களவாடவல்ல காற்று செண்பகத் தோட்டத்து நறுமலர்களின் மதன வாசனையை நாசிக்குள் ஊசி போல் ஏற்றும் நாரத முனியோ? தென்றலோடு தீப்பொறியான மலர்வாசனை, சுட்டெரித்த உள்நாட்டுக் கலவரத்திற்கு, மேலும் விஷமாக்கீ இராத்திரி இருள் சேனைப்படையாகிறது. இரவின் விலாசத்தை உறுதி பகர்க்கும் இரு சொற்களாய் வெண்ணிலாவிலே, தெற்கு மூலையிலே எனக் கவி தீட்டியுள்ளான். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிய நிலவின் நளின பயணத்தில் தெற்கு ஓர் அர்த்த ஜாமமாய் கூடக் கருதலாம்.

"மோனத் திருக்குதடி - இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே'

மேலும் இதற்கு சான்று சேர்க்கிறார் நிசியின் நிசப்தத்திற்கு காற்றைத் தொட்டு, விண்ணைக் கண்டு, மண் மீதுலவும் பாரதி நீரோடு இணையும் வகையில் தீர்த்தக் கரையினிலே என்றும் நெருப்போடு நெகிழும் வனப்பில் மேனி கொதிக்குதடி என்றும் கூறுகிறார். பஞ்ச பூதங்களின் பங்கு நம் உள்ளும் புறமும் நின்றாட, உள்ளும் புறமும் உள்ளதெல்லாம் ஒன்றாகிப் பாயும் வெள்ளமாய் நிரம்பும் காதலிற்கும், வெறிப்புறத்தான பஞ்சபூதங்கள் காதலுணர்விற்குத் தூண்டும் கருவியாக ஐம்பொறிகளிடத்து ஐம்பூதத் தாக்கம் நிகழும். கூடிக் கலந்துலவும் வேளை ஸ்நேகம் தரும் இயற்கை, விட்டுப் பிரிந்துழலும் போது எதிரியாகிறது.

அவ்வாறாக இயற்கையின் இன்பமடியில் எங்கு காணினும் என்னையே பார்த்திருப்பாய், நான் மட்டும் வந்தால் கனவென்று கருதிடுவாய். ஆதலால் நான் கனவாய் கானல் காட்சியாய் வரவில்லை நிஜமாய் வந்துள்ளேன் என்று ஊர்ஜிதப்படுத்தி என் மாயக் கண்ணிற்கு விளக்கம் தர தோழியோடு (பாங்கி) வருவேன் என்றாள்.

"வார்த்தை தவறி விட்டாய் - அடி கண்ணம்மா
மார்பு துடிக்கு தடீ!
பார்த்த விடத்திலெல்லாம் - உன்னைப் போலவே
பாவை தெரியுதடீ!

வார்த்தை தவறிவிட்டாய், ஆனால் நீயோ அங்கு வரவில்லை. வீரத்தமிழ் பேசி பொய்யுரையாத பெரும் தெய்வம் நீ வாராது போகும் வண்ணம் எவ்வாறான துன்பம் உனக்கு நேர்ந்ததோ என்றெண்ணி என் மார்பு துடிக்குதடி என்கின்றான். உடல்வலியும், மனக்கலியும் என் இரு கண்களில் பட்டுத் தெறிக்கப் பார்த்த இடத்தில் எல்லாம் கண்ணம்மாவின் உரு தெரியும் மயக்க நிலை உணர்கின்றான்.

கண்ணம்மாவின் நினைவு மதுவில் தோய்ந்த காதலனை காமன் தன் விரகக் கணையால் தாக்க மன்மத மலர்ாளி மேலும் மையல் வளர்த்து தலை சுற்றி மேனி கொதிக்கும் அனலாகிறது.

"மேனி கொதிக்குதடி தலை சுற்றியே
வேதனை செய்குதடி!
வானில் இடத்தையெல்லாம் - இந்த வெண்ணிலா
வந்து தழுவுது பார்!

விண்ணையும் மண்ணையும் ஏக சுகமாய் சுகிர்க்கும் பாரதி இயற்கைச் செருக்கில் ஆண், பெண் தன்மை தேடும் அதியுன்னத ரசனைக் கலை நாடுகிறான். கரு வண்ண வான மகனை, வெண்ணிலாப் பெண் தழுவி, இருள் கிண்ணத்துள் ஒளிமது நிரப்புகிறான். அது போல உனைக் காணாது இருளான கரு வான மொத்த என் மன வெளியில், தூய்மைச் சுடரனைய வெண்ணிலா போல் நின் நினைவொளி தழுவிப் படர்ந்து நீள்கிறது என்கிறான்.

உணர்ச்சிக் கொதிப்பை வார்த்தைகளுக்குள் ஊற்றி மொழியாழம் கொண்டு மெய்யாளும் கவிஞன் மேலும் தொடர்கிறானர். எந்நேரமும் மையல் தரும் நின் நினைவில் துவழும் நான் உன் தீண்டலைப் பிரிந்த இந்நிலை நரகத்துழலுவதாகிறது என்கிறார்.

"கடுமை யுடையதடீ! ஏந்த நேரமும்
காவலுன் மாளிகையில்
அடிமை புகந்த பின்னும் - எண்ணும் போது நான்
அங்கு வருவதற்கில்லை"



நீ வசிக்கும் மனை எனவும் பொருள்படும் அவ்வேளை நின் மனம் எனும் மாளிகை என்றும் எண்ணலாம். அகத்திடை ஆச்சார வழக்கங்களை கட்டி வைத்துள்ளாய் அது பெரும் காவல் அமைகிறதோ?

நின்னிடத்தே சரண் புகந்து அடிமையான பின் கூட எண்ணும் போது அவ்விடத்தே நான் வரமுடியவில்லையே என வருந்துகிறான். காதலிக்கு சேவகனாய், அடிமையாய், காதலைப் பணிந்து கொண்டாடும் பாங்கு பாரதியின் அதியுன்னத அறிவு, தன்னை முற்றாக இழந்து தாம் எனும் தன்மை மறக்கும் நிட்சய யோக மார்க்கமாய் அமைக்கிறான் அவன் காதலை அவ்வண்ணம் காதலி எண்ணுவதையெல்லாம் ஓர் அடிமைபோல் இருந்து அன்பினால் கட்டியாளும் வண்ணம் உன்னுள் நான் புகுந்த பின்பு கூட நீ எனை எண்ணும் வேளை அங்கு நான் வாராது நிற்கிறேனே. உனக்கு வேண்டும் என்பதை பூர்த்தி செய்ய முடியாது பாவியாகிறேனே என வருந்துகிறான்.

**தொடர்ச்சி 15 ம் பக்கம்**




Essen மாநகரில் Öffnungszeiten 14.00-19.00 Uhr

**Oviyan textiles**

**ஒவியன் ஆடைகள் உலகம்**

Tel:0201 330 99 464

அழகிய பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பெரியவர் சிறுமிகளுக்கான
அழகிய பஞ்சாபிகள்,இமிற்ரேசன் நகைகள் அனைத்தையும்
மலிவாகவும் தரமாகவும் பெற நாடுங்கள்,ஒவியன் ஆடைகள் உலகம்!

Ihn.Balasundaram

எசன் நகர பிரதான புகையிரத
நிலையித்தில் (Hbf) இருந்து
5 நிமிட நடைத்தூரம்

Baedecker Str.11
45128 Essen

Tips Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com




# Clinic

## Credit report/ Credit Score கடன் அறிக்கை

ஒவ்வொரு தனிமனிதரும் ஒரு குறிப்பிட்ட கால இடை வெளிக்குள் அதாவது ஒவ்வொரு 6 மாத கால அடிப்படையில் தங்களுடைய credit score ரை பற்றி அறிந்திருப்பது அத்தியாவசியமானது.

நீங்கள் ஒரு credit card, வங்கி loan, mortgage, mobile phone contract, வீடு rental, car lease contract, என்பனவற்றை சுலபமாக பெற்றுக் கொள்வதற்கு சிறப்பான ஒரு credit report இருப்பது மிக முக்கியமானதாகும்.

இந்த credit report என்பதனை Experian Equifax Noddle போன்ற கம்பனிகளில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். Experian என்ற கம்பனிக்கு ஒரு மாதத்திற்கு £15 செலுத்தினால் நீங்கள் எந்த நேரத்திலும் தங்களுடைய report ஐ online மூலம் தெரிந்து கொள்ளலாம்.
Experian என்ற கம்பனி ஒவ்வொருவரின் credit score என்பதை excellent, good, fair, poor, very poor என்ற அடிப்படையில் தரப்படுத்துவார்கள். அவர்களின் கணிப்பின் படி 881/1000 என்ற score அதாவது 88வீதம் எடுத்தால் அதனை “Good” என்றும் கணிப்பிடுவார்கள்.

Credit report என்பது தங்களைப் பற்றிய முழு விபரத்தையும் அதாவது பெயர், electoral விபரங்கள், court சம்பந்தமான விபரங்கள், bankruptcy, தங்களது முழு credit card balance, loan balance, mortgage விபரங்கள், கடந்த 6 வருட காலத்தில் ஏதாவது தவறப்பட்ட மாத செலுத்த வேண்டிய பணம், என்பனவற்றை தெரியப்படுத்தும்.

நல்ல credit rating பெறுவதனை குறைக்கும் காரணங்கள்

-மாதந்த credit card, mortgage, loan தவணை பணத்தை செலுத்த தவறுதல்

- credit card மாதாந்த minimum payment ஐ செலுத்த தவறுதல்
- கடந்த சில மாதங்களில் அளவுக்கு மேலாக credit card, loan applications
- court order, bankruptcy
- தங்களது address ல் உள்ள ஒருவருக்கு credit rating குறைவாக இருப்பது.




நீங்கள் ஒரு வீட்டிற்கு mortgage எடுக்கப் போகும் பொழுது தங்களது credit score இன் படியில் தங்களது வட்டி வீதம் நிர்ணயிக்கப்படும். நல்ல credit score உள்ள ஒருவருக்கு அதாவது 900 உள்ள ஒருவர் செலுத்தும் வட்டி வீதம் 700 score உள்ள ஒருவரை விட குறைவானதாக இருக்கும்.

இந்த credit report ஐ எவ்வாறு இலவசமாக பெற்றுக் கொள்வது? இந்த கட்டுரையில் முதலில் குறிப்பிட்டது போல் Experian என்ற கம்பனியின் மூலம் மாதாந்தம் £15 செலுத்தி தங்களது credit score ஐ அறிந்து கொள்ளமுடியும்.அதே நேரம் noddle.co.uk என்ற கம்பனியில் தங்களது விபரத்தை அறியத் தருவதன் மூலம் இலவசமாக எந்த பணமும் செலுத்தாமல், தேவைக்கு ஏற்றபடி தங்களின் credit reportI பெற்றுக் கொள்ள முடியும்.

மங்கல இசைக் குழு
நாதஸ்வர இன்னிசைச் செல்வன் N.K.ரகுராமன்
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman
Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236
Mob: 0049 157 89 15 95 71





யேர்மனி சுண்டன் நகரில்
பண்ணாகம் இணையத்தின் 10 வது ஆண்டுவிழா
காலம்:- 23 .04 .2016
நேரம்:- மாலை 17.30 சனிக்கிழமை
இடம்:-
Schützen Halle Westenfeld
Westenfelder str -23
59846 SUNDERN ,Germany
தொடர்பு:
இணையத்தின் பிரதம ஆசிரியர்
திரு. இக. கிருஸ்ணமூர்த்தி
02933 78252 0049 1779750795
பிரம அதிதிகள் உரைகள்
சிறப்புப் பட்டிமன்றம்
நடனம் • நாடகம்
துள்ளல் இசை நடனம்




RAJU PARCEL SERVICE
ராஜு பொதிகள் சேவை
கொழும்பு €40
யாழ்ப்பாணம் + கிளிநொச்சி
வவுனியா + முல்லைத்தீவு
திருகோணமலை + மட்டக்களப்பு
மன்னார் + புத்தளம்
கண்டி + சிலாபம்
மாத்தளை + காலி
€55
மற்றும் ஏனைய பிரதேசங்களுக்கும்
தற்பொழுது காப்புறுதியுடன்
கீழ்க்காணும் நாடுகளில் எமது
Box and Packing tape free யாக
அனைத்து தமிழ் வர்த்தக நிருவனங்களிலும்
பெற்றுக் கொள்ளலாம்
Germany + France
Holland + Belgium
புதிய ஏஜன்ட்கள் சேரவிரும்பின்
எம்முடன் தொடர்பு கொள்ளவும்
+ பொதிகளை பெற்றுக் கொள்பவர்களிடமிருந்து எந்த விதமான கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.
+ நீங்கள் அனுப்பும் பொருட்களைப் பெற சுங்க இலாகாவிற்கு நீங்கள் அலைய வேண்டிய தேவையே இல்லை.
+ மேலதிக விபரங்களுக்கு இதில் காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:
Raju Parcel Service
RPS
DE:0049 (0)163 5065 663
NL:0031 (0)645 664 110



# காதோடு காதாக

கலைக்கதிர் கதிர் துரைசிங்கம்

செல்லர்:
சினிமா காதலுக்கும் சின்னத்திரை காதலுக்கும் வித்தியாசம் என்ன?
சோமர்: ஒண்டா, இரண்டா? ஆறு சொல்லிறின் கேளும்.





சினிமாவிலை (Hero) கதாநாயகனும், வில்லனும் ஒரு பெண்ணைக் காதலிப்பார்கள். சின்னத்திரையிலை கதாநாயகியும்,வில்லியும் வில்லியும் ஒரே ஆணைக் காதலிப்பார்கள்.

சினிமாவில் காதலன் காதலி சேர்ந்து நாடு நாடாக குறைந்தது 40 பேருடன் இணைந்து பாடி ஆடி மகிழ்வார்கள்.

சின்னத்திரையிலை காதலன் காதலி பழைய சினிமா பாணியில் சென்னை மொட்டைமாடி அல்லது திருவிழாக்களில் காதல் செய்வார்கள். அனேகமாக காதலனுக்கு தோழனும் காதலிக்கு தோழியும் துணைபோவர்.

சினிமாவில் காதலன் காதலி அணியும் உடுப்புகள் எண்ணற்றவையாக இருக்கும். சின்னத்திரை காதலர்கள் ஒரு சில உடுப்புக்களுடன் சீரியல் முழுவதையும் முடித்து விடுவார்கள்.

காதலியின் உடுப்பு நகை சினிமாவில் சிக்கனமாக இருக்கும். சின்னத்திரையில் நகை நட்டு, உடுப்பு எல்லாம் தாராளமாக இருக்க மேனி சிக்கனமாக இருக்கும்.

சினிமா காதலன் காதலிக்கு அப்பா, அம்மா, சகோதரங்கள் எல்லாரும் அமைவது மிகமிக கடினம். சின்னத்திரையில் அம்மா, அப்பா, சகோதரங்கள், அப்பத்தா, அம்மப்பா என்று எல்லோரும் இருவருக்கும் இருப்பார்கள்.

சினிமா காதல் கல்யாணத்தில் முடியும், சின்னத்திரை காதல் கல்யாணத்தின் பின் தொடங்கும்.

13ம் பக்க தொடர்ச்சி....

## நின்னைச் சரணடைந்தேன் II

சமுதாய வழக்கங்களை எண்ணி சற்று கொதிக்கிறான். ஆன்மாக்களை அடக்கி ஆள எண்ணம் கொண்ட சமூக காவல்களை பொறுக்கவில்லை எனகிறான். எப்பிழையும் செய்யாத உத்தம அரசி அவள். எதற்கு வெட்கி வருந்த வேண்டும். இத்தடைகளை உடைத்தெறியும் அதிகாரம் உள்ளவள் என்கிறார். "நடுமையரசியவள் எதற்காகவோ நாணிக் குலைந்திடுவாள்"

தம் நிலையறிந்த பாரதி அத்தனை அழகாய் உள்ளக்கிடக்கையை மொழி பெயர்க்கிறார்.

கூடிப் பிரியாமலே ஓரிரவெலாம்
கொஞ்சிக் குலவியங்கே
ஆடி விளையாடியே உன்றன் மேனியை
ஆயிரங்கோடி முறை
நாடித் தழுவி மனக் குறை தீர்த்து நான்
நல்ல களி யெய்தியே
பாடிப் பரவசமாய் - நிற்கவே தவம்
பண்ணிய தில்லையடி!

ஆரத்தழுவுதல் அமர நிலை யென்றறிந்து தந்த பாரதியின் மொழி வரமே நம் தவமாகட்டும்!

கண்ணம்மா! நின்னைக்கூடவேண்டும். அதுவும் பிரியாமல் கூடவேண்டும். முச்சுக் காற்றுகளின் பரிமாற்ற இடவெளியில் ஓர் இரவு முழுவதுமாய் உன்னை முத்தமிட்டு, முத்தமிட்டு, முத்தமிட்டு காவியம்போல் நாம் அன்பு மொழிபேசவேண்டும். ஆறுமணி நேரத்தில் ஆயிரம்கோடிமுறை தழுவ வேண்டும். அதுவும் சரச விளையாடல்கள் புரிந்து நானே நாடித் தழுவ வேண்டும். (பாரதியின் காதலில் உள்ள கனிவு, அகங்காரம் அழித்த அன்பின் தன்மை, இவற்றிற்கு நாடி தழுவுதல் என்னும் சொல்லழகு தருகின்றது.

இதய சந்தங்கள் இணையும் வண்ணம் உன்னைத் தழுவின் என் மனதுள் கட்டுண்ட குறை, கவலை, தீரும். இதயக்கனம் அகலும். இவ்வாறான அத்தனை செயல்களும் நல்ல களி எய்திக்கவல்லன. (எக்கணம் நினைக்கும் போதும் பேரானந்தம் தரவல்லன. எவ்வித சலன அன்பும் அற்றது என்பதாய் நல் களி என்கிறார்.)

எல்லையற்ற அந்த ஆனந்தத்தின வெளிப்பாடே இசையாய் பரவச விசையாய் அமையும். இவ்வாறெல்லாம் வேண்டுவன பெற நான் எப்பிறவியிலும் தவம் பண்ணி இருக்கவில்லையே! ஆடடா! என் அதிஷ்டமும்,புண்ணியமும் இவ்வளவுதானோ?

உன் பேரானந்த நிலை முன்னமே தெரிந்திருந்தால், உன்னைப் பெறவேண்டி எத்தனை ஜென்மம் வேண்டுமாயினும் தவம் பண்ணியிருப்பேனோ? எனக் கண்ணம்மாவின் மகிமை உணர்ந்து மனது சலிக்கிறார் மகாகவி.
ஆரத்தழுவுதல் அமரநிலையென்று, அறிந்து தந்த பாரதியின் மொழிவரமே நம் தவமாகட்டும்.






தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால்

## சுவர் இல்லாமலும் சித்திரம் வரையலாம்.

03

சேவியர்

# தாழ்வு மனப்பான்மை, வாழ்வு தராது


"நான் எதுக்குமே லாயக்கில்லாதவன்.." என உள்ளுக்குள்ளே ஒரு குரல் உங்களிடம் அவ்வப்போது சொல்லிக் கொண்டிருக்கிறதா ? உஷார் ! நீங்கள் தாழ்வு மனப்பான்மை எனும் பசித்த சிங்கத்தின் பற்களுக்கு இரையாகக் கூடும்.
தாழ்வு மனப்பான்மை என்பது படிகளற்ற படுகுழி. அதற்குள் குடியிருப்பவர்கள் கால்களற்ற மனிதர்கள். அவர்களால் வாழ்வின் சமவெளியையோ, வெற்றியின் சிகரங்களையோ பார்க்கவே முடியாது !.

தாழ்வு மனப்பான்மைக்கும், தன்னம்பிக்கைக் குறைவுக்கும் நேரடித் தொடர்பு உண்டு. தாழ்வு மனப்பான்மை உடையவர்களால் தன்னம்பிக்கை வாதிகளாக பரிமளிக்க முடியாது. தன்னம்பிக்கை இல்லாவிட்டால் வெற்றியாளராகும் சாத்தியம் இல்லை.
தாழ்வு மனப்பான்மை உருவாக பல காரணங்கள் இருக்கலாம். சின்ன வயதில் உங்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அவமானங்கள். யாரும் ஏற்றுக் கொள்ளவில்லையே எனும் ஏக்கம். யாரும் அங்கீகரிக்கவில்லையே எனும் ஆதங்கம். அம்மா அப்பாவால் கைவிடப்பட்ட நிலை. அல்லது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத நிலை இப்படி ஏதோ ஒரு சில காரணங்கள் உங்கள் மனதில் தாழ்வு மனப்பான்மை விதையை நட்டிருக்கக் கூடும். அவை உங்களுக்குள்ளேயே வேர்விட்டுக் கிளை விட்டு தாழ்வு மனக் கானகமாக பிற்காலத்தில் வளரும். எதையும் முளையிலேயே கிள்ளி எறிவது மிகவும் சுலபம். தாழ்வு மனப்பான்மையும் அப்படியே !

சிலருக்கு இப்படி எந்த சிக்கலும் இல்லாத மழலைக்காலம் வாய்த்து விடும். வளர்ந்தபின் "நான் கருப்பா பயங்கரமா இருக்கேன்", "நான் குண்டா அசிங்கமா இருக்கேன்", "நான் குள்ளமா கொடூரமா இருக்கேன்", "நால் ஒல்லியா பல்லி மாதிரி இருக்கேன்" இப்படியெல்லாம் தன் தோற்றம் குறித்த எதிர் சிந்தனைகள் கூடு கட்டிக் குடியேறிவிடும். இந்த சிந்தனைகளெல்லாம் தாழ்வு மனப்பான்மையை கம்பளம் விரித்து வரவேற்கும் சக்தி படைத்தவை. நாளடைவில் மற்ற எல்லோருமே தன்னை விடப் பெரியவர்கள், தான் மட்டும் உதவாக்கரை எனும் நினைப்புடன் ஓட்டுக்குள் மறைந்து கொள்ளும் ஆமை போல ஆகி விடுவார்கள்.

இன்னும் சிலருக்கு தாழ்வு மனப்பான்மை என்பது அடுத்தவர்களுடைய வசதி வாய்ப்பைப் பார்த்து வந்து விடும். பக்கத்து வீட்டுக்காரர் ஒரு கார் வாங்கினால் இவருடைய மனசில் இவர் தன்னையே சின்னவராய்ப் பார்க்க ஆரம்பித்து விடுவார். எதிர் வீட்டுக்காரர் ஒரு எல்.இ.டி டிவி வாங்கினால் தாழ்வு மனம் கொஞ்சம் கூடும். அலுவலகத்தில் அடுத்து இருப்பவர் லூயி பிலிப் சட்டை போட்டால், தோழி புதிதாய் சங்கிலி வாங்கினால், சக பணியாளன் ஒரு நிலம் வாங்கினால் இப்படி அடுத்தவர்களுடைய பொருளாதார பலங்களெல்லாம் இவர்களுக்குள் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கி விடும். அவர்களைப் போல நம்மால் இருக்க முடியவில்லையே எனும் துயரத்தில் ஆழ்ந்து விடுவார்கள்.

வேறு சிலருக்கு எல்லா வசதிகளும், வாய்ப்பும் இருக்கும். படித்திருப்பார்கள். வேலையில் இருப்பார்கள். காரில் பயணிப்பார்கள். அவர்களுக்கும் தாழ்வு மனப்பான்மை வரும். பல வேளைகளில் அறிவு ரீதியான தாழ்வு மனப்பான்மை. தன்னை விட அறிவாளியாய் மற்றவர்கள் இருக்கிறார்களே எனும் சிந்தனை. குழுக்களில் தனது கருத்தைப் பரிமாற ஆயுட்கால தயக்கம், மீட்டிங்களில் வாய் மூடி மௌனித்திருப்பது, தனது எழுத்துக்களை வெளியே காட்டுவதற்குக் கூட வெட்கம் என இவர்களுடைய தாழ்வு மனப்பான்மை இன்னொரு விதமானது !



இன்னும் சிலருக்கு அடுத்தவர்களுடைய வெற்றி தாழ்வு மனப்பான்மையைக் கொண்டு வரும். "அவனைப் பாரு ஆறே மாசத்துல கடனை எல்லாம் அடச்சுட்டான். நானும் இருக்கேனே" எனும் சுய பச்சாதாபம் தாழ்வு மனப்பான்மையாய் மாறி விடும். எல்லோரும் தங்களைப் பார்த்தே சிரிப்பது போலவும், தங்களை நக்கலடிப்பது போலவும் கனவுகள் வரும்.

தாழ்வு மனப்பான்மையின் வடிவங்களையும், முகங்களையும் சொல்ல ஆரம்பித்தால் சொல்லிக் கொண்டே போகலாம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், "நமது மனதில் நாமே நம்மைக் குறித்த தாழ்வான ஒரு சிந்தனையை உருவாக்குவது" தான் தாழ்வு மனப்பான்மை. அதை உருவாகும் காரணிகள் நமக்கு உள்ளேயோ வெளியேயோ இருக்கலாம்.

தாழ்வு மனப்பான்மை மனதளவிலான பாதிப்புகளை உண்டாக்குவதுடன், உடலையும் வெகுவாகப் பாதித்து விடுகிறது. தாழ்வு மனப்பான்மையுடையவர்களுடைய மூளைத் திறன் குறைந்து அவர்கள் பெரும் மறதிக் காரர்களாகி விடுவார்கள் என்கிறது கனடாவிலுள்ள மாண்ட்ரீயலில் நடந்த ஆய்வு முடிவு ஒன்று.

தொடர்ச்சி 17 ம் பக்கம்

AMMA's food
ammas-food.de
எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
Amma's Food
Rheinische Straße 80A
44137 Dortmund
டோட்மூண்ட் நகரில் ...
அம்மா'ஸ் உணவகம்
அறுசுவைக்கறிகளுடன் சோறும், புறியாணியும்
கொத்து றொட்டி ,இட்டலி , தோசை, வடை இடியப்பம்
இவற்றுடன் இன்னும் இன்னும் உங்கள் விருப்பறிந்து
தரக்காத்திருக்கின்றோம்!
உங்கள் இலத்தின் மங்கல வைபவங்கள் அனைத்திற்கும்
அம்மாவின் சமையலை நினைவூட்டும் உருசியுடன்
தயாரித்து பரிமாறுவோம்!
காலை 11.00 மணி முதல் மாலை 11.00 மணிவரை
செவ்வாய் கிழமை விடுமுறை!
அம்மாஸ் உணவகத்தின் சிறப்பு அம்சம்
சுவையைச் சுடச்சுடத் தருவதும் ஆகும்.

வெள்ளி சனி நாட்களில் பாலப்பம்
Tel:0231 33 89 86 91
Fax:0231 33 89 86 93

## தாழ்வு மனப்பான்மை, வாழ்வு தராது

### தன்னம்பிக்கைத் தொடர்...



இது தவிர மன அழுத்தம், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, இதய நோய், தலை வலி, உடல் வலி, கான்சர் என தாழ்வு மனப்பான்மை தரும் நோய்களின் பட்டியல் அச்சுறுத்துகிறது ! எனவே தாழ்வு மனப்பான்மை எனும் புதை குழியில் விழாமல் கவனமாய் நடப்போம்.சரி தாழ்வு மனப்பான்மை எனும் கூட்டிலிருந்து வெளியே வர முடியுமா ?

நிச்சயமாக ! என்பது தான் அழுத்தமான பதில்.

முதலில் உலகத்தில் எல்லோருமே தனித்துவமானவர்கள் எனும் உண்மையை மனதில் தெளிவாக எழுதிக் கொள்ளவேண்டும். ஒவ்வொருவருக்குள்ளும் சில திறமைகள் நிச்சயம் உண்டு. சில குறைபாடுகளும் நிச்சயம் உண்டு. ஒரு காளானைத் தொட்டுப் பார்த்து நல்ல காளானா விஷக் காளானா என கண்டுபிடிக்கும் பாட்டியின் திறமை தனித்துவமானது. கணினியில் உலகைக் கண்டு பிடிக்கும் பேரனின் திறமை இன்னொரு விதமான தனித்தன்மை ! இந்த உண்மையை உணர்தல் முதல் தேவை.


இந்த
இடத்தில்
இந்த
சீடி
இருந்தால்
கேட்டு
மகிழுங்கள்
இல்லையேல்
இணையத்தளத்தில்
இருந்து பதிவிறக்கம்
செய்து மகிழுங்கள்
www.tbbstars.com





"இந்த நடிகனெல்லாம் வெற்றி பெற வாய்ப்பே இல்லை" என ஒரு நடிகனைப் பார்த்து கிண்டலடித்தார் அமெரிக்காவிலுள்ள கொலம்பியாவின் துணை ஜனாதிபதி ஒரு முறை ! பிற்காலத்தில் அந்த நடிகர் ஹாலிவுட்டிலேயே அதிகம் சம்பளம் வாங்கக் கூடியவராய் மாறினார். அவர் ஹாரிசன் ஃபோர்ட் ! அவருடைய திறமை மேல் அவருக்கு நம்பிக்கை இருந்தது ! "இவரே சொல்லிட்டாரே.. இனிமே நான் அவ்ளோ தான்..." என தாழ்வு மனப்பான்மைக்குள் விழுந்து விடவில்லை.

தாழ்வு மனப்பான்மையில் இருப்பவர்கள் தங்களுடைய வெற்றிகளைக் கொண்டாடமாட்டார்கள். மாறாக அதை விடப் பெரிய பெற்றி பெற்றவர்களை நினைத்து தங்களைத் தாங்களே சோர்வாக்கிக் கொள்வார்கள். அந்தப் பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும். நமது சின்னச் சின்ன வெற்றிகளைக்




கூட மனதளவில் கொண்டாட வேண்டும். யாராவது பாராட்டினால் ஏற்றுக் கொள்ளுங்கள். பாராட்டுக்கு நன்றி சொல்லுங்கள். வெற்றிகளின் விளக்கு வெளிச்சத்தின் முன் தன்னம்பிக்க இருட்டால் தாக்குப் பிடிக்க முடியாது.

யாராவது ஏதாவது ஒரு எதிர் கருத்துச் சொன்னால் உடனே எல்லாம் மூழ்கி விட்டது போல இடிந்து போய் விடாதீர்கள். விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் கொள்ளுங்கள். விமர்சனங்களின் உண்மைத் தன்மையை அறியுங்கள். அவை நல்லவையெனில் எடுத்துக் கொள்ளுங்கள். ஏற்றுக் கொள்ள முடியவில்லையெனில் விட்டு விடுங்கள். எக்காரணம் கொண்டும் விமர்சனங்களின் அடிப்படையில் உங்களை நீங்களே சிறுமைப் படுத்திக் கொள்ளாதீர்கள்.

பள்ளிக்கூடத்தில் மோசமாகப் படிக்கிறான் என்று அடிக்கடி திட்டு வாங்கிக் கொண்டிருந்தார் ஒரு மாணவர். கணக்குப் பாடத்தில் அவர் படு வீக். சரி வீட்டிலிருக்கும் தோட்டத்தைப் பராமரிக்கலாமென்றால் அங்கும் தோல்வி. எங்கும் விமர்சிக்கப்பட்ட அவர் தான் பிற்காலத்தில் உலகை பிரமிக்க வைத்த ஐசக் நியூட்டன்.

உங்கள் வாழ்க்கையில் நடக்கும் செயல்களுக்கான பொறுப்பு உங்களுடையது என்பதை உணருங்கள். அப்போது தான் உங்களுடைய வாழ்க்கையை மாற்றுவதற்கான வலிமையும் உங்களிடம் இருப்பதை உணர்வீர்கள். அது உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும். உங்கள் செயல்களிலும் மாற்றத்தைக் கொண்டு வரும்.

தாழ்வு மனப்பான்மையிலிருந்து வெளியே வர இன்னொரு முக்கியமான தேவை பழைய நினைப்புகளிலிருந்து வெளியே வருவது தான். குறிப்பாக உங்களை தாழ்வு மனப்பான்மைக்குள் தள்ளும் தோல்விகள், பிறருடைய கிண்டல்கள் போன்றவற்றையெல்லாம் மூட்டையாய்க் கட்டி இந்தியக் கடலில் எறிந்து விடுங்கள்.

இன்னொரு முக்கியமான விஷயம், தோல்வி என்பது சகஜம் எனும் வாழ்க்கையின் உண்மையைப் புரிந்து கொள்வது. பிறப்பைப் போல, இறப்பைப் போல தோல்விகளும் மாற்ற முடியாதவை. ஏதோ ஒருவகையில் எல்லோருமே தோல்விகளையும் வெற்றிகளையும் சந்தித்துக் கொண்டே தான் இருக்கிறோம் எனும் உண்மையைப் புரிந்து கொள்வது அவசியம். தோல்விகளை ஏற்றுக் கொள்ளப் பழகி விட்டால் அந்தத் தோல்விகள் உங்களுடைய தன்னம்பிக்கையை உடைப்பதில்லை !

ஜான் கிரிஸாம் எனும் எழுத்தாளரை அறிந்திருப்பீர்கள். நாவல் உலகில் பல கோடி பணம் சம்பாதித்தவர். அவருடைய நூல்கள் சுமார் 25 கோடி பிரதிகளுக்கு மேல் உலகெங்கும் விற்றுத் தீர்ந்தது. ஆனால் அவருடைய முதல் நாவலை வெளியிட அவர் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. 12 பதிப்பகங்கள் அவரை நிராகரித்தன.

16 பதிப்புலக ஏஜெண்ட்கள் அவரை ஏளனம் செய்தனர் ! அவர் அசரவில்லை. தோல்விகள் ஒரு நாள் வெற்றியாய் மாறும் எனும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

பிறரோடு இணைந்து வாழப் பழகுங்கள். பிறரைப் பார்த்துப் புன்னகைப்பது கூட தாழ்வு மனப்பான்மையை உடைக்கும் என்கின்றனர் உளவியலார்கள். புன்னகையுடன் வாழ்க்கையை அணுகுங்கள் இது உங்களை வலுவாக்கும்.

தொடர்ச்சி 20 ம் பக்கம்




JJ Fly

015736824527
0201-43351933
Info@jjfly.de
www.jjfly.de

Onckenstr 70
45144 Essen.

உங்கள் விடுமுறையை
மகிழ்வுடன்கழிக்க
குறைந்த விலையில்
விமானச்சீட்டுக்களைப் பெற
நாடுங்கள்....

Email:info@jjfly.de website:www.jjfly.de

Email: info@jjfly.de Website: www.jjfly.de

RKL IMMO .de IMMOBILIEN & BAUFINANZIERUNG



Sinnadurai.Kiritharan


Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan|Tel. 05723-914519| www.rklimmo.de|info@rklimmo.de

Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீட்டுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை

நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!
மேலதிகவிபரங்களிட்கு Tel. 05723-914519 or www.rklimmo.de
or www.lankasri.com

# ஆரோக்கியம் அற்ற அழகுத் தேடல்கள்!

றஜினா தருமராஜா



அதிகமான பெண்கள் தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். எந்தப் பெண்தான் அழகை விரும்புவது இல்லை! நாங்கள் எல்லோருமே அழகான, இளமையான தோல் இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள்.

நாங்கள் அனைவரும் உடலை அழகாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க புதிய, மற்றும் வளர்ச்சியடைந்த நுட்பங்களைப் பாவித்து வருகின்றோம். சத்தான உணவுகளையும் உண்டு, உடற்பயிற்சி களையும் செய்து வருகின்றோம். ஆகையால் அதற்குரிய பல புதிய நுட்பங்களை கண்டறிந்திருக்கின்றோம்.ஆனால் எல்லா நுட்பங்களும் வெற்றி பெறுவ தில்லை. ஆரோக்கிமான வையும் இல்லை!சில சமயங்களில் இவை பின் விளைவுகளைத் தரும். நாம் கீழே பொதுவான சில சுகாதார போக்குகள் பற்றி அறிந்து கொள்வோம். இவை ஆபத்தானவை.

**Fish Pedicures**
**மீன் கடி வைத்தியம்:**

இவை பல இடங்களில் பாவித்து வருகின்றனர். "காறா றூவா" என்னும் மீன் இறந்த தோல்களை உண்டு புதிய தோலை உருவாக்குகிறது. இதில் உண்மையிருந்தாலும், இவை சிலவேளைகளில் காயங்களினூடாக தொற்று நோயை பரவி விடுகின்றன. பாகுபலி படத்தில் தமனா தனது கையில் உள்ள காயம் மாற மீனைக்கடிக்க விட்டது ஞாபகம் வரலாம். அது பாகுபலியை காவியமாக்கலாம். ஆனால் எல்லா நேரத்திலும் எல்லா மீன்களும் எமக்கு உதவும் என்று சொல்லமுடியாது.

## பின்னழகைக் கூட்ட ஊசி!

கறுப்பு சந்தையில் **Butt Injections** பட் ஊசி:

இவ்வூசி பெண்களின் பின் அழகை பெருக்க மிகவேகமாக வளர்ந்து வரும் ஒரு வழியாகக் காணப்படுகிறது.
ஊசிமுலம் மருந்து ஏற்றப்பட்டு பின்னழகு அவ்விடம் பெருப்பதன்மூலம் செயற்கையாகப் பெறப்படுகின்றது. இச் செயல் தோல் வியாதி ஏற்பட ஏதுவாகின்றது. ஒரு தகுதி பெற்ற மருத்துவரிடம் அணுகுவதற்கு சில பெண்களிடம் போதியளவு பணம் இருப்பதில்லை. ஆகையால் இவர்கள் உரிமம் (license) இல்லாதவர்களிடம் செல்கின்றார்கள். இதனால் துன்பத்திற்குள்ளாகின்றனர். பிளாஸ்டிக் சிகிச்சை செய்யும் அனுபவம் பெற்ற வைத்தியரிடம் செல்வது நல்லது. இயற்கையாக அன்று நம் பெண்கள் உரலில் அரிசி இடித்தும்,அம்மியில் சம்பல் அரைத்தும், பெற்ற பின்னழகை இன்று விலைகொடுத்து வினையை வேண்டுவதாக அமைந்துள்ளது.

கெரட்டின் சிகிச்சை: **Keratin Straightening Systems**
கெரட்டின் சிகிச்சை என்பது தலைமுடியை நேராக்குவதாகும். இவை 6-7 மாதங்களுக்கு தொடர்ந்து இருக்கும். சுஸ்ரின் மற்றும் கெரட்டின் பயன்படுத்தப்படுகின்றன. இவர்கள் கலக்கப்படுவதனால் வாயு (formalde hyde) வெளியேறி இது புற்று நோய் உண்டாக ஏதுவாகின்றது.

**Tanning : தோலும் ஆரோக்கியமும்:**



என்றும் இயற்கை தந்த சூரியனே தோலுக்கு சிறப்பான வைத்தியன். காலையில் சிறிது நேரம், சூரியக்கதிர்கள் எமது தோலில் பட்டால், எமது உடலுக்குத் தேவையான அதி முக்கியம் வாய்ந்த D சத்து தானகவே கிடைத்துவிடும். தோல் பாதுகாப்புக்கு நன்மை தருவதும் சூரியன் தான்.
செயற்கைமூலம் (**UV rays**) தோலைச் செம்மைப்படுத்தல். பார்க்கும் போது ஆரோக்கியமாகக் காணப்படும். தோல்கள் பளபளப்பாக காணப்படும். ஆனால் பல சுகாதார ஆபத்துகள் ஏற்படும். கதிர்கள் தோல்மேல் அதிகம் சென்றால், வயோதிபரின் தோல் போல மினுக்கம், சுருக்கம், புள்ளிகள் ஏற்படும். இவைகளைவிட அபாயமானது புற்றுநோய் தோலில் ஏற்பட வாய்ப்பு அதிகரிப்பதுதான். கதிர் வீச்சுகள் மூலம் கண்களுக்கு காயம் ஏற்படலாம்.





அன்னமிட்ட கை" படத்தில் எம்.ஜி.ஆர் – நம்பியார்.



நாடோடி மன்னன்" படத்துக்காக நம்பியாரை இயக்குகிறார் எம்.ஜி.ஆர்




உலகம் சுற்றும் வாலிபன் – லதா

# நிழலில் எதிரிகள் நிஜத்தில் நண்பர்கள்

M.G.R. பற்றி பேசினால் நம்பியார் பற்றி பேசாமல் இருக்க முடியாது. எம்.ஜி.ஆர். படங்களில் வில்லனாக நம்பியார் வந்த பிறகுதான் படத்தில் விறுவிறுப்பு கூடும். படத்தில்தான் எம்.ஜி.ஆருக்கு அவர் வில்லனே தவிர, உண்மையில் நெருங்கிய நண்பர். எம்.ஜி.ஆரை பெயர் சொல்லி அழைக்கும் உரிமை பெற்ற ஒரு சிலரில் நம்பியாரும் ஒருவர். ரொம்ப ஜாலியான பேர்வழியும் கூட. அவரது நகைச்சுவையை எம்.ஜி.ஆரும் விரும்பி ரசிப்பார். இருவரும் நிழலில் எதிரிகள். நிஜத்தில் நண்பர்கள்.

எம்.ஜி.ஆர். கத்தி சண்டைக் காட்சிகளில் நடிப்பதை பார்த்து அவரை 'அட்டை கத்தி வீரர்' என்றெல்லாம் அக்காலத்தில் விமர் சனங்கள் எழுந்தது உண்டு. ஆனால், உண்மை யான கத்தியைக் கொண்டே எம்.ஜி.ஆர். படங்களில் சண்டை போட்டிருக்கிறார். அவர் பயன்படுத்திய கத்திகள் சென்னையில் உள்ள அவரது நினைவு இல்லத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

'சர்வாதிகாரி' படத்தில் நம்பியாருடனான வாள் சண்டைக் காட்சியில் எம்.ஜி.ஆரின் கத்தி நம்பியாரின் கட்டை விரலை ஊடுருவிவிட்டது. அதே போல, 'அரசிளங்குமரி' படம் எம்.ஜி.ஆரின் வாள் வீச்சுக்காகவே புகழ் பெற்றது.

அந்தப் படத்தில் எம்.ஜி.ஆருக்கும் நம்பி யாருக்கும் ஆக்ரோஷமான சண்டை. ஒரு நாள் படப்பிடிப்பில் நம்பியாரின் கத்தி எம்.ஜி.ஆரின் கண்ணுக்கு மேலே புருவத்தில் பட்டு கிழித்து விட்டது. படத்துக்கான மேக் அப் இல்லாமல் எம்.ஜி.ஆர். தனது வழக்கமான தோற்றத்தில் இருக்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களில் இடது புருவத்தில் அந்தத் தழும்பு தெரியும்.

படப்பிடிப்பின்போது எம்.ஜி.ஆரின் புருவத் தில் நம்பியாரின் கத்தி பட்டு ரத்தம் கொட்டுகிறது. இன்னும் இரண்டு அங்குலங்கள் கீழே பட்டிருந் தால் எம்.ஜி.ஆரின் கண் பார்வை பறிபோயிருக் கும். அங்கிருந்த அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து போய்விட்டனர். ஓடி வந்த உதவியாளர் ஒருவர், எம்.ஜி.ஆரின் புருவத்தில் ரத்தம் கொட்டிய இடத்தில் துணியை அமுக்கிப் பிடித்தபடி, நம்பியாரைப் பார்த்து, "என்னண்ணே, பார்த்து செய்யக் கூடாதா? நீங்க கூடவா இப்படி?" என்று இரைந்தார். நம்பியாருக்கும் வருத்தம்.

எம்.ஜி.ஆர். உடனே, "அவருக்கு என் மீது கோபம் இல்ல் அந்தக் கத்திக்குத்தான் என் மீது கோபம்" என்று சொல்லி அந்த இடத்தில் சகஜ நிலையை ஏற்படுத்தினார்.

பின்னர், நம்பியாரைப் பார்த்து, "ஏன்யா இப்படி செஞ்சீரு?" என்று எம்.ஜி.ஆர். கேட்டார்.
"நியாயமாக பார்த்தால் எனக்கு நீங்கள் நன்றி சொல்லணும்" - நம்பியார் பதில்.

தெரியாமல்தான் என்றாலும் கத்தியாலும் குத்தி விட்டு, அதற்கு நன்றி வேறா? என்று நினைத்த படி "ஏன்?" என்று கேட்ட எம்.ஜி.ஆருக்கு, "டைரக்டர் சொன்ன இடத்தில் குத்தாமல் இருந்ததற்காக" என்று மேலும் புதிர் போட்டார் நம்பியார். "டைரக்டர் என்ன சொன்னார்?" - வியப்புடன் கேட்டார் எம்.ஜி.ஆர்.

"நெஞ்சில் குத்தச் சொன்னார்" என்ற நம்பியாரின் பதிலைக் கேட்ட எம்.ஜி.ஆர். சிரித்த சிரிப்பால் படப்பிடிப்பு அரங்கமே அதிர்ந்தது.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது அவரைப் பார்க்க அவரது வீட்டுக்கு நம்பியார் சென்றுள்ளார். அமைச்சர்கள் உட்பட வி.ஐ.பி-க்கள் எம்.ஜி.ஆரை பார்க்க காத்திருந்தனர். நம்பியார் வந்துள்ள விஷயம் எம்.ஜி.ஆருக்குத் தெரிவிக்கப் பட்டது. அவர் உடனே தனது அறையின் கதவைத் திறந்து நம்பியாரைப் பார்த்து உள்ளே வரும்படி சைகை காட்டிவிட்டு சென்றார்.

தங்களைத்தான் எம்.ஜி.ஆர். கூப்பிடுகிறார் என்று நினைத்துக்கொண்டு அங்கிருந்த அமைச்சர்கள் சிலர் எம்.ஜி.ஆர். அறைக்குச் சென்றனர். நம்பியார் வராததைப் பார்த்த எம்.ஜி.ஆர். மீண்டும் தனது அறையின் கதவைத் திறந்து, நம்பியாரைப் பார்த்து "உன்னைத்தான். உள்ளே வாய்யா" என்றார். நம்பியார் உள்ளே வந்த பின் உதவியாளரிடம் எல்லோருக்கும் காபி கொண்டு வருமாறு எம்.ஜி.ஆர். கூறினார். அந்த உதவியாளரை நம்பியார் தடுத்து, "எனக்கு மட்டும் ஒரு காபி கொண்டு வாருங்கள்" என்றார்.

அங்கிருந்த அமைச்சர் ஒருவர் நம்பியாரைப் பார்த்து, "ஏன், நாங்க என்ன பாவம் செஞ்சோம்?" என்று நம்பியாரிடம் கேட்டார். அதற்கு, "இங்கே நான் மட்டும்தான் விஜபி" என்ற நம்பியாரின் பதிலால் எம்.ஜி.ஆர் மட்டுமின்றி கேள்வி கேட்ட அமைச்சர் உட்பட எல்லோரும் சிரித்தனர்.

நகைச்சுவை உணர்வு உள்ளவர்களால்தான் நல்ல நகைச்சுவையை ரசிக்க முடியும். எம்.ஜி.ஆருக்கு நகைச்சுவை உணர்வு அபாரம்.
பல்வேறு இடையூறுகளுக்கு இடையே வெளி நாடுகளில் எம்.ஜி.ஆர். எடுத்து வெளியிட்டு மிகப் பெரும் வெற்றி பெற்ற 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில்தான் நடிகை லதா அறிமுகம். முதல் படத்திலேயே கதாநாயகி. அதிலும் உச்ச நட்சத்திரமான எம்.ஜி.ஆருக்கு ஜோடி. ஆரம்பத்தில் எம்.ஜி.ஆர். என்ற ஆளுமை முன் நடிப்பதில் லதாவுக்கு உள்ளூர நடுக்கம். படத்தின் இயக்குநரும் எம்.ஜி.ஆர்தான். லதா நடித்த காட்சிகளில் அவர் எதிர்பார்த்த அளவுக்கு நடிக்கவில்லை. காரணம் கேட்டார் எம்.ஜி.ஆர்.

"சார், உங்கள் முன் நடிக்க எனக்கு தயக்க மாக இருக்கிறது" என்றார் லதா. இவ்வளவு ஏற்பாடுகளுக்குப் பிறகு, நடிக்கத் தயக்கம் என்றால் யாருக்குத்தான் கோபம் வராது? ஆனாலும், லதாவின் நிலையை எம்.ஜி.ஆர். புரிந்துகொண்டார்.
அவருக்கு தைரியம் ஏற்படுத்த எம்.ஜி.ஆர். சொன்னதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்த லதா, இயல்பான நிலைக்கு வந்து நன்றாக நடிக்கத் தொடங்கிவிட்டார். லதாவின் தயக் கத்தை போக்குவதற்காக எம்.ஜி.ஆர். கேட்ட கேள்வி...
"பேசாமல் படத்தின் கதாநாயகனை மாத்திட லாமா?" "நன்றி தி.இந்து.


Akchaya Digital Photography& Decoration
Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration
உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும்
மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி
குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும்
ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.
Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474







# உங்கள் சிறுநீரின் நிறத்தைவைத்து உங்களுக்கு இருக்கும் நோயைக் கூறலாம்!










உங்கள் சிறுநீரின் (*Urine*) நிறத்தை வைத்து உங்களுக்கு இருக்கும் நோயைக் கூறலாம்.

இதோ சிலவற்றை கீழே காணலாம்.

ஒரு நிறமும் இல்லை.தெளிவாக இருந்தால் (*clear*). நீங்கள் அதிகமாக் குடிநீர் அருந்துகிறீர்கள். சற்று குறைக்கவும்.

சரியான மெல்லிய மஞ்சல் நிறம். எல்லாம் சரி (*normal*). அளவான குடிநீர் அருந்து கிறீர்கள். ஆரோக்கியமாக இருக்கிறீர்கள்.

பொது மஞ்சல். *Normal* ஆரோக்கியம்.

கடும் மஞ்சல். *Normal*. ஆனால் சற்று கூட குடிநீர் அருந்துவதால் நன்மை தரும்.

தேன் போல நிறம். உங்கள் உடம்பில் அதிகம் தண்ணீர் இல்லை. அதிகரிக்கவும்!

*Brown* நிறம். உங்களுக்கு *liver* வருத்தம் இருக்கக் கூடும். குடிநீர் பற்றாமையும் உள்ளது. வைத்தியரை சென்று பார்ப்பது நல்லது.

*pink* அல்லது *red*. பீற்றுட், சிவப்பு நிற பழங்கள் ஏதும் உட்கொண்டிருந்தாலும் இப்படி நிறம் வர வாய்ப்புள்ளது. அப்படி இல்லை என்றால், உங்கள் சிறுநீரில் (*urine*) னில் இரத்தம் இருக்க வாய்ப்பிருக்கிறது.
அதாவது *kidney* சம்மந்தப் பட்ட நோயாகவோ, *urnine infections, prostate* வியாதிகள், அல்லது வேறு ஏதும் இருக்க வாய்ப்பிருக்கிறது. வைத்தியரை நாடவும்.

ஆரேஞ்சு நிறம். குடிநீர் அருந்துவது போதாது. கல்லீரல் அல்லது பித்த வருத்தம் ஏதும் இருக்க வாய்ப்பிருக்கிறது. அல்லது ஏதும் உணவில் கலக்கப் பட்டிருக்கு இரசாயணமாக இருக்கலாம். ஏதற்கும் வைத்தியரை பார்ப்பது நல்லது.

நீல நிறம் அல்லது பச்சை நிறம். இது மிகச் சிலருக்கு ஒரு மரபணு சம்மந்தப் பட்ட வியாதியாக இருக்கலாம். அல்லது சிறுநீர் குளாயில் *bacterial infection* னாகக் கூட இருக்க வாய்ப்பிருக்கிறது.
ஏதும் *medication* னாலும் வரலாம். எதற்கும் வைத்தியரை நாடுங்கள்.

நிறம் *normal* லாகவும் ஆனால் நுரை இருப்பது போலவும் காணப்பட்டால் புரதச் சத்து அதிகமாக இருக்கலாம். அல்லது சிறு நீரகத்தில் ஏதும் வியாதி இருக்கலாம். எப்போதும் நுரை இருந்து கொண்டு இருந்தால் வைத்தியரைப் பார்க்கவும்.

### தாழ்வு மனப்பான்மை, வாழ்வு தராது

17ம் பக்க தொடர்ச்சி....

உங்களுடைய குறைகளைக் குத்திக் காட்டி உங்களைச் சிறுமைப்படுத்து வோரை விட்டு தூராமாய் போய் விடுங்கள். அதாவது உங்களை ஏதாவது ஒரு வகையில் தாழ்வு மனப்பான்மையில் உழலச் செய்யும் மனிதர்களை அறவே தவிர்த்து விடுங்கள். அதே போல நீங்களும் பிறரைச் சிறுமைப்படுத்தும் குணாதிசயங்களை விட்டு விடுங்கள். பிறரைக் கிண்டலடிப்பது, ஏளனமாய்ப் பார்ப்பது போன்றவை உங்களிடம் இருந்தால் அதை நிறுத்தி விடுங்கள். பேசுங்கள், உங்களுடைய மனதில் பூட்டப்படும் சிந்தனைகள், விமர்சனங்கள், பதில்கள் கூட உங்களைக் கடுமையான மன அழுத்தத்தில் தள்ளிவிடும். எனவே பேசவேண்டியவற்றைப் பேச வேண்டிய இடத்தில் பேசிப் பழகுங்கள் ! ஒருவேளை உங்களுக்குப் பிடிக்காத, உங்கள் மனதால் ஏற்றுக் கொள்ளவே முடியாத ஒரு வேலையில் நீங்கள் இருந்தால் அதை விட்டு விடுங்கள். வாழ்க்கை ஆயிரம் கதவுகளோடு காத்திருக்கிறது எனும் உண்மை உணருங்கள்.

தாழ்வுமனம் தோல்வியின் வீடு
தோல்வியற்ற மனதையே நாடு






Ram Mohan

15 வருட அனுபவம் மிக்க சேவையாளர்

உங்கள் ஆசையை
நிறைவு செய்ய
இதுவே தருணம்
விரையுங்கள்

Büro für Deutsche Vermögensberatung
Ram Mohan
Westwall 117
47798 Krefeld

Ram.Mohan@dvag.de
www.dvag.de/Ram.Mohan

Telefon: +49 2151 3259152-Fax: +49 2151 3259153- Mobil: +49 1726835790

# உயர் இரத்த அழுத்தம் குறைப்பது மிக எளிது !



சேவியர்



இப்போது வடிவமைக்கப்பட்டுள்ள இந்த புதிய கருவி மூச்சை வகைப்படுத்துகிறது. ஒரு இசைக்கருவி போல இருக்கும் இதை நெஞ்சில் கட்டிக் கொண்டால் நமது மூச்சின் வேகம், நமது உடலில் தசை நார்களின் இறுக்கம் போன்றவற்றை அளவிட்டு நாம் நிமிடத்திற்கு எத்தனை முறை மூச்சு விடுவது நல்லது என்பதை கருவி முதலில் தீர்மானம் செய்து கொள்கிறது.

அதன் பின் இதில் இணைக்கப்பட்டுள்ள ஹெட்போனில் மெல்லிய தாளலயத்துடன் இசை எழுகிறது. ஒரு தாளத்துக்கு மூச்சை உள்ளே இழுத்து அடுத்த தாளத்தில் வெளியே விடவேண்டும்.

இந்த உள்ளே வெளியே மூச்சு விடுதல் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும். தேவையான அளவு இடைவெளி வந்தபின் சீராகும். இப்படி தொடர்ந்து சில நாட்கள் செய்து வந்தாலே உயர் இரத்த அழுத்தம் இருந்த இடம் தெரியாமல் ஓடி விடும் என்கின்றனர் மருத்துவர்கள்.

இந்த கருவியை பலருக்கு சோதனை அடிப்படையில் பயன்படுத்தியதில் முடிவு மிகவும் சாதகமானதாய் இருக்கிறதாம்.

உயர் இரத்த அழுத்தத்துக்கு மாத்திரைகள் உட்கொண்டு அதன் மூலம் பக்க விளைவுகளையும் ஏற்படுத்தி, காலம் முழுவதும் மருந்தின் அடிமையாய் நகர்வதிலிருந்து இந்த கருவி விடுதலை அளித்திருக்கிறது.

நமக்குத் தெரிந்த மூச்சுப் பயிற்சியை ஒரு கருவியின் மூலம் நவீனப் படுத்தி காப்புரிமம் வாங்கி வெளியிட்டிருக்கின்றனர் புத்திசாலிகள் என்றும் கூட இதைச் சொல்லலாம்.

உயர் இரத்த அழுத்தமுடையவர்களுக்கு ஆனந்தம் அளிப்பதற்காகவே வந்திருக்கிறது மூச்சைச் சீராக்குவதன் மூலம் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் கருவி ஒன்று.

உயர் இரத்த அழுத்தமுடையவர்கள் தங்கள் மூச்சை மெதுவாக, நன்றாக இழுத்து விடுவதன் மூலம் இரத்த அழுத்தத்தை கட்டுக்குள் கொண்டு வந்து விடலாம் என்றும் மூச்சுப் பயிற்சி, தியானம் போன்றவை உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் எனவும் முன்பே ஆராய்ச்சிகள் தெரிவித் திருந்தன.
ஆனால் எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டும், எல்லோரும் ஒரே அளவாகக் கட்டுப்படுத்த வேண்டுமா ? என்பது போன்ற ஏகப்பட்ட நடைமுறைச் சந்தேகங்கள் இருந்தன.

சராசரியாக ஒரு மனிதன் நிமிடத்திற்கு 18 முறை மூச்சு விடுவதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த அளவு பத்துக்குக் கீழே இருக்குமாறு சுமார் 15 நிமிடங்கள் பயிற்சி எடுத்தாலே உயர் இரத்த அழுத்தத்தை குறிப்பிட்ட நாட்களுக்குள் கட்டுக்குள் கொண்டு வந்து விடலாம் என்கின்றனர் மருத்துவர்.

## பல்கலைக்கழகத்திற்கு தந்தையையும் அழைத்துச் செல்லும் மகன்!





படித்துக் கொண்டே வேலை செய்யும் மாணவர்களைப் பார்த்திருக்கின்றோம். பல்கலைக்கழகத்தில் இருந்து நேரே வேலைக்கும், வேலையில் இருந்து நேரே பல்கலைக்கழகத்திற்கும் செல்லும் மாணவர்களையும், பார்த்திருக்கின்றோம். இது சற்று வித்தியாசமானது. தன்னை உருவாக்கிய தந்தை உருக்குலைந்து நடைதளர்ந்த வேளை, அவரையும் தனித்துவிடாது தந்தையையும், அழைத்துக்கொண்டு சென்று, பல்கலைக்கழகத்திலும் ஓர் இடம்பிடித்து, அவரை அங்குவைத்து பாராபரிக்கும் மகனை இங்கு காண்கின்றீர்கள்.

இங்கு மகனைப் போற்றுவதா! அல்லது உணர்வை மதித்த சீன அரசின் பல்கலைக்கழகபீடத்தை போற்றுவதா? இப்படிச் செய்வது மாணவர் கல்விக்கு இடையூறோ? அல்லது நன்மைதான்தருமோ? என்ற கேள்விகளை எல்லாம் விட்டு, ஒரு தந்தையும் மகனும் கொண்ட பாசத்தைக் காணும்போது மெய்சிலிர்க்கிறது. இது மாணவனின் கல்விக்கும் சிறப்பைத்தரும்.





லண்டனில் தங்க இடமும், இலங்கை உணவும், கொண்ட இனிய நம்மவர் விடுதி!

**Rising Sun Hotel & Restaurant**

அறைகள் யாவும் நவீன வசதிகளுடன் அமைந்துள்ளது.
இவற்றுடன் காலை ,மதிய, இரவு உணவு வசதிகளும் சிறப்பாக உண்டு

En-Suite Rooms ,Restaurant & Bar facilities available to make your stay comfortable.

Free Wi-Fi & Car Park

admin@risingsunhotels.com

138, Greenford Road
Sudbury Hill
Harrow
Middlesex HA1 3QL
U.K
Tel: +44 208 4222 575

Sudbury Hill Station இல் இருந்து இரு நிமிட நடைத்தூரத்தில் !
Heathrow Airport இல் இருந்து 30 நிடங்களில் எம்மை வந்தடைய நேரடி Train வசதி உண்டு

# வரலாற்றின் ஒரு குறித்தகட்டத்தின் ஆளுமைமிக்க மங்கையற்கரசி அமிர்தலிங்கம் லண்டனில் காலமானார்



லண்டன் - இலங்கைத் தமிழ் அரசியலில் பெரும்பங்காற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் லண்டனில் காலமானார். அவருக்கு வயது 82. இலங்கைத் தமிழ் அரசியலில் பெரும்பங்காற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் லண்டனில் 9ம்தேதிகாலமானார். அவருக்கு வயது 82. .

அமிர்தலிங்கம் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டதிலிருந்து லண்டனில் வசித்து வந்த அவரது மனைவி, மங்கையர்க்கரசி கணையச் சுரப்பி வீக்கம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். புதன்கிழமை மாலை அவர் காலமானார் என்று அவரது மகன்களில் ஒருவரான, டாக்டர் ஏ.ஆர்.பகீரதன் தெரிவித்தார்.


மங்கையர்க்கரசி 1933ம் ஆண்டு ஜுலை மாதம் மூன்றாம் தேதி, இலங்கை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை அருகிலிலுள்ள மூளாய் என்ற இடத்தில் பிறந்தார். ராமனாதன் கல்லூரியில் இசை பயின்ற அவர், பின்னர் 1954ல் தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரான, அமிர்தலிங்கத்தை மணந்தார்.


அவருடன் அரசியல் நடவடிக்கைகளில் பங்கு பெற்ற மங்கையர்க்கரசி, 1960 ஆண்டு நடந்த அரசுக்கெதிரான சத்யாகிரக நடவடிக்கையில் கைதாகி 6 மாதங்கள் சிறை வாசம் அனுபவித்தார். இலங்கைத் தமிழர் அரசியலில் அவரது கணவரின் செயல்பாடுகளுக்கு பெரிதும் துணை நின்ற மங்கையர்க்கரசி, தமிழ் அரசியல் மேடைகளில் பாடல்களைப் பாடியும், உரை நிகழ்த்தியும் தமிழர்களை அணி திரட்ட உதவியாக இருந்தார்.



இந்திய அரசியல் தலைவர்கள் இந்திரா காந்தி மற்றும் ராஜிவ் காந்தி ஆகியோர் மற்றும் தமிழக அரசியல் தலைவர்கள் எம்.ஜி.ஆர் போன்றோருடன் மங்கையர்க்கரசி உறவுகளைப் பேணி வந்தார். பகீரதன் தவிர, மங்கையர்க்கரசி-அமிர்தலிங்கம் தம்பதியருக்கு காண்டீபன் என்ற ஒரு மகனும், மூன்று பேரக்குழந்தைகளும் உள்ளனர். அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் 1989 ஜுலையில் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சுவரோட்டி போராட்டத்தில் நேரடியாக கலந்துகொள்ளும் அமரர் தர்மலிங்கம் ( முன்னாள் உடுவில் பா.உ) அவர்களுடன் மங்கையற்கரசி




ASIA EXPRESS FOOD
IMPORTER IN ASIAN & AFRICAN PRODUCTS
Kilbystraat 1, 8263 CJ Kampen
The Netherlands
Tel.: +31 (0)38-3329082
Fax: +31(0)38-3329045
info@asiaexpressfood.nl
www.asiaexpressfood.nl

# மோதிப் பார்க்கலாம் வா

**(இறுதிச்சுற்று)**




உலகத் தரத்திலேயே நடைபெறும் (FIFA) கால் பந்தாட்டத்திலே பணம் கையாளப்பட்டது கடந்த வருடம் விளையாட்டுத் துறையையே மலினமாக்கி விட்டிருந்தது. இந்தக் கையாடல்களில் ஐரோப்பிய நாடுகளும் இருந்ததுதான் ஆச்சரியமானது. ஜனநாயகம், மனித உரிமை பேசும் ஐரோப்பா நாடுகளிலே இந்த நிலை என்றால், மற்றைய நாடுகளில் என்ன நடை பெறும் என்று ஊகிக்க முடியும். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் விளையாட்டுத்துறையின் தெரிவுக்குழு, அதற்குள் தலை நீட்டும் அரசியல், பண பலம் என்று பல விடயங்கள் அடங்கிக் கிடக்கின்றன. தென்கொரியாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் தனக்கு செய்யப்பட்டது அநீதி என்று பரிசு வாங்க மறுத்த குத்துச் சண்டை வீராங்கனை சரிதா நாயர் இதற்கு ஒரு சான்று.

குழறுபடிகள் விளையாட்டுத்துறையில் நடை பெறுகிறது என்பதை மையமாகக் கொண்டு இறுதிச்சுற்று படம் வெளிவந்திருக்கிறது. வித்தியா சமான கதைக்களம். அதுவும் பெண் குத்துச்சண்டை வீராங் கனையை மையப்படுத்தி கதை அமைக்கப் பட்டிருக்கிறது. பொதுவாக பெண்களை முன்னிலைப் படுத்தும் கதைகளோடு வெளிவரும் தமிழ் சினிமாக்கள் பெரிய வெற்றி வாய்ப்பைப் பெறுவதில்லை. ஆனால் இறுதிச்சுற்று திரைப்படம் வெற்றியை எட்டியிருக்கிறது.

மென்மையான பாத்திரங்களுக்குள் பொருந்திவிடும் மாதவனுக்கு இறுதிச்சுற்றில் முற்றிலுமாக மாறுபட்ட வேடமும், தோற்றமும். படம் முழுவதும் எரிச்சல் பட்டுப் பேசுவதும், குத்துச் சண்டையில் நான் தோத்துப் போனேன். வெற்றி பெற்றவனோடை என் பெண்டாட்டி ஓடிப் போட்டாள் என்று புலம்புவதுமான மாதவனின் நடிப்பு இதுவரை பார்க்காதது. ஆனாலும் படத்தில் மாதவனை மிஞ்சி நடிகை ரித்திகா சிங்கே தெரிகிறார். சந்தையில் மீன் விற்பதும் மாதவனோடு எடுத்தெறிந்து பேசுவதும், தனது அக்காவுக்காக சண்டை போடுவதும், காதலில் விழுந்து உருகுவதும், கோபத்தில் வீதியில் நிற்கும் மாதவனின் மோட்டார் சைக்கிள் விளக்குகளை கெல்மெட் கொண்டு உடைப்பதும் என்று எல்லாவித .நடிப்பையும் காட்டுகிறார். ரித்திகா சிங் உண்மையிலேயே ஒரு குத்துச் சண்டை வீராங்கனை என்பதால் அவரால் இந்தப் படத்தில் குத்துச் சண்டை வீராங்கனையின் உடல் மொழியை இலகுவாகத் தரமுடிந்திருக்கிறது.

பார்வையாளர்களிடம் நிறையவே திட்டுக்களை வாங்கிக் கட்டிக் கொண்ட அரங்கில் நடைபெறும் உண்மையான போட்டி ஒன்றில் ரித்திகா சிங் பங்கு கொள்ளும் காட்சியின் காணொளி ஒன்று இங்கே இருக்கிறது.

ஓடிப்போன மாதவனின் மனைவியை நாசர் முண்டம் என்று சொல்லிக்காட்டுவதும், அந்த முண்டத்தின் அப்பாதான் நான் என ராதரவி பதில் சொல்வதும், காளி வெங்கட் மதம் மாறி வந்து போதையில் செய்யும் போதனைகளும் ரசிக்க வைக்கின்றன.

படத்தில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் தங்கள் பங்குகளை அழகாகத் தந்திருக்கிறார்கள். இயக்குனராக சுதா கொங்கரா வெற்றியடைந்திருக்கிறார்.

ஆரம்பத்தில் இருந்தே தேவையில்லாத காட்சிகள் எதுவும் இன்றி கதை இறுதிச்சுற்றுவரை பயணிக்கிறது. ஒரு விவரணப் படத்திற்கான அடிப்படையைக் கொண்டதுதான் இந்தக் கதை. ஆனாலும் அடுத்து என்ன நிகழும் என்ற எதிர்பார்ப்புடன் இரண்டு மணித்தியாலங்கள் இறுதிச் சுற்றுக்குள்ளேயே பார்வையாளர்களை இருத்தி வைத்து சுதா கொங்கரா கதையை நகர்த்திக் கொண்டு செல்கிறார். படத்தின் முடிவு இப்படித்தான் அமையப் போகிறது என்று ஊகிக்க முடிகிறது என்றாலும் கதை சொல்லும் கலை இயக்குனருக்குக் கை கொடுத்திருக்கிறது.

ஒரு மீனவக் 'குடும்பத்துக்குள் எப்படிப் பேசுவார்கள்?. விரக்தியில் இருக்கும் ஒரு பயிற்சியாளர் பேசுவது எப்படி? என்று நன்றாக அறிந்து வைத்துக் கொண்டுதான் அருண் மாத்தீஸ்வரன் வசனங்கள் எழுதி இருக்கிறார் போலும். வசனங்கள் இயல்பாகவே வந்து போகின்றன.

எந்தவித உதவிகள், வசதிகள், சிபாரிசுகள் என்று எதுவுமே இல்லாமல் சமூகத்தின் அடித்தளத்தில் இருக்கும் ஒரு பெண் தனது பயிற்சியாளரின் உதவியோடு தேசிய அளவில் குத்துச் சண்டை வீராங்கனையாக வருவதற்கு எதிர் கொள்ளும் தொல்லைகள் தடைகள் என்ன என்பதை இந்தப் படத்தைப் பார்த்தால் தெரிந்து விடுகிறது.

படம் பார்த்து விட்டு உடனேயே மறந்து போக முடியாதளவு இறுதிச்சுற்று அப்படியே சில நாட்கள் ஆக்கிரமித்து வைத்திருக்கிறது. கிளின் ஈஸ்வுற் (ஊடலைவெ நுயளவறழழன) நடித்த மில்லியன் டொலர் பேபி (ஆடைடழைெ னுழடடயச டீயடில) திரைப்படத்தை ஆதாரமாகக் கொண்டும் வேறு சில ஆங்கிலப் படங்களின் காட்சிகளையும் இணைத்தே இறுதிச்சுற்று வந்திருக்கிறது என்று சிலர் குரல் தந்தாலும் தமிழுக்கு இறுதிச் சுற்று ஒரு மாறுபட்ட திரைப்படமே. நன்றி:மனஓசை




## கதை கதையாம் காரணமாம்

கே.எஸ்.சுதாகர்

### படம் பார்க்கப் போகின்றோம்

படம் பார்க்கப் போகின்றோம் என்றார் அப்பா. வாத்தியார். கறார் பேர்வழி. கோவிலைத் தவிர எங்கும் போகவிடமாட்டார்.

ரவுணிற்குக் காரில் போனோம். குதூகலம்.
"திருவிளையாடல்" பார்த்ததில் ஒருவருக்கும் மகிழ்ச்சியில்லை.
பிரச்சினை அடுத்தவாரம் ஆரம்பித்தது. எல்லாரையும் இருத்தி பார்த்த படத்திலிருந்து கேள்விகள் கேட்கத் தொடங்கினார். கட்டுரை எழுதச் சொன்னார். போதும் என்றாகிவிட்டது.
திஜேட்டரில் "தெய்வம்" படம் மாற்றப்படும்வரை வில்லங்கம் தொடர்ந்தது.
"ரவுணிலை நல்ல படமொண்டு ஓடுதாமே!" அப்பா ஆரம்பிப்பதற்குள்..... ஒருவரையும் காணோம்.






நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு

சூபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!

தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல்

"Umschuldung"





வீட்டுக்கடன் 1,6% வட்டிவீதத்திலிருந்து

உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், 60.000€ வரை உடனடி கடன் உதவி!

தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/13029415
0231/10876361
0152/53961138
Th. Gobinath

## Thushi -Deko

உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்..... Christal mandapa Set round Rada Krishna Stage and Raja Gopuram






Elephant Stage



Thushiyanthan. Thiruselvam

Tel:02305 - 85945 - 0176 608 108 13

## KIRI VIDEO

Cinematic Storytelling

KIRI VIDEO Professional Filming and Production Service

FOLLOW US ON facebook



Home: 02171 948036
Mob: 01786709612
01777076958

## திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

## HK Hammacher

உங்கள் தாய் மொழியில்....

HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454

HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU ASF ASP — இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!



உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb³ Versicherungskonzepte Finanzdienstleistungen

Gothaer

## Kaneen Electronics

16 வது ஆண்டு நிறைவான சேவை

Internet-sat, Receiver,Camera-Alam கருவிகள் மலிவு விலையில் பெற்று பயனடையுங்கள்

சகல Alarmanlage, Überwachung Kamera,Sat-Tv, IP-TV, Internet, பொருத்துதல், பழுதுபார்த்தல் சகல வேலைகளுக்கும். 2016 Januarry; புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள் மூலம் பொருத்துவதற்கும், உங்கள் வீடுகளில் நடைபெறும் சகல மங்கள நிகழ்வுகளையும் மிகத்துல்லியமான தொழில்நுட்பமுறையில் Video ஒளிப்பதிவு செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கும் இன்றே நாடுங்கள்

Tel: 02053 423 740 Fax: 2053 423 741 -Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal

## Nirubagini Magendiran LL.M.

Vereidigte Dolmetscherin und Übersetzerin

Tamil- Deutsch
Deutsch- Tamil

மொழிபெயர்ப்பாளர்
தமிழ் - யேர்மன்
யேர்மன் - தமிழ்

Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

## Nimal வீடியோ அன் போட்டோ

Professional Video Movie

Full HD 1080

கலை விழாக்கள்...
உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள் எதுவானாலும் மனதோடு நிற்க நமது ஒளிப்பதிவு கைகொடுக்கும்...

சிறந்த முறையில் உங்கள் மங்கல விழாக்களை வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்க எம்மை நாடுங்கள்

தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55
Tel:01776794261


உங்கள் புதிய விளம்பரங்களை ஒவ்வொரு மாதமும் 15ம் திகதிக்கு முன் தந்து பிரசுரிப்பதை உறுதிப்படுத்துங்கள்!
vettimaniy@hotmail.com- (49) 163 199 2 333


## KSR BRIDAL ARTIST

KSR BRIDAL

தங்கத்தில் வைரம் பதித்ததுபோல் உங்கள் அழகுக்கு அழகூட்ட எம்மை நாடுங்கள்.மணப்பெண் அலங்காரம்.
மாலைகள் மற்றும் பூச்செண்டுகள் அனைத்தும் ஓர் இடத்தில்.



Make up......
Bridal, wedding, puperty, party
Christian Make up......
Threading Eye brow Face.....
Facial..........
hair style
hair straightening
hair curls

E-mail : kajas.makeup@hotmail.de
facebook : KSR Bridal Artist

contact : 015236649870

KSR BRIDEL: 01747840249

## JATHU CAKES

மங்கல நிகழ்வுக்கான அலங்கார கேக் அழகுறச் செய்து தருகின்றோம்.





For wedding, Reception Kommunion Birthday Puperty

Facebook: jathucakes

JATHU CAKES
Tel:015201934712

உங்கள் திருமண வைபவங்கள். பிறந்த நாள் கொண்டாட்டங்கள்.திருமணநாள் (Wedding Anniversary) கொண்டாட்டங்கள் எல்லாவகையான வைபவங்களுக்கும் அழகாக மலிவாக நீங்கள் கேட்கும் டிசைன்களில் கேக் செய்து தரப்படும். மேசை அலங்கரிப்பும் செய்து தரப்படும். நீங்கள் விரும்பின் தேவையான இடங்களுக்கு கொண்டுவந்தும் தரப்படும்.
Tel:02855 899 7343


இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்




# கிரகப் போர்

**காசியரின் பேரன்**

(பகுதி2)

மின்விளக்கு கொழுவியிருந்த கொழுக்கியில் சாரதா சேலையை முறுக்கி அழுதபடி கட்டிக் கொண்டிருந்தாள். அவளின் தந்தை கதிரேசன் அழுதபடி அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு கிட்டத்தட்ட நூறு வயதிருக்கும். மேசையில் கணிணி இருண்டு போய் அழுதபடி இருந்து. சிறிய மேசையில் லப்ரொப், ஐபோன், ஐபாட் எல்லாம் செயலிழந்து போய்க் கிடந்தன. தனது ஐபொன் இயங்காததால் கதிரேசன் தனது ஐ போனை நிலத்தில் வீசியெறிந்திருக்க வேண்டும். சுக்குநூறாகி தரையெங்கும் ஐபோன் தரையெங்கும் பரந்து கிடந்தது. அது தரையில் கிடந்த விதம் „பாரத்தீர்களா என்னுடைய நிலைமையை இண்டர்நெட் வேலைசெய்யவில்லை, முகநூல் பார்க்க முடியவில்லை என்பதற்காக என்னைப் போட்டு உடைத்து விட்டார்களே அண்ணாச்சி மனிதர்களின் நன்றிகெட்ட தனத்தை பார்த்தீர்களா என்று சொல்வது போல் என்னைப் பார்த்து சிதறிய உடைசல்கள் ஒவ்வொன்றும் பரிதாபமாக விழித்தன.

நானும் என்னோடு வந்தவர்களும் ஓடிப்போய் கொழுக்கியில் கட்டியிருந்த சேலை முறுக்கலை அவிழ்த்து கீழே போட்டோம். சாரதா „எதற்காக அதை அவிழ்க்கிறியள் என்னைச் சாகவிடுங்கள். இண்டர்நெட் இல்லை, முகநூல் இல்லை இனி வாழ்ந்தென்ன விட்டென்ன குழறிக் குழறி அழ சாராதாவின் அப்பா „இவள் செத்த பிறகு நானும் சாகத்தான் இருந்தேன். முகநூலில் இருபத்தேழு வயதில் எடுத்த போட்டோவைப் போட்டு ஒரு பெண்ணுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். இப்ப எல்லாமே போச்சு „ சொல்லிய போது அவரின் கைப் பொல்லு கீழே விழ தரையில் சுவரோடு சாய்ந்தபடி அழுது கொண்டிருந்தார். சாரதாவின் வீடே சோகமயமாகவிருந்தது.

அவர்கள் இரண்டு பேரையும் பார்க்கப் பார்க்க எனக்கு விசர் விசராக வந்தது. விசரோடை கோபமும் வர „நீங்களென்ன முட்டாள்களா இன்ரநெற் இல்லா விட்டால் என்ன முகநூல் இல்லாவிட்டால் என்ன வாழ்க்கை என்ன முழுகியா போகப் போகின்றது. சாப்பாடு இல்லாவிட்டால்தான கவலைப்பட வேண்டும்" என்றேன். சோர்ந்து போய் உட்கார்ந்திருந்த கதிரேசனும், துள்ளி எழும்பி நிற்க தெம்பு இல்லாவிடாலும் சுவரோடு பிடிச்சுக் கொண்டு நின்றபடியே „என்ன பைத்தியக்காரன் மாதிரி உளறுறாய்" உன்ரை வீட்டிலை தொலைக்காட்சிப் பெட்டி இருக்கா ...இல்லை, தொலைபேசி இருக்கா...இல்லை, கைத் தொலைபேசி ....இருக்கா...இல்லை, ஒரு ஐ போனாவது இருக்கா.... இல்லையே என்ற பதிலைப் பற்றி கதிரேசன் அக்கறைப்படாது," இனி நான் உயிரோடு இருந்தென்ன விட்டென்ன"என்றபடி அழத் தொடங்கிவிட்டார்.

„கடவுளே,இதென்ன கொடுமை....இப்படியுமா ஒரு வெறித்தனமாக இருப்பார்கள் „என்று நினைக்கும் போதே வெளியே ஆரவாரமாக இருந்தது.

இன்ரநெற் கடைக்கு எதிரே ஒரே சனநெரிசல் . திடீரென்று இன்ரநெற் கடையிலிருந்த கணிணி வேலை செய்யத் தொடங்கியதும் அங்கிருந்த அச்சடிக்கும் இயந்திரத்திலிருந்து அச்சடித்த தாள்கள் விழுந்து கொண்டிருந்தன.

சட்லைட்டுகள் வேலை செய்யத் தொடங்கிவிட்டனவோ என்ற மகிழ்ச்சயில் எல்லோரும் தங்கள் தங்கள் கைத்தொலைபேசியை அழுத்தினார்கள். ஆனால் எந்த இயக்கமுமே இல்லாமல் இருண்டு போய் கிடந்தன கைத்தொலைபேசிகள்.இருண்ட கைத்தொலைபேசிகளைவிட அதை வைத்திருந்தவர்களின் முகங்கள் பிரபஞ்ச இருட்டில் கிடந்தன.

அச்சடித்த தாள்களில் இருந்த எழுத்துக்களை வாசிக்கவே முடியவில்லை. சிறுசிறு கோடுகளாகவும் குற்றுகளாகவும் இருந்தன. ஒவ்வொருவர் கையிலும் அந்த தாள்கள் இருந்தன. அதைப் பார்த்து எல்லோரும் திருதிருவென விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தமிழர், தெலுங்கர், கர்நாடகக்காரர், மலையாளிகள்,இந்திக்கார், ஆங்கிலம் பேசுவோர் என எல்லோர் கையிலும் புரியாத எழுத்துக்களில் இருந்த தாள்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்."யாரே விசமத்தனமாக இப்படி அனுப்பியிருக்கிறான்" எனச் சிலர் பேசிக் கொண்டனர்.

சாராதா தூக்கிலை தொங்கப் போன கொடுமையைவிட இது பெருங்கொடுமையாகவிருந்தது. அங்கு நின்ற வெவ்வேறு மொழிக்காரரகள் தங்கள் தங்கள் மொழியில் கண்படி திட்டிக் கொண்டிருந்தனர்.


ஒரே ஒரு இன்ரநெற் நிலையம் இயங்குவதாகவும் அச்சு இயந்திரத்திலிருந்து புரியாத மொழியில் அச்சடிக்கப்பட்ட தாள்கள் வந்து கொண்ருப்பதாகவும் செய்தி காட்டுத் தீ போல் பரவ அந்தப் பகுதியை நோக்கி மக்கள் வரத் தொடங்கினர். வீதிப் போக்குவரத்து தடைப்பட்டது. சன நெரிசலைக் கட்டுப்படுத்த காவல் துறையினர் குவிக்கப்பட்டனர்.




அச்சடிக்கும் இயந்திரத்திற்குள் தாள்னகளை வைக்க வைக்க அது அடித்துக் கொண்டேயிருந்தது. மை முடிந்த பிறகும் அச்சடித்துக் கொண்டேயிருந்தது.

மை இல்லாமல் தாள்கள் அச்சடித்து வருகிறதே என பயந்து போன இன்ரநெற் உரிமையாளன் நடுங்கத் தொடங்கினான்.
„ஐயோ கடைக்குள் பேய் வந்திட்டுது, இது பேயின்ரை வேலைதான்" என உரிமையாளன் நாக்குழற எல்லோரும் திகைத்துப் போய் நின்றார்கள்.

தொடர்ச்சி 26 ம் பக்கம்

Duisburg & Oberhausen நகரங்களில்...
VTM MiniMarkt und Kiosk

துரித
பணமாற்றுச்
சேவை!

உலருணவுப் பொருட்கள் கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்
இலங்கை, இந்தியா உட்பட உலகின்
எந்தப்பாகளுக்கும் அதிகூடியவீதத்தில்
பணப்பரிமாற்றம் செய்ய இன்றே
நாடுங்கள் NSB,BOC,HNB போன்ற
வங்கிகளில்
நேரடியாகவும் மற்றும் அனைத்து
வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம்
செய்யலாம்.


Mo-Sa:10.00 -20.00
Son:14.00-20.00
Neudorferstr 173
47057 Duisburg
Tel 0203/98418781
inh:Pon.Vijayakumar
E.mail :- vtm2012@hotmail.de

25 ம் பக்கத் தொடர்ச்சி....

# கிரகப் போர்

ஒவ்வொரு மொழிக்காரரும் அதே மொழியைப் பேசும் இன்னொருவரிடம் பேசிக் கொள்ள அவரவர் வைத்திருந்த தாளில் உள்ள எழுத்துக்கள் எந்த மொழிக்கார் அதனை வைத்திருந்தாரோ அந்த மொழியாக மாறியது. தமிழ், தெலுங்கு, கர்நாடகம், மலையாளம், இந்தி, ஆங்கிலம் என குறியீடுகள் மாறத் தொடங்கின.



திகைப்பிற்கு மேல் திகைப்பு. „இதுவும் பேயின் வேலைதான் இந்தப் பேய் எல்லா மொழிகளையும் படிச்சு வைச்சிருக்குது" எனச் சிலர் பேசிக் கொண் டனர். சிலர் நல்ல குளிரில் நடுங்குவது போல வெடவெடவென நடுங்கிக் கொண்டிருந்தனர். தாளில் இருந்த செய்தியை வாசித்தவர்கள் அதிர்ச்சி யடைந்து பயந்து தரையில் உட்கார்ந்தே விட்டார்கள். செய்தி இதுதான்,:"

1.ஒவ்வொரு 50,000 கிரகங்களுக்கும் ஒரு தலைமைக் கிரகம் உண்டு. மனித உயிரினம் ஆகிய உங்கள் கிரகம் எங்கள் „மாங்கதிர்"கிரகத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது.

2.உங்கள் கிரகத்தில் உள்ள எல்லா மொழிகளும் எமது மொழியியல் உளவாளிகள் மூலம் அறிந்து வைத்திருக்கின்றோம். அந்த மொழிகளை உருவாக்கியவர்கள் நாங்களே.

3. அவர்கள் மூலம் உங்களது அடவாடித்தனமான ஆணவமான செயல்களை நாங்கள் அறிவோம். பலமுறை உங்களை மன்னித்தும் நீங்கள் திருந்துவதாக இல்லை.

4.உங்கள் மீது போர் தொடுத்து உங்களை அழிக்கும் திட்டத்திற்கு எமது தலைமையகம் அங்கீகாரம் அளித்துவிட்டது. உங்களை இனி மன்னிப்பதாக இல்லை. உங்களுக்கான காலக்கெடு இன்னும் ஐம்பது வருடங்களேயாகும். எங்களுக்கு அது ஒரு விநாடி.

5. அதன் இறுதி எச்சரிக்கையாகவே உங்களால் ஏவிவிடப்பட்ட அத்தனை சட்லைட்டுகளையும் அழித்தோம். இப்பொழுது உங்களிடமிருக்கும் தாள்களை வெளிக்கொணர்ந்த கணினியையும் அச்சு இயந்திரத்தையும் இங்கிருந்து நாங்களே இயக்கினோம். உங்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்து கின்றோம். டைனசோர் என்ற உயிரினத்தின் அடவாடித்தனம் பொறுக்க முடியாமலே அவற்றை அழித்தோம். அவற்றை அழித்துவிட்டு ஆறறிவுடன் உங்களைப் படைத்தோம். ஆனால் நீங்கள் விலங்குகளைவிட கேவலமாக இருக்கிறீர்கள்.

7. நீங்கள் என்னென்ன தகாதவை செய்திருக்கிறீர்கள் என்ற விபரப்பட்டியல் பலமொழிகளிலும் நாளைக்கு இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் மைதானத்தில் எங்களால் அனுப்பி வைகப்பட்டு வந்திறங்கும்.

வாசித்து முடித்த எல்லோரும் வாயடைத்துப் போய் நின்றனர். „இது உண்மையா பொய்யா எனத் தீர்மானிக்க முடியாமல் தடுமாறி நின்றனர். அப்படியென்றால் நாங்களெல்லாம் அநியாயக்காரர்களா இது என்ன கொடுமை. இன்னும் ஐம்பது வருடங்களுக்கு பின் பூமி அழிந்து விடுமோ "பயத்தில் எல்லாருக்கும் வியர்க்கத் தொடங்கியது.காலையில் வீட்டைவிட்டு வெளிக்கிட்ட நான் இரவு பத்துமணிக்குத்தான் திரும்ப வீட்டிற்குப் போனேன்.

சுந்தரி யன்னலடியில் நின்றவாறு தெருவைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். வீட்டிற்குள் போன என்னை „எங்கை காய்கறி" என்றாள். காய்கறி வாங்கப் போன நான் அதை மறந்து போனதற்கான காரணத்தைச் சொன்னதும் என்ரை சுந்தரி காய்கறியை மறந்து „பிறகு...பிறகு...ஆ..பிறகு என்று ஆர்வத்துடன் கேட்டாள். அவளும் பயந்துவிட்டாள்,பிறகு „இஞ்சருங்கோ கமலக்கா இங்கை வந்தவா முகம் முழுக்க எண்ணைக் காயம்"என்றவள் கமலத்திற்கு நடந்ததைச் சொன்னாள். நான் ஆர்வத்துடன் கேட்க அவள் சொன்னாள்.: „கமலக்கா மீன் பொரிக்க எண்ணையைக் கொதிக்க வைக்க கமலக்காவின்ரை புருசன் கைத்தொலைபேசி வேலை செய்யவில்லையே என்று அதை நோண்டிக் கொண்டிருக்க கமலக்கா எரிச்சலில் வேலை செய்யாத அதையேன் நோண்டிக் கொண்டிருக்கியள் எனக்கு உதவியாக இந்த சட்டிபானையையாவது கழுவலாந்தானே எனச் சொல்ல, கமலாக்காவின் புருசன் இந்தா இதையும் பொரி என கைத்தொலைபேசியை கொதிக்கிற எண்ணையிலை எறிய எண்ணை தெறிச்சு கமலாக்காவின்ரை முகம் முழுக்க புண்ணாய்ப் போச்சுது. கமலாக்கா „இந்த மனுசனை எப்பதான் கடவுள் தண்டிக்கப் போகிறாரோ" என்று அழுதவாறு மருந்து வாங்கிக் கொண்டு போனா எனச் சொல்லி முடித்தாள்.

எனக்கும் நித்திரை வரவில்லை, சுந்தரிக்கும் நித்திரை வரவில்லை. „அந்தத் தாளிலை என்ன வந்திறங்கும் என்றிருந்தது" என தொண தொணத்துக் கொண்டேயிருந்தாள். அரைகுறை நித்திரையுடன் அடுத்த நாள் விடியத் தொடங்கியது.

திடீரென்று சுந்தரி „யையோ யையோ இங்கை வந்து பாருங்கோ" என்றாள். அடிச்சுப் பிடிச்சு எழும்பி வீட்டுக் கதவை வெளியே போனேன். அங்கே ஆகாயத்தில்........
(தொடரும்)











நெடுந்தீவு முகிலனின்

## அந்தியில் உதயம்

ஈழ கலைஞர்களும் புலம்பெயர் ஈழ கலைஞர்களும் சேர்ந்து உருவாக்கிய மகளீர் தின படைப்பு - அந்தியில் உதயம்.
நெடுந்தீவு முகிலன் இயக்கத்தில் Anton C Guna தயாரிப்பில் கந்தப்பு ஜெயந்தன் இசையில் A Digi Media - Paris படப்பிடிப்பில் Shankar Theva படத்தொகுப்பில் மன்மதன் பாஸ்கி,இராம் இந்திரன் அங்கிள்,என ஈழத்தின் புலம்பெயர் தேசத்து முன்னணி நடிகர்கள் பலர் பங்கேற்று நடித்த பிரான்ஸ் - பரிசில் படமாக்கப்பட்ட அந்தியில் உதயம் குறும்படம் பங்குனி 8ம் திகதி வெளியாகியது. உலகில் எந்த மூலையில் இருந்தாலும் தன்னை அந்த அந்த இடத்திற்கு இசைவாக்கிக்கொண்டு தனது பணியைத் தொடரவல்லவர் நெடுந்தீவு முகிலன். அன்று தாயகத்தில் ஒவ்வொரு மகளிர்தினத்திலும் முகிலனில் ஒரு குறும்படம் பெயர்சொல்லும் வகையில் யதார்த்தமான படமாக வெளிவரும். அவரது சாம்பல் குறும்படம் 2013 ஆண்டு வெற்றிமணி விழாவில் யேர்மனியில் காட்டப்பட்டது. பலரது வரவேற்பையும் மனதையும் நெகிழவைத்த படமாக அமைந்தது.
தற்போது அந்தியில் உதயம் என்ற குறும்படம்.பெண்களுக்கு குறிப்பாக இன்று இளம் சிட்டுக்களாக தாய் தகப்பனில் அரவணைப்பில் இருக்கும் பெண்கள், எவ்வாறு இளைஞர்களால் ஏமாற்றப்படுகின்றார்கள் என்ற ஒரு கருவை, கதையாகக்கொண்ட படம். எந்த இடத்திலும் விரசம் இல்லாமல், ஆண்கள் மீதோ, பெண்கள் மீதோ, வெறுப்பைத் திணிக்காமல் சமுகத்தின் மீது கொண்ட ஒரு கரிசனையாக இப்படம் வெளிவந்துள்ளது. இறுதியில் ஒரு வார்த்தை
எந்த ஆணினால் ஒருத்தி ஏமாற்றப்படுகின்றாளோ அவள் நாளை உன் சகோதரனுக்கோ! இல்லை உன் நண்பனுக்கோ மனைவியாகிறாள். இந்த வசனம் சொல்கிறது ஒரு உன்னதமான தீர்ப்பை.
வளர்ந்து வரும் சிறந்த ஒரு கலைஞனின் படைப்பு இது! ஆரம்பத்தில் இருந்து வெற்றிமணி இவரது படைப்புகளுக்கு ஊக்கம் கொடுத்து வருகின்றது. கருத்தான கருக்கொண்ட குறும்படம். நடிகர்கள், இசையமைப்பாளர்கள், கமராக் கண்கள், அனைத்தும் தேவைக்கு அதிகமாக எந்த இடத்திலும் இருக்கவில்லை. இது குறும்படத்திற்கு மேலும் சிறப்பு.



# 5 திருமந்திரமும் வாழ்வியலும்

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**

திருமந்திரத்தின் தான, தருமம் பற்றிய கொள்கை
மானிடராய்ப் பிறந்த அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய நாம் பெற்ற இன்பம் அனைவரும் பெறவேண்டும் என்பதைக் கூறும் பாடல் எண் 85 இல்

"நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப்படும் தானே."

இப்பாடலின் பொருள் "நான் பெற்றதான இறையருள் கருணையால் உணர்ந்தறிந்த, பேரின்ப ஞானப் பேற்றை, இவ்வுலக மக்களெல்லாம் பெற்றுய்ய வேண்டும். வானம் அளந்து நின்ற வேதவிழுப்பொருளைக் கூற நான் பெற்ற ஞானம் ஊனோடு கலந்து உணர்வோடு ஒன்றி உயிர்ப்படையச் செய்யும் வேத மந்திரம் இதுவாகும். இதை உள்ளம் பற்றி நினைந்து நினைந்து துதிக்க இறைவன் திருவருள் தானே தேடி வந்தடையும்." என்பதாகும்.



எல்லோராலும் செய்யக்கூடிய தருமம் பற்றிய உன்னதமான கருத்தைக் கூறுவதுடன் சரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றிய சைவ சித்தாந்தக் கருத்தையும் மறைமுகமாகக் கூறுகிற பாடல் எண் 252 இல்

"யாவர்க்கு மாம்இறை வற்குஒரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்குஒரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க்கு இன்னுரை தானே."

இப்பாடலின் பொருள் "கடவுள் பூசைக்கு எங்கும் எவர்க்கும் எளிதாகக் கிடைக்கின்ற பச்சிலை போதும். பசுவுக்கு ஒரு கைப்பிடி புல்லைப் பறித்து உணவாகத் தருவது எல்லோருக்கும் எளிதான ஒன்றுதானே. தாம் உண்ணும் போது ஒரு பிடி சோற்றை இல்லைஎன்று வருபவர்க்கு யாரும் தரலாமே. எல்லோரிடமும் அன்பாக இருப்பதுஇ இனியவை கூறுவதுகூட எல்லோரும் செய்யக்கூடியதுதானே. இவற்றைச் செய்தால் இவையும் மேலான தருமங்கள்தான்." என்பதாகும்.

இப்பாடலில் பச்சிலையை இறைவனுக்கு அர்ப்பணித்துப் பூசை செய்வது சரியை. பசுவிற்குப் புல்லைக் கொடுப்பது கிரியை. உண்ணும் போது ஒரு பிடி சோற்றை இல்லை என்று வருபவர்க்கு எடுத்து வைப்பது யோகம். இனிய உரைகளைக் கூறுவது ஞானம். இவ்வாறு ஆன்மாவின் படிமுறை வளர்ச்சியை மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் நாம் அன்றாடம் உணவு சமைக்கமுன்பு ஒரு பிடி அரிசி எடுத்து அன்னதானத்திற்காக வைக்கும் எமது பண்டைய கா்லப் பழக்கத்தையும் கூறப்பட்டுள்ளது.

இறைவன் தான் மானிடச் சட்டை போர்த்திக் குரு வடிவாக வருவதை வலியுறுத்தும் பாடல் எண் 1581 இல்

"குருவே சிவம்எனக் கூறினன் நந்தி
குருவே சிவம்என்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரைஉணர்வு அற்றதோர் கோவே."

இப்பாடலின் பொருள் "சிவப்பரம்பொருள்தான் ஞானகுருநாதன் என்று சொல்லி அருளினான் நந்தியெம்பெருமான். இதை இன்னும் பலர் அறியாமல் இருக்கின்றார்களே. குருநாதன்தான் சிவப்பரம்பொருளாகவும், சீவர்களுக்கெல்லாம் மேலான தலைவனாக, உலகாட்சி செய்பவனுமாய் இருக்கின்றான். ஞானகுருநாதனான இவன் வாக்கும் மனமும் கடந்து நிற்கின்ற தலைவனுமாம்." என்பதாகும்.

இதே கருத்துடன் சரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றிய சைவ சித்தாந்தக் கருத்தையும் மறைமுகமாகக் கூறுகிற பா்டல் எண் 139

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே."

இப்பாடலின் பொருள் "குருவின் திருஉருவைக் கண்டு வணங்குதல், குருவின் திருப்பெயரைத் தியானித்தல், குருவின் அருளுரைகளைக் கேட்பது எல்லாம் அறிவை விசாலமடைய அதாவது மேம்படச் செய்யும். இவற்றை விட ஞானாசிரியரின் திருவுருவை நெஞ்சில் நிறுத்தி அவர் அருளுரைகளை எண்ணி நினைவால் தொழுவதும் அறிவின் விளக்கமாகும்" என்பதாகும்.
இப்பாடலில் குருவின் திருஉருவைப் பார்ப்பது சரியை. குருவின் அருளுரைகளைக் கேட்பது கிரியை. குருவின் பெயரைச் சொல்வது யோகம். குருவை நெஞ்சில் நிறுத்தி அவர் அருளுரைகளை நினைப்பது ஞானம். இவ்வாறு ஆன்மாவின் படிமுறை வளர்ச்சியை மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இதே கருத்தைக் கூறும் பாடல் எண் 138
"திருவடியே சிவம் ஆவது தேரில்
திருவடியே சிவ லோகம் சிந்திக்கில்
திருவடியே செல்கதி அது செப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளி வார்க்கே".


இப்பாடலின் பொருள் "ஞானாசிரியனின் இரு பாதக் கமலங்களே சிவம் என்பதை அறிந்துணர்ந்தால் அத்திருவடிகளே சிவலோகம் ஆகும். ஆழமாக அத்திருவடி அருளைச் சிந்தித்தால் ஆன்மா செல்லவேண்டிய பாதைக்கு அது வழிகாட்டும். அத்திருவடிகளே தஞ்சம் அடையத்தக்க புகலிடம் ஆகும் என்பதை உள்ளத் தெளிவுடைய ஞானிகள் உணர்வார்கள்" என்பதாகும்.

தமிழ் -யேர்மன்
Nietharshan Magendiran
Vereidigter Dolmetscher und übersetzer
Tamil-Deutsch
Möbil: + 49 176 311 328 73
Email: nietharshan.magendiran@gmail.com

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!







# துன்புறுவாரல்லர் தொண்டு செய்வாரே

தொண்டு செய்பவர்கள் முழுமனதுடனும் பிறர்நலத்துடனுமே பணியாற்றுவார்கள். அவ்வாறு செய்யாவிடின், அது தொண்டுப் பணி ஆகாது. தொண்டுப்பணி இறைவழிப்பட்டது. ஏனெனில் தொண்டு செய்பவர்கள் அருகிலே இறைவன் எப்போதும் உடனிருப்பான். இதனை ஒரு சிறிய வரலாறு ஊடாகப் பார்க்கலாம். நபிகள் நாயகம் மிகச் சிறந்த தொண்டுப்பணியாளராகவும் இருந்தார்.

ஒரு நாள் அவர் தன்னுடைய அடியவருடன் ஓரிடத்திலே சமூகப் பணி ஆற்றும் வேளையில் ஏதோ காரணத்துக்காக ஒரு குழுவினர் இவர்களைத் துரத்தத் தொடங்கினர். நபிகளாரும் அடியவரும் வேகமாக ஓடிச் சென்றனர். ஓடிப்போகும்போது அடியவர் திரும்பிப் பார்த்துவிட்டு "பெருமானே! அவர்கள் அருகே வந்துவிட்டனர்" என்றார். அதற்கு நபிகள் நாயகம் "நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நாங்கள் மூவரும் பாதுகாப்பாக ஊர் எல்லையைத் தாண்டிவிடுவோம்" என்றார்.

தொடர்ந்து ஓடினார்கள். மீண்டும் அடியவர் திரும்பிப் பார்த்துவிட்டு "பெருமானே! அவர்கள் அருகே வந்துவிட்டனர்" என்றார். நபிகள் நாயகமும் "நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நாங்கள் மூவரும் பாதுகாப்பாக ஊர் எல்லையைத் தாண்டிவிடுவோம்" என்று மீண்டும் சொன்னார். அவர்கள் பாதுகாப்பான இடத்துக்குச் சென்றுவிட்டனர். அப்போழுது அந்த அடியவர் "பெருமானே! நாங்கள் இருவர்தானே ஓடிவந்தோம். ஆனால் நீங்கள் இரண்டு தடவை 'நாங்கள் மூவரும்' என்று கூறினீர்கள்." அதற்கு நபிநாயகம் "நாங்கள் தொண்டு செய்ய சென்றபடியால் இறைவனும் எங்களுடன் இருந்தார். நாங்கள் ஓடும்போது அவரும் எங்கள் கூடவே வந்தார்" என்றார்.

இதனையே திருஞானசம்பந்தரும் இறை அருளாலே தொண்டு செய்பவர்கள் ஒருபோதும் துன்புறமாட்டார்கள் என்று கூறியுள்ளார். அவர்கள் அன்புறு சிந்தையும் ஆவது அறிபவராகவும் உள்ள திருத் தொண்டர் என்பதை நாம் உணரமுடிகின்றது.



# சித்திரைப் பெண் வருகிறாள்

முனைவர்
மனோன்மணி சண்முகதாஸ்

தமிழரது பண்பாட்டில் காலம் பற்றிய கருத்து மிகவும் இன்றியமையாதது. பொழுதுகளின் மறைவும் நாட்களின் கடப்பும் கணக்கிடப்பட்ட முறைமை தனித்துவமானது. இரவு, பகல் என்னும் இரு பொழுதுகள் மனிதனால் நன்கு உணரப்பட்டவை. கதிரவன் வரவும் மறைவும் பகற்பொழுதை வரையறை செய்தன. நிலவின் தோற்றமும் மறைவும் இரவுப் பொழுதை வரையறை செய்தன. இதனால் கதிரவனும் நிலவும் ஒளிதரும் இயற்கையின் இரு பெரும் சுடர்களாக விளங்கின. மின்சாரம் கண்டுபிடிப்பதற்கு முன்னர் இவ்விரு சுடர்களுந்தான் மனிதனுக்கு ஒளி தரும் நல்ல விளக்குகளாக அமைந்திருந்தன.

இவற்றுள் கதிரவனின் இயக்கம் காலத்தின் நீட்சியைக் கணக்கிட உதவியது. ஓராண்டு என்ற காலக் கணிப்பு இதன் மூலம் வரையறை செய்யப்பட்டது. பண்டைத் தமிழரின் வானியல் பற்றிய அறிவு இக் கணிப்பை வழங்கியது. இயற்கையின் இயல்பை ஊன்றிக் கண்காணித்துப் பெரும் பொழுதுகள் ஆறாக வகுக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று இளவேனில். இக்காலம் மென்மையான வெப்பமும் தண்மையும் கொண்டது. ஆண்டின் தொடக்கமாகத் தமிழர் பண்பாட்டில் தைத் திங்கள் விளங்கியது. தைத்திங்களைத் 'தை மகள்' என்ற சிறப்புப் பெயர் கொண்டு தமிழர் அழைத்தனர். ஒரு பெண் குழந்தையின் பிறப்பு வீட்டிற்கு மிகுந்த மகிழ்ச்சி தரும். இல்லத்தை ஆள்வதற்கு ஒரு அரசி பிறந்துவிட்டாள் என்ற பெருமை. அதே போன்று தைத்திங்களின் வருகையும் ஒரு மகிழ்ச்சி தரும் காலமாகும். நீண்ட பனிப் பொழிவும் குளிரும் கழிய வெப்பமான கால நிலையின் தொடக்கம் ஆக எல்லோரும் எதிர்பார்த்திருக்கும் இனிய காலம் அது. அதனால் ஆண்டின் தொடக்கத் திங்களாக புத்தாண்டின் பிறப்பு நாளாகத் தைத் திங்களின் முதல் நாள் தமிழர்களால் கொண்டாடப்பட்டது.

அந்த வகையில் சித்திரைத் திங்கள் ஆண்டின் நான்காம் திங்களாக அமைந்துள்ளது. தைத் திங்கள் தொடக்கம் சித்திரைத் திங்கள் முதல் நாள் வரை இயற்கையின் காலநிலை மெல்ல மெல்ல வெம்மையாகும். 'வேனில்' என்ற சிறப்பான தமிழ்ச் சொல் வெம்மையைக் குறிக்கும் சொல்லாகும். இச்சொல் 'வேய்' எனும் அடிச்சொல் கொண்டு அமைந்தது. வேய்தல் என்றால் 'கவித்தல்' என்ற பொருள். கதிரவன் ஒளி வந்து கவிதலால் வெப்பம் பரவுகிறது. அதனையே கோடை என்றும் குறிப்பிடுவர். சித்திரைத் திங்களில் காலநிலை மென்மையான வெப்பமடைவதால் வானம் கொத்துக் கொத்தாக முகில்களைக் கொண்டிருக்கும். அக் காட்சி ஓர் அழகிய சித்திரம் போலிருக்கும். 'வேனில்' என்ற சொல் ஒப்பனை, பொலிவு, அழகு எனும் பொருளையும் தருவதற்கு இதுவும் ஒரு காரணம் எனலாம்.

எனவே இத்திங்களில் இயற்கையின் எழிலுருவையும் காணலாம். வேம்பு, மா போன்ற பெரு மரங்கள் பூத்துக் குலுங்கும். செடி கொடிகளும் புதிய தளிர்களுடனும் கொத்து மலர்களுடனும் அழகாகக் காட்சி தரும். இது ஓர் அழகிய பருவப் பெண்ணின் தோற்றத்தைத் தரும். 'சித்திரைப் பெண்' தைமகளின் வளர்ந்த தோற்றமாகவே இருக்கிறாள். அவளுடைய தோற்றச் சிறப்பால் சித்திரைப் புத்தாண்டு என்னும் நடைமுறை ஏற்பட்டது. இத்திங்களில் நிலவின் குளிர்மை அதிகமாயிருக்கும். இக்காலத்தில் 'சித்திரைக்கார்' என்னும் சிறப்பான நெல் அறுவடை செய்யப்படும். அதனால் அந்நெல் கொண்டு 'சித்திரைப் பொங்கல்' எனும் சிறப்பான பொங்கல் நடைபெறும். கதிரவனுக்குப் பொங்கல் மடையிட்டு வழிபடும் நடைமுறையும் சில கிராமங்களிலே இன்னும் வழக்கில் உள்ளது.

தைப்பொங்கல், சித்திரைப்பொங்கல் என இரு சிறப்பான பொங்கல் விழா ஈழத்தில் இன்னமும் கொண்டாடப்படுகிறது. ஜப்பானிய நாட்டிலே வேனிற்காலம் ர்யுசுரு என அழைக்கப்படுகிறது. வெம்மையும் அழகும் கொண்ட இக்காலத்தை மக்கள் ஆவலுடன் காத்திருப்பர். தைத்திங்களை ஆண்டுப் பிறப்பாக இன்றும் நினைவு கூரும் ஜப்பானியர் இளவேனிற் காலமான சித்திரைத் திங்களையும் விழாவாகக் கொண்டாடுவர். அதுபோலத் தமிழர் பண்பாட்டிலும் தைமகளும் சித்திரைப் பெண்ணும் காலத்தின் வரவைக் காட்டிநிற்கிறார்கள்.



# மலைக்க வைக்கும் மலையகம்



விக்கி விக்னேஷ்
சூரியன் FM செய்தி தொகுப்பாளர்

வெளிநாடோ, உள்நாடோ... மலையகத்துக்கு சுற்றுலா செல்ல எத்தனிக்கும் ஒவ்வொரு பொழுதும் முதலில் நினைவுக்கு வருவது உலக முடிவு..

பதுளை மாவட்டத்தின், ஒஹிய என்ற பிரதேசத்தை ஊடறுத்து ஹோர்ட்டன் ப்ளேன்ஸ் என்ற பகுதியில் உள்ள பள்ளத்தாக்கே உலக முடிவெனப்படுகிறது.
மலையகத்தில் இருக்கும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்தது இந்த தளம்... அதற்கு ஏற்ற அபாயமும், அமைதியும் ஒருங்கே அமைந்த இடம்... இது குறித்து அதிகம் கேள்வியுற்றிருக்க கூடும்..

இந்த அழகான, வியப்பான பகுதிக்கு சுற்றுலா செல்லும் வழியில்தான் இன்று நாம் பார்க்கப் போகின்ற பிரதேசமும் அமைந்திருக்கிறது.






ஒஹிய புகையிரத நிலையத்தில் இறங்கி, மேல் நோக்கி செல்லும் கறுத்த வீதியில் சிறிது தூரம் நடந்தால், நடையை நிறுத்த வேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு அங்கு நிலவும் குளிர்ச்சியான காலநிலையும், அதனிலும் குளிர்ச்சியான இயற்கை வளங்களும் எம்மை வியாபித்துக் கொள்ளும்.

பாதையின் இரண்டு பக்கங்களிலும் நிறைந்த உயரமான மரங்கள், விசித்திரமான பூக்கள், இடைவெளிக்கு இடைவெளி சலவலவென்று கடக்கும் சிற்றாறுகள், தலைக்கு மேலே சிறிது உயரத்தில் தாவிப் பறக்கும் குரங்குகள் என்று அந்த பிரதேசம் ஒருவகையான அச்சத்தை தந்தாலும், அச்சத்தை தவிர்த்தால், ரம்யமான ஒரு மனோநிலையை ஏற்படுத்திவிடும்.

அந்த மனநிலைக்கு பெயர்தான் அமைதி... இந்த தனிவழிப் பாதை ஒரு இடத்தில் பிரியும்..


வலது பக்கமாக போனால் அனைவரும் ரசிக்கும் உலக முடிவு..
இடதுபக்கமாக திரும்பினால், நான் கூறவரும் ஒரு பிரதேசம்..

அந்த பிரதேச மக்களால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்ற ஒரு அழகிய பாதை...
உலக முடிவை காண செல்லும் யாரும், இந்த பிரதேசத்தை நோக்கி நகர்ந்திருக்க வாய்ப்பில்லை.
ஒரு இருண்ட பாதையின் வழியே நடந்து சென்று, ஊரை விழிக்கும் போது, கண்களைக் கட்டிக் கொண்டே நடந்து சென்று, திடீரென காட்சிகளை திறந்துவிட்டது போன்ற ஒரு உணர்வைத் தரும்.

இந்த சூழ்நிலையில் இருந்து திரும்ப மனம் வராது.

2008ம் ஆண்டில் ஒருமுறை அங்கு ஏற்பட்ட வெள்ளத்தின் போது, களநிலவரங்களை அறிவதற்காக ஒரு புகைப்பட ஊடகவியலாளனாக அங்கே சென்றிருந்தேன்..
அங்கு எடுக்கப்பட்ட ஒருசில புகைப்படங்கள் மட்டும்தான் என்னிடம் இருக்கின்றன.
100க்கும் அதிகமான குடும்பங்கள் வாழும் இந்த பகுதி மூன்று திசைகளிலும் மலைகளால் மூடப்பட்டுள்ள ஒரு மிகப்பெரிய சரிவு..

மேலும் கீழும் ஆபத்துகளை கொண்ட ஒரு தமிழ் கிராமம்..



தொடரும்.... Vetti+4

Lebara play
150 க்கும் மேற்பட்ட டிவி அலைவரிசைகள், 3000திற்கும் மேற்பட்ட திரைப்படங்கள்
99 €
KERVEN GMBH
Rheinische Str.64 | Dortmund : DE
www.kerven-gmbh.com
E-Mail:info@kerven-gmbh.com
Germany Tel :0231 17721820 Mob: 0173 8048 459
France Tel: 09 77 18 59 11 Mob: 0754 11 20 20
UK : 0208 123 7558 Mob: 075 34 037 670
Miss it? Love it? Play it?
ANDROID APP ON Google play
100% LEGAL
HD/SD QUALITY
அனைவருக்கும் எங்கள்
இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## மலைக்க வைக்கும் மலையகம்

Vetti+3 பக்கத் தொடர்ச்சி

தேயிலையே அங்கும் பிரதானத் தொழில் எனினும், பெரும்பாலும் விவசாய செயற்பாடுகளை காணக்கிடைத்தது.



அதன் பெயர் "உடவேரிய."

அதி உச்சக்கட்ட வறுமையிலும், ஆபத்திலும், பின்தங்கிய நிலையிலும் இருக்கும் ஒரு கண்டுகொள்ளவேப்படாத கிராமம்.
மலையின் உச்சியில் ஒரு கல் உருண்டாலும், அடிவாரத்தில் சற்றே மண் அசைந்தாலும், அங்குள்ள 100க்கும் அதிகமான குடும்பங்களின் உயிர்களும் ஊசலாடும்.

தேயிலை செயற்கையாகவே அங்கு நடப்பட்டிருந்தாலும், மலையகத்தைப் பொருத்தவரையில் அதுவும் இயற்கையோடு இயற்கையாகவே மாறிப் போய்விட்டது.
அங்குள்ள மக்களின் வாழ்வியல் மிகவும் கவலைக்கிடமானதாக இருக்கும்.

வைத்தியசாலை முதல், வாக்குச்சாவடி வரையில் எல்லாமே அதிக தூரம்.

ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிக்க சுமார் 5 கிலோமீற்றர்கள் தூரம் கடந்த செல்ல வேண்டும். இவ்வாறு நடக்க வேண்டிய பாதை சாதாரண வீதிகள் அல்ல.. மிருகங்களும், திடீர் புயல்களையும் கொண்ட காட்டுவழி..

இந்த பாதையில் பேய்முனை என்றொரு பகுதி உண்டு.

குறிப்பிட்ட இடைவெளிக்கு ஒரு முறை அங்கு ஏற்படும் கடும் காற்று, பாரிய வாகனங்களைக்கூட சாய்த்து பளத்தில் தள்ளிவிடும் பலம்கொண்டது.

இதனை கடந்து மாணவர்கள் செல்வது இலகுவானதில்லை. இந்த பகுதி அரசியல் வாதிகளாலேயே புறக்கணிக்கப்பட்ட ஒரு பகுதி.
வெட்கக்கேடாக தேர்தல் சமயங்களில் மாத்திரம் அங்கு செல்வோரை பார்த்திருக்கிறேன்.
நான்கூட அப்படி ஒரு சமயத்தில்தான் செல்ல கிடைத்தது.
நீர், நிலம், வாயு, நெருப்பு மற்றும் வானம் ஆகிய ஐந்துமே அங்கு அழகாவும் தெரியும், அதேசமயம் அங்குள்ள மக்களுக்கு மாறிமாறி ஆபத்துகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும்.
நான் செல்லும் வழியில் ஒரு சிறுவனைக் கண்டேன்.. அவன் ஆரம்ப பாடசாலைக்கு கூட போனதில்லை. ஏன் என்று கேட்டேன்.. அவன் சொன்னான்.. "அப்பா சொன்னாரு, அஞ்சாம் வகுப்புக்கு பிறகு படிக்க அங்க ஸ்கூல் இல்ல. பிறகு எதுக்கு சும்மா ஸ்கூலுக்கு போய்கிட்டு. வீட்டில இருந்து வேல செய்யி…"






## இளங்கலைஞர்களை ….

vetti +1 பக்கத் தொடர்ச்சி

நாட்டியம் கற்கும் ஆண்களுக்கு பெண்களின் பாவனை தொற்றிக் கொள்வதாகக் கூறுகிறார்களே அது உண்மையா?இது தவறான கருத்தாகும். நடனத்தினைக் கற்றுக் கொள்ளும் ஆண்களுக்குப் பெண்களைப் போன்ற இயல்புகள் தொற்றிக் கொள்ளும் என்ற சொல்ல முடியாது. சில ஆண்கள் அப்படிப் பழக வேண்டும் என விரும்பிச் செயல்பட்டாலே தவிர நடனம் பயில்வதால் பெண்தன்மை தொற்றிக் கொள்ளாது.







நடனத்தினைக் கற்றுக் கொள்ளும் ஒருசில ஆண்கள் அர்ப்பணிப்புடன் விரும்பி கற்றுக் கொள்வார்கள். அவ்வாண்கள் நடன பாவத்தினை அடிக்கடி பயிற்சியை மேற்கொள்வார்கள். இதனாலும் அவர்களைப் பார்க்கும் நடனக்கலைஞர் அல்லாதவர்கள் இப்படியாகத் தவறாகப் புரிந்து கொள்ளலாம். இதே போன்று நடனக் கலையில் அதிகமாகப் பெண்கள்தான் கற்றுக் கொள்வார்கள். அவர்களுடன் இவ்ஆண்கள் அதிக நேரம் பழகுவதினாலும் நடனப் பயிற்சிகளில் ஈடுபடுவதனாலும் பெண் பாவனை அவர்களிடத்தே உள்ளது போன்ற ஒரு மயக்க நிலை தோன்றலாம். பெண்களும் நாயக பாவங்களை அபிநயிக்கிறார்கள். அதனால் அவர்களிடம் ஆண்தன்மை தொற்றிக் கொள்வது இல்லையே. பாத்திரத்திற்கேற்றவாறு உணர்ந்து அனுபவித்து பாத்திரமாகவே மாறுதல்தான் நாட்டிய நிகழ்வின் வெற்றிக்கு வழிகோலும்.




# இப்படியும் மாறலாம் எதிர்காலம்.



ஆக்கம் : DJ வினோ Borken



மாடி வீடும் மாளிகையோடும் கற்பனை செய்து வைத்துள்ள எதிர்காலம், சில வேளைகளில் எம் கற்பனைக்கு நேர் எதிராக மண் குடிசையும் மணல் வெளியுமாக மாற 50மூ வாய்ப்புக்கள் உண்டு. மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கு எம் தமிழ் இனமே ஒரு அருமையான ஆதாரம் ஆகும். புஷ்பக விமானத்தில் சென்ற எம் இலங்கை மன்னன் இராவணனே இலங்கை தீவாக இருக்கும் போதே ஆட்சி புரிந்தான் என்று எம் வரலாற்றுக் கதைகள் கூறுகின்றன. இலங்கை என்பது ஒரு பெரும் கண்டத்தின் மிகுதி அப்பெரிய கண்டம் இந்து சமுத்திரத்துள் இன்றும் உறங்கிக் கொண்டுள்ளது என்று பல கதைகள் தினமும் வந்தாற் போல் இருந்தாலும், ஆதாரம் காட்ட அடியேன் கற்ற வரையில் அவ் ஆதாரத்தை கண்டறியாத காரணத்தால், நேரடியாக தலைப்பிற்கே செல்வோம்.

இன்றைய ஆடம்பர வாழ்வில் எம் அனைவருக்கும் ஒரு அழகிய வீடு, அன்றாட வேலைக்குப் பயணிக்க போக்குவரத்துச் சாதனம், இதன் பின்பே உணவும், உறவுகளும் என்று ஆகிவிட்டது. மனத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்க, பொழுது போக்கு ஊடகங்கள் என்று மனிதன் மாற்றங்களை உருவாக்கி, தான் மாற்றில்லா சக்தி ஆகிவிட்டதாக கற்பனையில் உள்ளான். இவ் அனைத்துக் கண்டுபிடிப்புக்களும் மின்சாரம் இல்லாவிடின் இயங்காது என்றால் மனிதன் பலவீனமானவனா? இல்லையா? என்று சற்று யோசிக்கவும். இதுவே எம் முதலாவது பலவீனம்.

i Phoneஐக் கையில் கொடுத்தால் பயன் படுத்தத் தெரியும், பழுதானால் அதைப் பழுதுபார்க்கத் (அப் பழுதைப் பார்க்கத்) தெரியும். இவ்வாறே நாம் ஒவ்வொரு சாதனங்களையும் பயன் படுத்துகின்றோம். எவரோ ஒருவரின் கடின உழைப்பை எமது சரளமான பயிற்சி மூலம் பயன் படுத்துகின்றோம். இதுவே இரண்டாவது பலவீனம். இவ்வாறு அறிவியல் பற்றி அறியாமல் இருக்கும் எம்மைச் சுற்றி பல பலவீ னங்கள் சூழ்ந்துள்ளது.

கற்பனா சக்தி என்ற ஆறாம் அறிவைக் கொண்டு சற்றே முன்எச்சரிக்கையாக யோசித்துப் பார்க்கவும். எம் எதிர்காலம் ஏதோ ஒரு பெரிய அழிவில் சிக்கி அனைத்து வளமும் அழிந்து விட்டால், சாதனங்கள் இருப்பினும் அதை இயக்க மின்சாரம் இருக்காது. விஞ்ஞானிகள் எவரும் இல்லாத உலகில் நீங்கள் மட்டும் தனியே ஒரு விஞ்ஞான ஆற்றல் இல்லாத ஒரு தொகை மக்களுடன் மிகுதியாக வசிக்கும் நிலை வரின், உங்களைச் சுற்றி உடைந்த இலத்திரனியல் சாதனங்கள் இருக்கும் ஆனால் அதை திருத்தத் தெரியாது. அனைத்து தேவையான சாதனங்களும் இருக்கும் அவற்றை இயக்கத் தெரியாது.

இவ்வாறே உங்களுக்கு அடுத்ததாக வரும் சந்ததிகளும் அவற்றைப் பற்றிய தகவல்களை காதுவழியாகத் தகவலாகக் கேட்டும், ஒரு சில உடைந்த சாதனங்களைப் பார்வையிட்டும் வளரும், அதற்கு அடுத்த சந்ததிக்கு அந்த வாய்ப்புக் கூட கிடைக்காமல் போகலாம்.

இப்போது விளங்குகின்றதா? எப்படி இராவணன் புஷ்பக விமானத்தில் பயணித்திருப்பான் என்று. புஷ்பக விமானத்தில் பயணித்த இராவணனைப் போல், விண்வெளிக்குச் சென்ற எம் விஞ்ஞானிகளை நாளை வரலாற்றுக் கதையில் வரும் கற்பனைக் கதாபாத்திரமாக எம் எதிர்கால மக்கள் படிப்பதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கின்றது.



இராவணன் கதை மட்டும் அல்லாமல், எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத பல கதைகள் உண்டு. வெறும் கண்ணால் வேற்றுக் கிரகங்களை கண்டு சாதகக் கணக்கை வகுத்தமை, சத்திர சிகிச்சை செய்த சித்தர், கூடுவிட்டு கூடுமாறும் கலை, பஞ்ச பூதங்களைக் கட்டுப் படுத்தல் என்று அனைத்தையும் ஆன்மிகம் என்ற கண்ணோட்டத்தில் பார்வையிடும் தொழில்நுட்பவாதிகள் மறுப்பதால், நம்ப முடியாத கற்பனைக் கதைகளாக மாறிவிட்டது.

நாளைய எதிர்காலம் எம் திறமையை மறவாது இருக்க விரும்பினால், இப்போதே அடிப்படை விஞ்ஞான அறிவைப் படித்து வளர்த்துக் கொள் ளுங்கள்.அத்தனையும் கைகூடும் ஆரம்பிக்க ஆசைப் பட்டால்.


## 1950 இருந்து இன்றுவரை வெற்றிமணி யின் பொக்கிஷங்கள்

அந்தக் காலத்தை தரிசிக்கலாம்.



1609

**உலகில் முதலாவது பத்திரிகை 1609 யேர்மனி**



இலங்கையில் முதலாவது சிறுவர் மாத இதழ்1950

உங்களுக்கு தெரியுமா?

— செல்வி. எம். அப்பாஸ் —

1. எந்த நாட்டில் எந்த நதியில் விக்டோறியா நீர்வீழ்ச்சி உள்ளது?
   ஆபிரிக்க நாட்டில் சாம்பிஸி நதியில்.
2. ஐக்கிய நாட்டு சபையின் பொதுக் காரியதரிசி யார்? எந்த நாட்டவர்!
   ஊத்தாண்ட். — பர்மா நாட்டவர்.
3. முதன் முதல் விண்வெளிக்குச் சென்ற ரஷ்யப் பெண் மணி யார்? வயதென்ன?
   வெலன் டினு டிரேஷிகோ — 22 வயது.
4. முதன் முதலில் பத்திரிகை எந்த நாட்டில், எந்த ஆண்டில் வெளிவந்தது?
   ஜேர்மன் தேசத்தில், 1609 - ம் ஆண்டு.
5. பென்சிலின் எந்த ஆண்டு யாரால் கண்டு பிடிக்கப் பட்டது.
   1928 ல் அலெக்சாண்டர் பிளேமிங். 15.9.1970

யேர்மனியில் பிராங்பேட் நகரில்

JAFFNA BASAR

உரிமையாளர்: நடராஜா சுதன்

Tel: 069 25 62 63 53

மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்

ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்

Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main






நெடுந்தீவு முகிலனின்

## கதையும் கவிதைகளும் 5



கதை

# காற்சட்டை

கந்தையா மாமாவின் தேனீர் கடையின் இருக்கையில்
அண்ணாந்து கொண்டிருந்த ஆணி ஒன்று...
என் அப்பா ஆசையாய் வாங்கித் தந்த காற்சட்டையின்
பின் பக்கத்தை பலவந்தமாகக் காயப்படுத்தியது.

கைகளால் கட்டுப் போட்டுக்கொண்டு வீட்டுக்கு
வரும் வழியில் - என் பின்னால்
வந்து கொண்டிருந்த பருவப் பெண்களின் கண்கள்
என் பதட்டம் தெரியாமல் சிரித்துக் கொண்டன.

ஓட்டமும் நடையுமாய் வந்து ஆவேசத்தில் கழற்றினேன்

ஆயிரம் திட்டுகளுக்கு பின்புதான் அம்மா கையிலே எடுத்தாள்.

பிறந்த வீட்டில் இருந்து சீதனமாய் கொண்டுவந்து பத்திரமாய்
பொத்தி வைத்திருந்த தையல் ஊசியும் பத்துப்போட்ட
களைப்பில் செத்துப்போனது.

சித்திரம் போட்ட அந்த அழகோடு
பலமுறை பட்டணமும் போய்ப்போய் வந்தேன்

வெயில் பொசுக்கி விடுமென காற்றில் உலரவிடுவேன்.

பெரும்பாலும் திருநாட்களிலே பாவனைக்கு உப்படுத்தினேன்

தேசிய உடை என்று... ஊரில் பட்டமும் வாங்கினேன்

பெரியவனான போதும் பாதுகாத்தேன்.

இப்போது என் மனைவி குப்பையில் தூக்கி வீசுகிறாள்

ஆனாலும் யாருக்கும் தெரியாமல் பத்திரமாய்
பொத்திவைத்திருக்கிறேன் அப்பாவின் பழய ஞாபகத்தை..



## கவிதை - நானும் அவளும் செருப்பு போன்றவர்கள்.

நீ வரும் வரை காத்திருக்க பழகிய செருப்புகள் என் தவிப்பை ஒரு போதும் உனக்கு எடுத்து கூறாது...

நீயும் நானும் இந்த காலணிகள் போலவும் இதுவரை நெருங்கியும் இருக்கவில்லை....

உன் ஞாபகமாய் உன் பாதணிகளை களவாடி கொள்வதற்கு மனசுக்கு பிடிக்கவில்லை...

இதை சாட்டாக வைத்து யாரேனும் அவசரமாய் புது காலணிகளை உனக்கு பரிசளிக்க கூடுமே...

உன் பாதணிகளின் ஸ்பரிசத்தால்
என் தேடுதல் ஓரளவு நிறைவுக்கு வந்தது.

நீ உள்ளே இருப்பதை காட்டிகொடுத்தது ஒட்டி பிறந்த குழந்தைகளாய் ஒட்டிக்கிடந்த உன் காலணிகளே...

சங்கீத வகுப்போ வழிபாட்டுக்கான ஒன்று கூடலோ
ஏதோ ஒன்று அந்த அறைக்குள் வணக்கத்துக்குரியதாய் ஒப்பேறிக்கொண்டிருக்கிறது.

உன் பாதங்கள் பட்டு பூமி பெறப்போகும் பாக்கியத்தை இந்த பாதணிகள் பங்கிட்டுக் கொண்டிருக்கிறது.



ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Milin Impex GmbH
தமிழர்களுக்குத் தேவையான எல்லா உணவுப்பொருட்களின்
மொத்த மலிவு விற்பனையாளர்கள்
Dortmund
நகரில்

Geschäftszeiten: Dienstag, Mittwoch, Freitag 10:00
bis 19:00 UhrMontag & Donnerstag 07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 UhrSonn.
und Feiertags: Geschlossen
இனிய தமிழ்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
மேலதிக விபரங்களுக்கு
Web :www.milinimpex.de
பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288



## மீண்டும் காத்திக் தமனா

வம்சி இயக்கத்தில் கார்த்தி, நாகர்ஜுனா, தமன்னா நடித்திருக்கும் படம் தோழா. சமீபத்தில் வெளியான இப்படத்தின் முன்னோட்டம் ரசிகர்களின் மனம் கவர்ந்து மாபெரும் வரவேற்பைப் பெற்றது. காத்திக் தமனா ஜோடி பையா படத்திற்கு பிறகு ஒரு கலக்கலான ஜோடி. காத்திக் தமனா ஜோடி அன்று கமல் - ஸ்ரீதேவி ஜோடிபோல் பேசப்பட்ட ஜோடி. இந்நிலையில் தற்போது இந்த முன்னோட்டம் யூ டியூப் தளத்தில் ஒரு மில்லியன் ஹிட்ஸை பெற்று அசத்தியுள்ளது.




## கதை நல்லாத்தான் இருக்கு ஆனால்...

முன்பெல்லாம் மேடை ஏறினால் நாலு வார்த்தை பேசிவிட்டு சட்டென்று இறங்கிவிடுவார் விஜய். ஆனால் ஒரு கட்டத்தில் மைக்கைப் பிடித்ததும் குட்டிக் கதைகள் சொல்ல ஆரம்பித்தவர், இப்போதும் தொடர்கிறார். கதை சொல்வதோ, அதிக நேரம் பேசிவதோ தப்பில்லை. ஆனால் தப்பில்லாமல் பேச வேண்டும் அல்லவா...

கடந்த மாதம் நடந்த தெறி இசை வெளியீட்டு விழாவில் விஜய் சொன்ன ஒரு குட்டிக் கதை. இது... "ரஷ்ய முன்னாள் அதிபர் மாவோ சாலையில் போய்க்கொண்டிருக்கும்போது, ஒரு சின்ன பையன் தலைவர்கள் படத்தை வைத்து விற்றுக்கொண்டிருக்கிறான். அந்தப் பையன் வச்சிருந்த எல்லாப் படமும் மாவோ படமாகவே இருந்துச்சி. உடனே மாவோ, கர்வத்தோட அந்த சின்னப் பையனைக் கூப்பிட்டு, "என்ன தான் என் மேல பாசம் இருந்தாலும், மற்ற தலைவர்களோட படத்தையும் சேர்த்து விக்கவேண்டும் என்று சொல்லிருக்கிறார். உடனே அந்தப் பையன் சொல்லிருக்கிறான், மற்ற தலைவர்கள் படமெல்லாம் வித்து முடிந்துவிட்டது. உங்கள் படம் தான் இன்னும் விக்கவில்லை! என்று. என் ரசிகர்களாகிய நீங்களும் கர்வமில்லாம இருந்தா மட்டும் தான் பெரிய உயரத்தை அடையமுடியும்". இதைக் கேட்டதும், அரங்கிலிருந்த பலரும் "மாவோ ரஷ்யத் தலைவரா, சீனத் தலைவரா... பாவம் அவரே கன்பியூஸ் ஆகிட்டாரு" என்று காவலன் பட வடிவேலு பாணியில் கமெண்ட் அடித்தனர்.

### விஜய் சொன்ன குட்டிக் கதை 2

தெறி இசை வெளியீட்டு விழாவிலும் ஒரு சின்ன கதை சொன்னார். நாம் நிறைய தொலைக்காட்சிகளில் பார்த்திருப்போம். ஒரு புலி மான் கூட்டத்தை துரத்திக் கொண்டு ஓடும். அப்போது அந்த புலி எல்லா மான்களையும் துரத்துவதை விட்டுவிட்டு, ஒரு குறிப்பிட்ட மானை மட்டும் இலக்காக வைத்துக்கொண்டு அதை வேட்டையாடி கொல்லும். அந்த புலிதான் கலைப்புலி. வெற்றி என்ற ஒன்றை மட்டுமே சினிமாவில் இலக்காக கொண்டு, அதை தேடிப் பிடித்து புலியாக வலம் வருகிறார். தொடர்ந்து வெற்றிப் பெற்று வருகிறார்," என்றார். இந்தப் படம் தாணு - விஜய் இணையும் மூன்றாவது படம். ஏற்கெனவே சச்சின், துப்பாக்கி படங்களை விஜய்யை வைத்து தயாரித்துள்ளார் தாணு.





## விஜய் சேதுபதி காட்டில் நல்ல மழை

அனேகன் படத்தை தொடர்ந்து கே.வி. ஆனந்த் இயக்கும் புதிய படத்தில் விஜய் சேதுபதி நாயகனாக நடிக்கவிருப்பதும் அவருடன் டி.ஆரும் இப்படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தன. தற்போது கிடைத்திருக்கும் சுவாரஸ்ய தகவலின்படி கடந்த 36 ஆண்டுகளில் வேறொருவர் இயக்கும் படத்தில் டி.ஆர் ஒரு முக்கிய வேடத்தில் நடிப்பது இதுவே முதல்முறையாம்.






உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
VALUTRANS MONEY TRANSFER
துரித பண
மாற்றுச் சேவை!
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
இனிய தமிழ்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com

Jasmine Silk House
தமிழ் புத்தாண்டு
புதுப் புது டிசைன்களின்
வரவுகளுடன் மாபெரும்
மலிவுவிற்பனை!
12.03.2016-18.04.2016
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
என்றும் மலிவாக தரமாக திருமணப்
பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள்,
பஞ்சாபிகள்,அனைத்தும் புத்தம்,
புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
T.Mohanadas
இனிய தமிழ்
புத்தாண்டு வாழ்த்துக்கள்

ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...
VALUTRANS MONEY TRANSFER
உரிமையாளர்:
பா.கணேஷ்
இனிய தமிழ்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

புதிய இலங்கை உணவகம்
Dortmund நகரில்...
NEW CEYLON IMBISS
தினமும் ஒரு சலுகை!!!
Tagesangebote
இலங்கை உணவை
சுத்தமாக சுவையாகச்
சுவைக்க நாடுங்கள்
இனிய தமிழ்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
புதன் விடுமுறை
திங்கள் முதல் செவ்வாய்
வரை மற்றும்
வியாழன் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும்
விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை
Tel: 0231 72 52 859
0171 6157 130
Annen Str.1
44137 Dortmund

வீட்டுக்கடன்: 1,3 % லிருந்து வங்கி கடன்: 1000 € = 1,65 € மாத வட்டி
SEFA 24
Mein Allfinanzberater
இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
நீங்கள் வீடு வேண்டப் போறீர்களா?
நீங்கள் வங்கிக் கடன் எடுக்க போறீர்களா?
இலவச ஆலோசனைக்கு எங்களை நாடுங்கள்!
எங்கள் வங்கிகள்:
COMMERZBANK Postbank Deutsche Bank DSL Bank
ING DiBa Sparkasse Volksbanken Raiffeisenbanken
0231 546 015 20
SEFA24 Sozial-Ethnische Finanzagentur GmbH | Rheinische Str. 85, 44137 Dortmund | 0231 546 015 20 | info@sefa24.de

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
StaR - Impex
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
இனிய தமிழ்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Kipper Str.3 44147 Dortmund Germany